# விளக்கம் அறிதலும் சுருக்கமும்

உயர்தர வகுப்புகளுக்குரியது

பதிப்பாளர்
பண்டிதர் க. இராசையா
வட்டுக்கோட்டை

# விளக்கம் அறிதலும் சுருக்கமும்

உயர்தர வகுப்புகளுக்குரியது

★

தொகுப்பு நூல்

★

பதிப்பாளர்
பண்டிதர் க. இராசையா
வட்டுக்கோட்டை

# பதிப்புரை

உயர்தர வகுப்புகளிற் கல்வி பயிலும் மாணவர்கள் தமிழ்ப் பாஷையில் நன்கு பயிற்சிபெறுவதற்கு உதவியாகச் சிறந்த பயிற்சி நூல்கள் இருத்தல் மிக இன்றியமையாதன. உயர்தரவகுப்பு மாணவர்கள் தாம் கற்கும் இலக்கியத்தை நன்கு விளங்கவும் பிரதான அம்சங்களை உபயோகப் படுத்தவும் ஆற்றல் உடையவர்களாக வேண்டுமென்பது ஆன்றோர் துணிபாகும். அதற்கேற்ப அத்துறைகளில் மிக்க தேர்ச்சி பெறத்தக்கதாகவும், இக்காலப் பரீட்சை முறைகளுக்கு ஏற்றதாகவும் "விளக்கம் அறிதலும் சுருக்கமும்" என்னும் நூல் சிறந்த பல அறிஞர்களின் நூல்களினின்றும், பயிற்சிவினாக்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. உயர்தரவகுப்புக்களிற் பாஷையைக் கற்பிக்கும் பல ஆசிரியர்களது வேண்டுகோளுக்கிணங்க இந்நூல் தொகுக்கப்பட்டது. மாணவர்கள் தமது சுயபுத்தியும் சுய ஆற்றலும் கொண்டு ஆராய்ந்து கற்பதற்கு வழிகாட்டுவதுடன் மொழியறிவிலும் சிறந்த தேர்ச்சிபெறத் துணைபுரிவதே இந்நூலின் நோக்கமாகும்.

இந்நூல் நன்கு வெளிவருதற்குத் தங்கள் சிரமத்தையுங் கருதாது, மாணவர் நலன் கருதி அருந்துணைபுரிந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரித் தமிழ் சமஸ்கிருத விரிவுரையாளர் வித்துவான் இ. பாலசுப்பிரமணியம் B. A. (Hons) அவர்கட்கும், யாழ்ப்பாணம் இந்து மகளிர்கல்லூரி பொருளாதார விரிவுரையாளர் செல்வி இ. பத்மாவதி B. A. (Hons) அவர்கட்கும், கணித விரிவுரையாளர் செல்வி த. தனபாக்கியலட்சுமி B.A (Lond ) அவர்கட்கும், வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத் தலைமையாசிரியர் அ. சிவசுப்பிரமணியம் அவர்கட்கும் உதவிபுரிந்த ஏனைய ஆசிரிய அன்பர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

பண்டிதர் க. இராசையா
பதிப்பாசிரியர்.

வட்டுக்கோட்டை
19-9-63.

# மதிப்புரை.

## திருமதி பண்டிதை க. இராசேஸ்வரி அவர்கள் எழுதியது.

தேர்வுகளில் மொழியை ஒரு பாடமாக எடுப்பவர்கள் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். இதற்கேற்ற பயிற்சி நூல்கள் தமிழ்மொழியில் குறைவாகவே காணப் படுகின்றன. இவற்றுள்ளும் தேர்வுகளுக்கேற்ற பயிற்சிகள் கிடைத்தல் அரிதென்பது மிகையாகாது. இந்நிலையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திரத் தேர்வுக்கான "விளக்கம் அறிதலும் சுருக்கமும்" என்னும் நூலைப் பண்டிதர் க. இராசையா அவர்கள் தொகுத்து வெளியிடுதல் அவர் மாணவருக்குக் காலத்திநுற் செய்த உதவியாகும். பண்டிதர் அவர்களின் முயற்சி பாராட்டற்குரியது. இதனை ஆசிரியரும் மாணவரும் ஏற்றுப் பயன் பெறுவார்களாக.

"கந்தகோட்டம்"
வட்டுக்கோட்டை, 10-8-63

★

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்

## பண்டிதர் வி. நவரத்தினம் அவர்கள் எழுதியது.

மாணவர்கள் மொழிப் பயிற்சியைப் பெறுதலோடு பெற்ற அறிவைப் பதித்தலிலும் உரிய சந்தர்ப்பங்களில் பிரயோகித்தலிலும் திறமையான ஆற்றல் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். அறிதல், பதித்தல், பிரயோகித்தல் என்னும் மூன்று வல்லபங்களிலும் தக்க பயிற்சி பெறுதலிலேயே மொழி அறிவு பூரணத்துவம் அடைகின்றது. இவற்றை மனதிற்கொண்டு மொழி அறிவு வளர்ச்சிக் கிரமத்தை அநுசரித்து இரண்டாம் வகுப்பு முதல்எட்டாம் வகுப்புவரை ஒவ்வொரு வகுப்பிற்கும் பாஷைப்பயிற்சியும் விளக்கமும் என்னும் நூல்களை வெளிப்படுத்தித் தமிழ்

மாணவர்க்குப் பணியாற்றிய பண்டிதர் திரு. க. இராசையா அவர்கள் விளக்கம் அறிதலும் சுருக்கமும் என்னும் இரு பாடங்களிலும் மேல்வகுப்பு மாணவர்கள் சிறந்த அறிவைப் பெறுதற்கு "விளக்கம் அறிதலும் சுருக்கமும்" என்னும் நூலைத் தொகுத்து உதவியது ஆசிரியர்களும் மாணவர்களும் மனமுவந்து வரவேற்கத்தக்க சிறந்த பணியாகும். இக்காலப் பரீட்சை முறைகளைத் தழுவித் தொகுக்கப்பட்ட இந்நூல் உயர்தர வகுப்பு மாணவர்களது பரீட்சைப் பெறுபேற்றுக்கு மிகத்துணைபுரியும் என்பது எனது நம்பிக்கை.

இலக்கியம், பாஷை, சமயம், கணிதம், பொது அறிவு, விவேகம் என்னும் கலைத்துறை ஒவ்வொன்றிலும் பல நூல்களை எழுதி மாணவ உலகுக்குப் பணிபுரியும் பண்டிதரது சேவை என்றும் பாராட்டத்தக்கது.

*

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்
**பண்டிதர் அ. சண்முகநாதன் அவர்கள் எழுதியது.**

"எண்பொருள வாகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பதறிவு"

இலகுவாக விளங்கத்தக்கதாகப் பிறர்க்குத் தன் கருத்தை வெளியிடுதலும் பிறர் கூறும் அரிய கருத்துக்களைத் தான் இலகுவாக விளங்கிக் கொள்ளுதலும் ஆகிய இருவகை ஆற்றலும் உடையவரே மொழியறிவு பெற்றவராவர். அவ்வாற்றல்களை வளர்ப்பதற்குரிய பயிற்சிகள் மாணவர்க்கு அவசியம் வேண்டற்பாலன. அவ்வகையில் உயர்தர வகுப்பு மாணவர்க்குப் பெரிதும் உபயோகப்படத்தக்க பயிற்சிகளைத் தொகுத்து "விளக்கமறிதலும் சுருக்கமும்" என்ற நூலாக வெளியிட முன்வந்த பண்டிதர் க. இராசையா அவர்கள் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

சிறந்த பல நூல்களிலிருந்தும் சிரமத்துடன் தொகுக்கப்பட்ட பயிற்சிகள் கொண்ட இந்நூலைப் பயன்படுத்தி ஆதரிக்கவேண்டியது ஒவ்வொரு மாணவனதும் ஆசிரியனதும் கடமை என்பது எனது அபிப்பிராயமாகும்.

அரிச்சந்திரன் வாய்மை என்னும் சத்திய நெறியில் வழுவாது நின்றான்; பலவகையான சோதனைக்கு உட்பட்டான்; பதியிழந்தான்; பாலனையிழந்தான்; படைத்தநிதியிழந்தான். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக எல்லாவற்றையும் இழந்து ஈனத்தொழில் புரியுங்காலத்தும் சத்தியத்தை விடாது பற்றிநின்றான். தன்னைச் சோதித்த முனிவரை நோக்கி, "இனிநமக்குளதென நினைக்கும் கதிஇழக்கினும் கட்டுரை இழக்கிலேன்" என்றான். அதுகேட்ட முனிவன் மதியிழந்து, வாயிழந்து, மானமுமிழந்து சென்றான்.

என்று அரிச்சந்திரன் சரித்திரம் கூறுகின்றது. மனிதர்க்குரிய குணங்களிற் சிறந்தது பொறுமை என்பர். "உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தைக் காத்துக்கொள்ளும் குணமே குணம்" என்றார் ஒரு கவிஞர். "வெம்மை விளைப்பது கோபம். செம்மை விளைப்பது பொறுமை". இத்தகைய பொறுமை மனஉறுதியாலே வரும் பொறுமையின் தன்மையைத் தம் வாழ்க்கையிலே பொருந்தக் காட்டினார் இயேசுநாதர். தின்மை செய்தார்க்கும் நன்மைசெய்த இயேசுநாதரை "அருள்வள்ளல்" என்று போற்றியிருப்பது பொருத்தமுடையதன்றோ. அரிச்சந்திரனும் இயேசுநாதரும் அறநெறியிலே வைராக்கியம் பூண்டவர்கள்.

[தமிழ் விருந்து]

1. வைராக்கியமென்பது யாது?
2. மனத்திண்மை யுடையவர்களின் சிறப்பியல்புகள் எவை?
3. வாய்மையில் வழுவாது நின்ற அரசன் யாவன்? அவ்வரசனைப் பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
4. அரிச்சந்திரன் முனிவருக்குக் கூறியதென்னை?
5. அவ்வுரைகேட்ட முனிவனின் நிலைமையாது?
6. மனிதர்க்குரிய குணங்களிற் சிறந்தது எது?
7. பொறுமை எவற்றால் உண்டாகின்றது?
8. இயேசுநாதரை அருள்வள்ளல் என்று போற்றுவதன் காரணமென்ன?

## 3.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினக்களுக்கு விடைதருக:-**

வயனங்கோடு என்று ஒரூர் இருந்தது. அவ்வூரிலே பூதி என்னும் அந்தணன் இருந்தான். அவன் ஒரு நாள் ஒரு குழந்தையை ஒருதோட்டத்திலே கண்டான். அக்குழந்தைக்கு ஒருபசு பால்கொடுத்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட அந்தணன் வியப்படைந்து "ஆபுத்திரன்" என்னும் பெயரளித்து எடுத்துச்சென்று வளர்த்தான். அச்சிறுவன் வயதுவந்தபோது ஒருநாள் யாகத்திற்காகக் கட்டிவைத்திருந்த பசுவை அவிழ்த்து விட்டுவிட்டான். பசுவைக் கொன்று யாகம்புரிவது பாவமன்றோ! மேலும் அவனை ஆதரித்தபசு ஆகையால் அதன் உயிரைக் காப்பாற்ற அவ்வாறு செய்தான். அந்த ஊரிலிருந்த அந்தணர்களும், அவனை வளர்த்த தந்தையும் குலத்துரோகி என்றுவைது வெளியே போகும்படி துரத்திவிட்டார்கள்.

"என்ன கொடுமை! தானே முளைத்த புல்லை மேய்ந்து நமக்குப் பிறந்தது முதல் இறக்கும்வரையிலே பால்தரும் பசுவை, அறுத்து வேள்வி செய்வது புண்ணிய மென்று நினைக்கிறவர்களைவிடக் கொடியவர்கள் யார்? அந்தணர்களென்றால் அருளுடையோர் என்று பொருள். அருளுடையோர் என்றால் தம் உயிரைப் போலவே எல்லா உயிர்களையும் நினைப்பவர் என்று பொருள். அவர்கள் மற்ற உயிர்களுக்குத் துன்பம் வந்தால், உடனே விரைவாகச் சென்று நீக்குவார்கள். அதற்கு மாறாகப் பசுவைக் கொல்வாரா? அதற்கு உதவிசெய்தவனை ஓட்டிவிடலாமா? ஆபுத்திரன் மதுரைக்குச் சென்று வீடுவீடாகப் பிச்சையெடுத்துக் கிடைத்த உணவைத் தன்போன்ற ஏழையெளியவர்களுக்குக் கொடுத்துத் தானும் உண்பான். ஒருநாள் இரவில் வழிப்போக்கர்கள் பசியால் வருந்தினார்கள். அவர்களின் பசியைப் போக்கச் சிறிதும் உணவில்லாமையால் அவன் இருந்த சத்திரத்தில் உள்ள கலைமகள் கோயிலை அடைந்து, அதைக்

கூறி வணங்கினன். அப்போது கலைமகள் அமுத சுரபி யைக் கொடுத்து "நாடு வறுமையடைந்தாலும் இந்த ஓடு வறுமையடையாது. எப்போதும் உணவிருக்கும்" என்று கூறினள். அன்று முதல் அதன் உதவியால் கூன், குருடு, செவிடு, முடம் முதலானவர்களுக்கு வேண்டிய உணவை யளித்துக் காப்பாற்றினன்.

[மணிமேகலை]

1. ஆபுத்திரன் என்னும் பெயர்க்குக் காரணம் யாது?
2. ஆபுத்திரன் யாரால் வளர்க்கப்பட்டான்?
3. எதன் பொருட்டு வெளியே துரத்தப்பட்டான்?
4. ஆபுத்திரன் பசுவைக் காப்பாற்றியதற்குக் காரணங்கள் யாவை?
5. பசு எதற்காகக் கட்டிவைக்கப்பட்டிருந்தது?
6. அந்தணர் என்பதன் பொருள் யாது?
7. அருளுடையோர் எத்தன்மையுடையவர்?
8. ஆபுத்திரனுக்கு அமுதசுரபி எங்ஙனம் கிடைத்தது?
9. கலைமகள் ஆபுத்திரனுக்குக் கூறிய தென்னை?

## 4.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினுக்களுக்கு விடைதருக:-**

மணிமேகலை தான் கணிகையின் மரபிற் பிறந்தாலும் ஒழுக்கந்தவருமல் இருந்ததாலே, எல்லோராலும் உயர்வாக மதிக்கப்பெற்ருள். ஆகையால், எக்குடியிற் பிறந்தாலும் ஒழுக்கமுடையோர் உயர்வடைவர் என்று அறிகிறோம். உதய குமாரன் அரசகுமாரன். குடிகள் ஒழுக்கம் தவருமல்பார்த்துக் கொள்வது அரசன் கடமை எனினும், அவன்மணிமேகலை யைக் கெடுக்கப் பலமுறை முயன்ருன். அதனுலே, காஞ்ச னனுலே வெட்டுண்டான். ஆகையால் யாராயிருந்தாலும் "அடாதுசெய்தார்படாதுபடுவர்" என்று அறிகிறோம். முற் பிறப்பிலே புண்ணியராசன் ஆபுத்திரனுக இருந்துசெய்த

புண்ணியத்தாலே அரசனானன். அவனிருந்த நாடு எல்லா வகையிலும் வளம்பெற்றிருந்தது. ஆகவே, நன்மை செய்தோர் நன்மையடைவர் என்று அறிகிறோம்.

"மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்

[மணிமேகலை]

[கயக்கு – கலங்குதல்; கோறல் — கொல்லுதல்; உரவோர் – அறிவுடையோர், அல்லறம்—பாவம்.

1. மணிமேகலை எல்லோராலும் உயர்வாகமதிக்கப் பெற்றதேன்?
2. உதயகுமாரன் யாரால் வெட்டுண்டிறந்தான்?
3. நன்மை செய்தோர் நன்மையடைவர் என்பது எதனாற் பெறப்படுகின்றது?
4. புண்ணியராசனின் முன்னைய நாமமென்ன?
5. "வேலியே பயிரைமேய்ந்தால்" இவ்வெடுத்துக் காட்டுக்குப் பொருத்தமாய் அமைந்திருப்பது யாது?
6. பின்வரும் சொற்களின் பொருள் தருக:
மன்னுயிர், கடிந்தனர், நல்லுலகு.
7. இச்செய்யுளின் பொழிப்புரையை எழுதுக.
8. உறங்கலும் விழித்தலும் போன்றிருப்பன எவை?

## 5.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடைஎழுதுக:-**

கற்பின் செல்வியாகிய சீதையைக் கவர்ந்துசென்று சிறையில் வைத்தான் இராவணன். சீதையைமீட்பதற்காக

இராமன் இலங்கையின்மீது படையெடுத்தான். பெரும்போர் மூண்டது. இராவணன் மைந்தனாகிய மேகநாதன் இலங்கையில் நிகரற்றவீரன் அவன் வென்று வருவான் என்று எண்ணி இறுமாந்திருந்தான் இராவணன். போர்க்களத்திற் பகைவரது திறத்தை நன்றாகத் தெரிந்த மேகநாதன் இராவணன் மாளிகையை அடைந்து மன்னனைத்தொழுது, ''ஐயனே! இன்றுநடந்தபோரில் நான் அரிய பெரியபடைக்கலங்களையெல்லாம் விடுத்தேன். அவை பகைவர்மீது செல்லவில்லை; ஆதலால் போருக்குஅஞ்சி இங்கு வந்துவிட்டேன் என்று கருதிவிடலாகாது. உன்பால்வைத்த ஆசையால் ஒன்றுசொல்லக்கருதி வந்தேன். சிறைப்படுத்திய சீதையைவிட்டுவிட்டால், நாம் சீருஞ் சிறப்பும் சிதையாமல் வாழலாம். பகைவர் சீற்றம்தீர்வர். நம் நாட்டைவிட்டுநீங்குவர். பகையும்போரும் இன்றி நீ பண்புற்று வாழ்வாய். உன்பால்வைத்த அன்பினால் இதைச் சொன்னேன்'' என்றான்.

ஆண்மையின் நிலையமாக விளங்கிய இராவணனை மேகநாதன் தன் உயிரினும் அருமையாகக் காதலித்தான். தன் உயிரைக் கொடுத்தேனும் தந்தையைக் காக்கக் கருதினான். அத்தன்பால் வைத்த ஆராத அன்பினால் சீதையை விடுத்தேனும் அவன் ஆவி காக்க ஆசைப்பட்டான். உலகெலாம் கலக்கி வென்ற வீரனாய செல்வன், இலங்கை வேந்தன் முன்னே நின்று மறுபடியும் அவனை வணங்கி ''ஐயனே! இராமன்மீது நான்விட்ட நெடியோன் படையாகிய நேமியும், அவ்வீரனை வணங்கிப் போவதானால் அதனிலும் வலியதொன்றுண்டோ? நம் குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக்கொண்டோம். மாற்றார் வலிமை கண்டு அஞ்சினேன் என்று அருளல் ஆகாது. உன்பால் வைத்த காதலால் இவ்வாறு உரைத்தேன்'' என்று வீர நெடுங்கரங் கூப்பி வணங்கினான்.

[வீரமாநகர்]

''ஆதலால் அஞ்சினேன் என்று
அருளலை ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாயின்
அனையவர் சீற்றம் தீர்வர்

போதலும் புரிவர் செய்த
தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான்
உலகெலாம் கலக்கி வென்றான்.

1. இராமன் இலங்கையின்மீது படையெடுத்ததேன்?
2. சீதையைக் கவர்ந்து சென்று சிறைவைத்ததுயார்?
3. மேகநாதன் என்போன் யாவன்?
4. உன்பால் வைத்த அன்பினால் இதைச் சொன்னேன் என்றான். யார்? யாருக்கு?
5. மேகநாதன் இராவணனுக்குக் கூறியதென்ன?
6. உலகெலாம் கலக்கி வென்றோன் யாவன்?
7. அவன் செய்யக் கருதியதென்ன?
8. "நம் குலம் செய்த பாவத்தால் கொடும்பகை தேடிக் கொண்டோம்". இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
9. கொடும்பகை எதனால் உண்டாயிற்று?
10. செய்யுளின் பொருளை உரைநடையில் எழுதுக.
11. கற்பின், இறுமாந்திருந்தான், பண்புற்று, அன்பினால் – இச் சொற்களைப் பிரித்தெழுதுக.

## 6.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக:-**

கண்ணகியின் வேலைக்காரி பரபரப்புடன் ஓடிவந்தாள். "அம்மா! வந்துவிட்டார்கோவலர்; அதோ!" என்றாள். கண்ணகி வியப்புடன் எழுந்தாள். கோவலன் வந்து நின்றான். நின்றவனைக்கண்டு பிரிவினால்வாடிக்கிடந்தவள் நினைவிழந்து அவன் காலில் விழுந்தாள். கோவலன் அன்புடன் அவள் பக்கத்தில் அமர்ந்து மூர்ச்சை தெளிவித்தான். அவளுடைய வாடியமேனியைக் கண்டு உள்ளங்கவன்று வருந்தினான். அவன் அவளைப்பார்த்துப் "பொய்யைமெய்யாகக் கொள்ளும் மாயக்கணிகையிடம் நம்முன்னோர் தேடிவைத்த பொருளை

யெல்லாம் தொலைத்து வறுமையுற்றேன். என்செய்வேன்! இதனால் இனிவெளியிற் செல்லவும் வெட்கமாயிருக்கிறது'' என்றான் கண்ணகி இதைக்கேட்டு "மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லைப்போலும்; அதனால் இவ்வாறு தளர்ந்து போய்விட்டார்'' என்றுநினைத்துப் புன்சிரிப்புடன், "என்னிடம் இருசிலம்புகள் உள்ளன. அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

அவள் புன்சிரிப்புடன் கூறிய கருத்தை உணர்ந்த கோவலன் வெட்கப்பட்டான். பிறகு, "அந்தச் சிலம்புகளைக் கொண்டு மதுரைக்குப் போய் இதுவரையில் அழித்த பொருளை ஈட்டுவதற்கு வாணிகம் செய்வேன். என்னோடு நீயும் வா. விடியற்காலையிற் செல்வோம்'' என்றான். கண்ணகி தன் கணவன் திரும்பி வந்ததும் இவ்வாறு கூறுவதும் கனவோ என்று ஐயுற்றாள். பிறகு மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டாள். அன்று இரவு இருவரும் தூங்கவேயில்லை. ஒவ்வொரு விநாடியும் ஓராண்டாகக் கழிந்தது. விடியற்காலையில் எழுந்து, ஒருவரும் அறியாமல் வெளியே வந்தனர். பல கோயில்களையும் வலம்வந்து வணங்கினர். காவிரியின் வடகரைச் சோலைவழியாக மேற்குநோக்கி ஒரு காதம் நடந்தனர். குளிர்ந்தபொழில் ஒன்றைக்கண்டு அங்கே தங்கினர். அப்போது கண்ணகி தன்கணவனை நோக்கி "மதுரைநகரம்'' எதுவென்று வினவினாள். இதைக்கேட்ட கோவலன் மனம்வெதும்பினான். வீட்டைவிட்டு வெளியே வந்தறியாத இயல்பையுடைய கண்ணகி நடையால் மெலிந்துசோர்ந்து விட்டாள். ஊழ்வினையின் கொடுமையை எண்ணிக் கோவலன் திகைத்து, "இன்னும் சிறிது தொலைவுதான் இருக்கிறது'' என்று புன்சிரிப்புடன் கூறினான். அப்பொழிலுக்குப் பக்கத்தில் ஒரு சமணப்பள்ளியிருந்தது. அதில் கவுந்தி என்னும் முதியதவப்பெருமாட்டி ஒருவர் இருந்தார்.

[சிலப்பதிகாரம்]

1. பக்கத்திலமர்ந்து மூர்ச்சைதெளிவித்தவன் யார்? யாருக்கு?
2. கண்ணகி நிலைவிழுந்து விழுந்ததேன்?

3. "இனிவெளியிற் செல்லவும் வெட்கமாயிருக்கிறது" என்ருன் கோவலன். எதனுல்?
4. கோவலனிடம் கண்ணகி யாது கூறினுள்?
5. இச்சந்தர்ப்பத்தில் கண்ணகி யாது கருதினள்?
6. கோவலன் மதுரைக்குச் செல்லத்துணிந்ததேன்?
7. கோவலன் மனம் வெதும்பிய காரணம் யாது?
8. இவர்கள் மதுரைக்குச் செல்லும் வழியில் எங்கேதங்கினர்?
9. சமணப்பள்ளியில் இருந்தவர் யாவர்?

## 7.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினுக்களுக்கு விடைஎழுதுக:-**

அக்காலத்தில் உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் நன்ருக நடைபெற்றன. கப்பல் வாணிகமும் சிறந்திருந்தது. புகார், கொற்கை, முசிறி, தொண்டி முதலியதுறைமுகப் பட்டினங்கள் இருந்தன. அப்பட்டினங்களில் ஏற்றுமதி, இறக்குமதி இடையருது நிகழ்ந்து கொண்டிருந்தன. சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தைப்பற்றிய வரலாறு "பட்டினப்பாலை" என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. அங்கேகடற்கரையில் உள்ள வீதிகளில் பெரியபண்டகசாலைகள் இருந்தன. கப்பலில் இருந்து இறக்குமதிசெய்த பண்டங்கள் மலைபோற் குவிந்திருந்தன. அப்பண்டங்களைக் காக்கும் காவலாளர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்து வந்தனர். ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் எல்லாப் பொருள்களுக்கும், சோழருடைய இலச்சினையாகிய புலி முத்திரையை இட்டனர். எல்லா வியாபாரப் பொருள்களுக்கும் சுங்கவரி அறவிடப்பட்டது. வணிகர் தங்கள் பொருள்களோடு வழிகளிற் செல்லும்போது அவர்களைப் பாதுகாப்பதற்கும் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வாணிபஞ் செய்வோர்

இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்றனர். அன்றியும் அவர்கள் அரசர்களால் பெரிதும் மதிக்கப் பட்டனர். அவர்களுக்கு "எட்டி" என்னும் பட்டம் அரசர்களால் வழங்கப்பட்டது.

காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையிலே கப்பலுக்குத்துறை காட்டும் ஓர் ஒளிவிளக்கு அமைந்திருந்தது. இக்காலத்தில் துறைமுகங்களில் காணப்படும் விளக்கைப் போன்ற தொன்று, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே காவிரிப்பூம்பட்டினத்தில் காட்சி அளித்தது.

'கலங்கரைவிளக்கம்' என்று அதற்குப் பெயரிட்டனர் பண்டைத்தமிழர். கடல்வழியாக வரும் மரக்கலங்களைத் துறைமுகத்திற்கு அழைக்கும் விளக்கு என்பது அச்சொல்லின் பொருளாகும்.

"நீரின்வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காளகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

[பட்டினப்பாலை]

1. தமிழ் நாட்டில் உள்ள நான்கு துறைமுகப் பட்டினங்கள் யாவை?
2. காவிரிப்பூம் பட்டினத்தைப்பற்றிய வரலாறு கூறும் நூல் யாது?
3. சோழருடைய இலச்சினை என்ன?
4. அக்காலத்தில் உள்ள வணிகர் எத்தன்மையானவர்கள்?

5. அவர்களுக்கு அரசனால் அளிக்கப்படும் பட்டம் யாது?

6. "கலங்கரைவிளக்கம்" என்பதன் பொருள்யாது?

7. பின்வரும் சொற்களின் பொருள் என்ன?
புரவி, கால், கருங்கறி, ஆரம், துகிர், மறுகு.

8. பண்டைக் காலத்தில் ஈழநாட்டில் இருந்து உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை எதனால் அறிகின்றோம்?

## 8.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

சூரன் என்பவன் ஒரு பேரரசன் வீரமகேந்திரம் என்னும் நகரில் அரசுவீற்றிருந்தான். வானவர் நாட்டின்மீது படையெடுத்து, இந்திரன் மகனாகிய சயந்தனையும் தேவரையும்பிடித்துச் சிறைவைத்தான். அவர்களை விடுவிப்பதற்காக முருகன்படை எழுந்தது. சூரன் மகனாகிய பானுகோபன் அச்சேனையை எதிர்த்தான். வீரவேல்கொண்டு போர்புரியும் முருகனை ஒருநாளும் வெல்லமுடியாதென்று நன்றாகஉணர்ந்தான் சூரனிடம் சென்று, "அரசே! இன்று மாற்றார்மீது மாயப்படையை ஏவினேன்; அதனிலும் சிறந்தபடைக்கலம் என்னிடம்இல்லை; அம்மாயப்படையும் பயனற்றுப்போயிற்று. நீ நெடுங்காலம் வாழவேண்டும், அரசாளவேண்டும் என்பது எனது ஆசை. அவ்வாசையால் ஒன்று கூறுகின்றேன். வானவரை நீ சிறையினின்றும் விட்டுவிட்டால் படை எடுத்து வந்தமுருகன் நம்நாட்டை விட்டு அகல்வான். சீற்றம் தீர்வான். உன் அரசு நீடூழிவாழும்" என்றான். அவ்வுரைகேட்ட சூரன் பொங்கிஎழுந்தான். "மைந்தா! என்முன் நின்று என்ன பேசினாய்? வானவரை விட்டேனென்றால் என்னையார் மதிப்பார்? இவ்வுலகவாழ்க்கை நிலையற்றது என்பதை நீ அறியாயோ?"

இளமையும், செல்வமும், வீரமும் இனையபிறவும் அழிந்தேதீரும். அழியாமல் நிற்பது புகழ்ஒன்றே. ஆதலால்என் ஆவிகொடுத்து அரும்புகழ் பெறுவேனேயன்றி, வானவரை விடுவித்து வசையினுக்கு ஆளாகிவாழமாட்டேன்.

'இறந்திடவரினும் அல்லால் இடுக்கண் ஒன்றுறினும்தம்பால்
பிறந்திடுமானந்தன்னை விடுவரோ பெரியர் ஆனோர்
சிறந்திடும் இரண்டுநாளைச் செல்வத்தை விரும்பியானும்
துறந்திடேன் பிடித்தகோளகை சூரனென்றொரு பேர்பெற்றேன்''.

என்று எரிந்து பேசினான். அதுகேட்ட பானுகோபன் அமர்க்களம் போந்து, வீரப்போர் புரிந்து ஆவிதுறந்தான். பின்னர் சூரனும் போர்செய்து மாண்டான். அசுரர் தலைவனாகிய சூரனும் அரக்கர்தலைவனாகிய இராவணனும் தவறானவழியிலே சென்றார்கள் ''மூர்க்கனும்முதலையும் கொண்டதுவிடா'' என்றபடி விடாக்கண்டராய் நின்றார்கள்; வீழ்ந்து ஒழிந்தார்கள்.

[கந்தபுராணம்]

1. சூரன் எந்நகரை அரசுபுரிந்தான்?
2. தேவர்களைச் சிறைமீட்க எப்படை எழுந்தது?
3. பானுகோபன் யார்? அவன் புரிந்தது என்னை?
4. மைந்தன் தந்தைக்குச் செப்பியமாற்றமென்னை?
5. தந்தையின் கூற்றுயாது?
6. அழிந்து போகக்கூடியன யாவை?
7. அழியாமல் நிற்பது யாது?
8. (அ) செய்யுளின் பொழிப்பைத்தருக.
   (ஆ) தவறானவழியில் சென்று அழிந்தவர்கள் யாவர்?
9. ''சிறந்திடும் இரண்டுநாளைச் செல்வத்தை விரும்பியானும் துறந்திடேன் பிடித்தகொள்கை''. இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

## 9.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினுக்களுக்கு விடைஎழுதுக:-**

கண்ணகி படுந்துயரத்தைக் கண்டு மனம்பொருதவளாய்த் தோழி அவளைப்பார்த்து, "அரண்மனையில் களவுபோன சிலம்பைக் கோவலன் களவாடினுன் என்று அவனை அரசனது காவலாளர் கொலைசெய்தார்கள்" என்ருள். கொலை என்றசொல் செவியில் விழுந்ததும் கண்ணகி பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; மோதினுள்; அழுதாள்; அரற்றினுள். "என் தலைவா! நீ எங்கேசென்ருய்?" என்றுஏங்கிமயங்கினுள். "மன்பதை பழிதூற்ற, மன்னவன் தவறிழைப்ப அன்பனையிழந்தேன் யான், ஐயோ" என்று அரற்றினுள். வானத்தில் விளங்கித் தோன்றிய கதிரவனைப்பார்த்து, "ஏ காய் கதிர்ச்செல்வனே! நீ அறியாத பொருள் இவ்வுலகில் ஒன்றுமில்லையே! நீ அறிய என்கணவன் கள்வஞே?" என்று முறையிட்டாள். ஆதவனும் அசரீரியாய் நின்று ஆயர்குல மக்களெல்லாம் கேட்கும்படி "மாதே! உன்கணவன் கள்வனல்லன். அவனைக் கள்வனென்று கொன்ற இவ்வூர் தீயினுல் அழியும்" என்று கூறியகுரல் ஆகாயத்தில் எழுந்தது.

இதைக் கேட்ட கண்ணகி மனம் தெளிந்து தன் மற்றொரு சிலம்பைக் கையிலேந்தி மதுரைமாநகரின் உள்ளே புகுந்தாள். போகும் வழியில் "ஏ! பாவிகாள் என்கணவன் கள்வன் அல்லனே அவன் கையிலிருந்த சிலம்பைக் கவர்ந்து கொள்வதற் கல்லவோ, கள்வன் என்று பெயரிட்டுக் கொண்டு என் காதலனைக் கொன்ருர்கள். நான் கற்புடைய மங்கையாய் இருப்பின் இந்நகரில் வாழும் நிறையுடைய மாதர்முன் என் காதலனை உயிரோடு காண்பேன். கண்டு அவன் கனிந்த சொற்களைக் கேட்பேன். அவ்விதம் கேளேனுயின் என்னை இழிகுலமகள் என்று எல்லோரும் இகழுங்கள்" என்று வஞ்சினம் கூறி அழுதாள். இவ்வாறு அல்லலுற்று ஆற்ருது அழுவாளைக்கண்டு மதுரையில் வாழ்ந்த மக்களெல்லாம் மயங்கி என்ன நேருமோ என்று

ஏங்கியிருந்தார்கள். அவர்களிற் சிலர் கண்ணகியை அழைத்துக்கொண்டு அவள் கணவன் இறந்துகிடந்த இடத்தைக் காட்டினூர்கள். கற்புடைய மங்கை படும் துயரத்தைக் காண மனம் பொருதவன்போல் கதிரவனும் மேற்றிசையில் மறைந்தான்.

[சிலப்பதிகாரம்]

1. கோவலன் இறந்ததைக் கண்ணகி எவ்வாறு அறிந்தாள்?
2 "மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் யான்". இத்தொடரை விளக்குக?
3. கண்ணகி கதிரவனிடம் வினவியதென்ன?
4. ஆதவன் அசரீரியாய்க் கூறியதென்ன?
5. அசரீரி என்பதன் பொருள்யாது?
6. மதுரைமாநகருக்குச் செல்லும் வழியில் கண்ணகி கூறியதென்னை?
7. கண்ணகி கையிற்கொண்டு சென்றது யாது?
8. கண்ணகியைக் கண்ட மதுரை மக்கள் கருதியது என்னை?

## பயிற்சி 10.

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன்கீழுள்ள வினுக்களுக்கு விடைதருக.**

இவர்கள் இப்படியிருக்க, மானசவேகன் சென்ற தங்கையைக் காணுகிப் பலஇடங்களிலும் தேடிக்கொண்டுவந்து கௌசாம்பியைச் சார்ந்தசோலையில் இருக்கும் அவ்விருவரையுங் கண்டு, சினமுற்று அவர்களைப் பற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றபொழுது இடைவழியில் நரவாணனைத் திடீரென்று கீழேதள்ளிவிட்டான். வேகவதி தன்வித்தை வலியால் அவனுக்கு யாதொரு துன்பமும் தோன்ருதபடி செய்வித்தாள். நரவாணன் வீழ்ந்த இடம் சதானிகமுனிவருடைய தவப்பள்ளியாதலின், அம்முனிவ

ருடைய மகிமையைக் கேட்டறிந்த அவன், தன் துன்பத்தை அவர் எப்படியுந் தீர்த்துவிடுவாரென்று நிச்சயித்துச் சென்று அவரை அன்புடன் வணங்கினான். அவர் ஞானத்தால் அவனை இன்னானென்று அறிந்து "உதயணனுடைய புதல்வனே! உனக்கு மங்களமும் அறிவும் உண்டாகுக" என்றனர். நம்தந்தையின் பெயரை இவர் எப்படி அறிந்தார்! என்று வியப்புற்ற அவன்- "தேவரீர்யாவர"? என்று கேட்டபொழுது, அவர் "நான் உன்னுடைய தந்தையின் தந்தை" என்றதோடு தம் வரலாறு முழுவதையுங் கூறினார். அவன், "வித்தியாதரர் உலகஆட்சியை நான் பெறுதல் கூடுமென்று முன்னம் கேட்டுள்ளேன். அதனைப் பெறுதற்கு உபாயம்யாது? என்று கேட்கஅவர், "உன்னுடைய நகரமடைந்து உதயணன்பால் ஆகாய மார்க்கமாகச் செல்லுதற்குரிய வித்தையைப்பெற்று அதன்மகிமையால் அந்த ஆட்சியைப் பெறுவை" என்றனர். பின்பு நரவாணன் அவரை வணங்கி அவர் சொல்லியபடி கௌசாம்பியைச் சார்ந்து, தன்னைக்காணமல் தேடித்தேடி விசனமுற்றிருக்கும் தாய்தந்தையரை வணங்கி நிகழ்ந்தவற்றைக் கூறினான். உதயணன் அவனுக்கு மேற்கூறிய மந்திரத்தை உபதேசித்தனன். பின்பு நரவாணன் விமானமூர்ந்து சென்று விசயார்த்தமென்னும் வித்தியாதரர் மலையின் தெற்கேயுள்ள சிறிதரம் என்னும் நகரத்தையடைந்தான்.

[உதயணன் சரித்திரம் G. C. E 1961]

1. உதயணனுடைய புதல்வன் பெயரென்ன? அவனுடைய இராசதானியாது? அவன் யாரிடம் மந்திர உபதேசம் பெற்றான்?
2. நரவாணனுக்கு யாது நிகழ்ந்தது? அவன் கண்ட சதானிகமுனிவர் யார்?
3. பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக:- தவப்பள்ளி, விச்சை, விசனம்.
4. மானசவேகன் யார்? அவன் கோபமூற்றதற்குக் காரணம் என்ன?
5. நரவாணன் விமானத்திற் சென்றடைந்த நகரம் யாருடையதாயிருக்கலாம்?

## 11.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினக்களுக்கு விடையெழுதுக:-**

அறிவிலும் ஆற்றலிலும் இனிமையிலும் மேல்நோக்கிச் செல்லுதல் வாழ்க்கையின் நோக்கமாகும். முன்னேற்றமடைதற்கு இன்றியமையாத சில கோட்பாடுகள் இருக்கின்றன. அவை என்றும் மாறுத்தன்மை யுடையவைகள். வாழ்க்கை சம்பந்தமான உண்மைகள் எக்காலத்தும் எல்லார்க்கும் ஒரே பாங்குடன் மிளிர்கின்றன. ஆதலால் அவைகளுக்குச் சனுதன தர்மம் என்னும் பெயர் ஏற்பட்டது. அக்கோட்பாடுகளேயே வைதிகம் என்றும்சொல்வர். இலௌகிகம் என்பது சமய நடைமுறை. நல்ல நாகரிகமுடைய சமூகம் என்பது, மேலாம் உண்மைகளுக்கு ஒப்பவாழும் இயல்புடையோரது கூட்டமாகும். வைதிகஉண்மைகளுக்கு ஒப்ப வாழமுயலுதல்வர் ணுச்சிரம தர்மமாகும். ஆச்சிரமங்கள் நான்குஇருக்கினறன. அவற்றில் உயர்வு தாழ்வு கிடையாது. பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பன அவை. பிறந்த சிசு ஒன்றின் வாழ்க்கையானது குழந்தைப்பருவம், பிள்ளேப்பருவம், காளேப்பருவம், முதிர்பருவம் ஆகியவைகளில் பூர்த்தியாவது போன்று நான்குவித ஆச்சிரமங்களின் மேலாம் வாழ்க்கை முடிவு பெறுகிறது. வாழ்க்கையின் புனிதம்வாய்ந்த, படித்தரமே ஆச்சிரமம் என்பதாகும். கல்விகற்கும் இளமைப்பருவமே பிரமச்சரிய ஆச்சிரமம் என்பது. புலனடக்கமும், ஒழுக்கமும் அதற்கு இன்றியமையாதன. அவற்றில் நல்ல பயிற்சியைப் பெற்றபின் ஒருவன் இல்லறத்தை ஏற்றுக் கொள்ளுதல் கிருகஸ்தமாகும். இம்மைக்கு இன்றியமையாத கடமைகளே ஆற்றியபின் உலகப் பொறுப்புகளினின்று விலகுவது வானப்பிரஸ்தமாகும். பின்பு தன்னே முற்றிலும் பாரமார்த்திகத்துக் கென்று ஒப்படைப்பவன் சன்னியாசியாகும். ஆத்மிக வாழ்ககைக்கு வேண்டிய அனைத்தையும் அவன் தந்தருளுகிறுன்.

[ஆறுமுகநாவலர்]

1. நல்ல நாகரிகமுடைய சமூகம் என்பது எது? இலௌகிகம் என்றால் என்ன?

2. ஆச்சிரமம் என்பதன் பொருள் யாது? ஆச்சிரமங்கள் யாவை?

3. பிரமச்சரியத்திற்கு இன்றியமையாதன எவை? கிருகஸ்தம் என்றால் யாது?

4. வானப்பிரஸ்தன் என்போன் யாவன்? வாழ்க்கையின் நோக்கம் என்னை?

5. தன்னை முற்றிலும் பாரமார்த்திகத்துக்கு என்று ஒப்படைப்பவன் யார்? அவனால் நாமடையும் பலன் யாது?

## 12.

பின்வரும் செய்யுளில் இருந்து அடியிற்காணும் வினாக்களுக்கு விடை தருக.

நாராய்! நாராய்!! செங்கால் நாராய்!!!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயு நின் பேடையும்
தென்திசைக் குமரியாடி வடதிசைக்
காவிரியாட ஏகுவீ ராயின்
சத்தி முற்றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரை கனைகுரற்பல்லி
வரவு பார்த்திருக்கும் எம்மனைவியைக் கண்டெங்
கோமான் வழுதி கூடன் மன்றத்து
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலுறத் தழீஇ
அலகு திறந்த பல்லின ளாகிப்
பேழைபெய் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன னெனுமே
[புலவர் சரிதம்]

1. புலவர் எங்கே இருந்தார்?
2. அவர் ஊர் எத்திசையில் உள்ளது?
3. நாரைகள் எத்திசை நோக்கிச் சென்றன?
4. புலவர் நாரைகளை யாரிடம் தூதாக அனுப்பினர்?
5. அவர் தன் நிலையை நாரைக்கு எவ்வாறு கூறினர்?
6. பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக.
செங்கால், கோமான், மெய், பேழை, உயிர்க்கும்.

## 13

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினுக்களுக்கு விடை தருக.**

மனுவேந்தன் மகனுகிய விதிவிடங்கன் ஒருநாள் அரண்மனையினின்று புறப்பட்டுத் தேரில் பரிவாரங்கள் சூழக் கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அவ்வாறு செல்லும்போது, ஒரு பசுவின் இளங்கன்று துள்ளியோடி ஒருவருக்கும் தெரியாமல் தேர்க்காலில் அகப்பட்டு இறந்தது. கன்றை இழந்த தாய்ப்பசு மிக்க துயர் அடைந்து முகத்தில் கண்ணீர் தாரை தாரையாக வடிய, அன்பே உருவாக வந்த மனுநீதிச் சோழன் அரண்மனைக்குச் சென்று அங்கு கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அசைத்து, ஓசை உண்டாக்கியது.

அதுவரையும் கேட்டறியாத ஆராய்ச்சி மணியோசையை அன்று நூதனமாகக் கேட்டதும் மன்னவன் மயக்குற்று விழ்ந்தான்; அமைச்சர் தேற்றத் தெளிந்தான் நடந்ததை அறிந்தான்; தன் மைந்தனது அசட்டைக்காகப் பெரிதும் வருந்தினுன்; அமைச்சர் அரசனுக்குப் பலவாறு ஆலோசனை கூறினர். அரசன் மன்னுயிரைத் தன்னுயிரே போல எண்ணுபவனுதலால், அமைச்சர் கூற்றைப் பொருட்படுத்தாது, கன்றைக் கொன்ற தன்மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லும்படி ஓர் அமைச்சனை ஏவினுன். அவ்வமைச்சன் அக்கொடும் பாவச் செயலைச் செய்ய இசையாது தற்கொலை செய்துகொண்டான். அதுகேட்ட அரசன் உள்ளம்

பதைத்துத் தன்மகனைக் கன்று இறந்தஇடத்திற்கிடத்தி, தானே அவன்மீது தேரைச் செலுத்தி அவனைக் கொன்றான். பிறகு அமைச்சன் தன்னால் இறந்ததால் அவன்பொருட்டுத் தான் தற்கொலை செய்துகொள்ள அரசன் வாளை ஓங்கினான். அவ்வமயம் எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெருமான் அவ்வரசன்முன் தோன்றிக் காட்சியளித்து, இறந்த மைந்தனையும் கன்றையும் அமைச்சனையும் உயிர்பெற்று எழச் செய்தார்; அரசனை அவன் நீதி முறைக்காகப் பாராட்டி மறைந்தார். இத்தகைய நீதிவழுவா மன்னவர் நம் பண்டைத் தமிழ் மன்னர்கள்.

[முடியுடை மூவேந்தர்]

1. வீதிவிடங்கன் எங்கே சென்றுகொண்டிருந்தான்?
2. அவ்வேளையில் நிகழ்ந்த சம்பவம் யாது?
3. மன்னவன் மயக்குற்று விழ்ந்ததேன்?
4. அமைச்சன் இறந்ததற்குக் காரணமென்ன?
5. மன்னன் நீதிமுறையை எங்ஙனம் செலுத்தினான்?
6. அரசன் தற்கொலை செய்யத் துணிந்ததேன்?
7. அரசன் அமைச்சர் கூற்றைப் பொருட்படுத்தாததேன்?

## 14.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப் படும் வினாக்களுக்கு விடையெழுதுக.**

துக்கமும் கஷ்டங்களும் சிலசமயம் நேரிடுவது நம்முடைய இயற்கைக்குணங்களைப் பலப்படுத்தவேயாகும். அவைகள் பரீட்சைகளேயாகும். அதற்கு நம்மைத் தயார் செய்து கொண்டு அவைகளைக் கடந்து செல்லவேண்டும். உன் இயற்கைக் குணங்களை நன்கு அமைக்க அவைகள் வெகு உபகாரமானவை என்பதை அறி. மகாபக்தர்களுள் ஒருவரான பஞ்சபாண்டவர்களின் அன்னை தமக்கு எப்பொழுதும் கஷ்டத்தையும் துக்கத்தையுமே அளிக்கும்படி பகவானைப்

பிரார்த்தித்தாள். பகவானை என்றும் மறவாதிருக்கவே அங்ஙனம் அவள் வேண்டினுள். நம்மைச் சுற்றி, யாவும் இன்பகரமாயும், சுலபமாயும் இருக்கும் சமயத்தில் நாம் பகவானை மறந்துவிடுகிறோம். ஆதலின் துக்கமென்னுங் குருவானவர் நம்முடைய கடமைகளை நமக்குத் தெரியப்படுத்துவது நம் அதிர்ஷ்டமேயாகும். "எனது குருநாதர்" என்ற பிரசங்கத்தில் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் கூறுவதைக் கவனி. உலகம் யாவும் உன்னை அழுத்திவிட முற்பட்டாலும் நீ உன் இலட்சியத்தினின்றும் நழுவாது வேலைசெய்வாய் என்று உண்மையாக நம்புகிருயா? அவ்வகையான உறுதியும் ஆத்ம தியாகப் புத்தியும் அவசியம். பலவீனமான மனத்தைக் கொண்ட மாந்தரால் உண்மையை அடைந்து அனுபவிக்க முடியாது. தெய்விகமும் பரிசுத்தமும் உனது பிறப்புரிமைகள். தன்னலங்கருதாதவன் ஏன் அஞ்சுதல் வேண்டும். சுயநல அபிமானமே எல்லாத் துக்கத்திற்கும், பயத்திற்கும் காரணமாகும்.

[பக்திமார்க்கம்]

1. பஞ்சபாண்டவர்களின் அன்னை பகவானிடத்தில் வேண்டியதென்னை?
2. அவள் அவ்வாறு வேண்டியது ஏன்?
3. நமது இயற்கைக் குணங்களைப் பலப்படுத்துவன எவை?
4. உண்மையை அடைந்து அனுபவிக்க முடியாதவர் யார்?
5. உனது பிறப்புரிமைகள் எவை?
6. எல்லாத் துக்கங்களுக்கும் பயத்திற்கும் காரணம் என்னை?

## 15.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் உள்ள வினுக்களுக்கு விடை தருக:-**

அப்பால் யூகி ஆகவேண்டியவற்றை நாடினன். நாடி, துறந்தோர்களின் வேடம் பூண்டு, நகரத்தாருடைய மனங்களைக் கவர்ந்து, காரியங்களை முடிப்பவர்களாய்க் கிராமங்களில் இருக்கும் தன் தோழர்களைக் கண்டு அங்குள்ள

முனிவர் தெரிந்து கொள்ளாதபடி வேற்றுருன்போலத் தன்னைக் காட்டிச் சொல்லவேண்டியவற்றைச் சொல்லி அவர்களை உதயணன்பாற் செல்லும்படி அனுப்பினுன். அனுப்பியபின் அங்கேயுள்ள முனிவர்களோடு சமய விகற்பங்களையும் நீதிகளையும் பகற்காலம் முழுவதும் பேசிக்கொண்டே இருந்தான். இரவிலே புறப்பட்டுத் தன்னுடன் முன்னமே வந்து ஆகவேண்டியவற்றைப் பிறரறியச் செய்துகொண்டிருந்த சாதகன் என்னும் குயமகனது இல்லத்தை அடைந்தான். அங்கேயிருந்த சாங்கியத் தாயைக்கண்டு நிகழ்ந்தவற்றையும் செய்யவேண்டியவற்றையும் அவளுக்குக் கூறினுன். பசியையும் வெப்பத்தையும் போக்கும் மருந்தோடு கலந்த அவள் வைத்துள்ள கிழியையும், தண்ணீர்க் கரகத்தையும் கைக்கொண்டு புறப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கும்படி அவளுக்குச் சொன்னுன். பின்னர் அவன் உதயனனுடைய நண்பனுன யவனப்பாடித் தலைவனை யடைந்து சொல்லவேண்டுவனவற்றையும், தன் புறப்பாட்டையும் அவனுக்குச் சொல்லி அவன் கொடுத்த யந்திரவண்டியில் ஏறினுன். "ஈண்டு எஞ்சியுள்ள தோழர்களை எல்லாம் புறப்படச் செய்துவிட்டே நீ புறப்பட வேண்டும்" என்பதை அவனுக்குச் சொன்னுன். பின்னர் தனக்கு வேண்டுவன வற்றையெல்லாம் வண்டியில் ஏற்றிச் சாங்கியத் தாயையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கினுன்.

[உதயணன் சரிதம் G. C. E. 1962 ]

1. இக்கதை நிகழ்ச்சியில் வரும் முக்கியபாத்திரம் எத்தகையவன்?
2. சாதகன் யார்? அவனோடு இருந்தவள் யார்? அவளுக்கு என்ன நடந்தது?
3. யவனப்பாடித் தலைவன் யார்? அவன் செய்த உதவியென்ன? அவனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையென்ன?
4. யூகியின் தோழர் கிராமங்களில் என்ன முயற்சியில் ஈடுபட்டார்கள்? எவ்வாறு ஈடுபட்டனர்? அவர்களுக்கு என்ன கட்டளை கொடுக்கப்பட்டது?
5. பொருள் கூறுக:- கிழி, சமயவிகற்பங்கள், கரகம்.
6. சாங்கியத் தாய்க்கு யூகி என்ன சொன்னுன்?

## 16

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினக்களுக்கு விடை தருக:-**

உலகில் உள்ள கிறிஸ்தவர்கள் எல்லோரும் சிலுவையைத் தங்கள் மதத்தின் புறச்சின்னமாகக் கொண்டிருக்கின்றனர். முஸ்லீம்கள் அனைவரும் பிறையையும் நட்சத்திரத்தையும் தங்கள் மதத்தின் சின்னங்களாகக் கொண்டிருக்கின்றனர். இந்து மதத்துக்கோ புறச் சின்னங்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். அதைமுன்னிட்டே அதற்குத் தனிப் புறச்சின்னம் ஒன்று இல்லையென்றே இயம்பி விடலாம். இனி இந்துக்களுடைய மத அனுஷ்டான முறையை ஆராய்ந்து பார்க்கிறபொழுது வெவ்வேறு வகைப்பட்ட புறச்சின்னங்கள் கட்புலனுகும். சைவன் ஒருவன் நெற்றியிலே திருநீறு பூசியிருக்கிருன். கழுத்திலே உருத்திராக்கம் அணிந்திருக்கிருன். வைஷ்ணவன் ஒருவன் நெற்றியிலே திருமண் தரித்திருக்கிருன். கழுத்திலே துளசிமணி அணிந்திருக்கிருன். சைவன் யார் என்று ஆராயும்பொழுது வைஷ்ணவன் யார் என்பதையும் சேர்த்தே ஆராய்ந்து விடுகிருேம். ஏனென்ருல் புறச்சின்னத்திலும், கோலத்திலும் அவர்கள் பிரிவுபட்டிருக்கின்றனரெனினும் கொள்கையிலோ இலட்சியத்திலோ அவர்களுக்கிடையில் வேறுபாடு இல்லை. மானுட உடல் வெந்து சாம்பலாகக்கூடியது என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டது சைவச்சின்னம். உடல் அழிந்து மண்ணுகக்கூடியது என்னும் கருத்தை அடிப்படையாகக்கொண்டது வைஷ்ணவச் சின்னம். தத்துவத்தில் இருசமயங்களுக்கிடையில் வேற்றுமையில்லை. சமயத்தின் பெயரால் மக்களுக்கிடையில் ஆழ்ந்த ஒற்றுமை ஒருபுறம் உண்டாவது போன்று வேற்றுமையும் வளர்ந்து விடுவதுண்டு. ஆனுல் ஒற்றுமைக்கு உறுதுணையாய் இருப்பது மெய்ஞ்ஞானம்; வேற்றுமைக்குப் பிறப்பிடம் அஞ்ஞானம்.

[சுவாமி விவேகானந்தர்]

1. சைவசமயததின் அடையாளங்கள் யாவை?
2. வைஷ்ணவமதத்தின் சின்னங்கள் எவை?

3. திருநீறு தரித்தல் எதனைக் குறிக்கின்றது?
4. திருமண் எத்தத்துவத்தை விளக்குகின்றது?
5. சமய ஒற்றுமைக்கு உறுதுணையாய் இருப்பது எது?
6. சமய வேற்றுமை எதனாலுண்டாகின்றது?
7. (1) கிறிஸ்தவ மதத்தின் புறச்சின்னம் யாது?
   (2) முஸ்லிம் மதத்தின் புறச்சின்னம் யாது?

## 17.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:-**

தோழிகாள்! சந்தனப்பூச்சு, குளிர்ந்த காற்று இவையெல்லாம் போதும். ஏன் உமக்கிந்த வீண் பிரயாசை? குளிர்ந்த இப்பொருள்களே அதிட்டமில்லாத எனக்கு வெப்பத்தைத் தருகின்றன என்று சொல்லித் தன்னைத் தேற்றுவதில் ஈடுபட்ட தோழிகளை அரசகுமாரி தடுத்தாள். அந்நிலையில் அவளை நான் பார்த்தேன். "இஃது என்னவாயிருக்குமோ" என்று கவலைப்பட்டுக்கொண்டு வணங்கிவிட்டு, அவள் எதிரில் உட்கார்ந்தேன். "ஆசிரியரே! இதோ இம்மாதிரியான உருவமொன்றை எனக்கு ஓவியமாய் வரைந்து கொடும்" என்று சொல்லிக்கொண்டு நடுங்கும் கையிலே வண்ணத் தூரிகையை எடுத்து நிலத்தில் மெதுவாக உருவத்தைக் கீறிக்காட்டினாள். நானும் அதைப் போலவே ஓர் அழகிய ஓவியத்தைக் கீறினேன். பின்னர் இவனை இவள் திண்ணமாய் எங்கேயோ பார்த்திருக்க வேண்டும்; அல்லது கேள்விப்பட்டிருக்க வேண்டும். இவனைக் குறித்துத்தான் இந்த வேட்கை இவளுக்குண்டாயிருக்க வேண்டும். ஆனபடியால் நான் இங்கிருந்து சிக்கிரம் வெளியேறிவிடவேண்டும். இவளுடைய தந்தை தேவசக்தி கடுந் தண்டனை விதிப்பவன். இதையறிந்தால் மன்னிக்கவே மாட்டான் என்று எண்ணினேன். பின் அவளை வணங்கி அவள் கொடுத்த பரிசைப் பெற்றுக்கொண்டு அவ்வரசகுமாரி வதனசுந்தரியை விட்டு வெளிவந்தேன்.

பின் அவளுடைய உருவத்தை இரகசியமாக வரைந்து கொண்டு உம்மிடம் விரைந்து வந்திருக்கிறேன். தேவரீரையே அவள் என் கையால் வரைய வைத்தாள் என்று ஓவியன் மேலும் கனகவருடன் என்ற அரசனுக்குக் கூறினான்.

[G. C. E. 1962]

1. இக்கதையை யார் யாருக்குக் கூறுகிறார்?
2. அரசகுமாரியின் பெயரென்ன? அவள் தந்தை பெயரென்ன? அவள் விரும்பிய அரசன் பெயரென்ன?
3. அரசகுமாரியின் துன்பத்துக்குக் காரணமென்ன? அதை எவ்வாறு நீக்க முயன்றாள்?
4. ஓவிய ஆசிரியர் கவலைப்பட்டது எதனால்? அவர் செய்த ஓர் இரகசிய கருமம் என்ன?
5. பொருள் தருக:- வண்ணத்தூரிகை, வேட்கை, பிரயாசை.

## 18.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:-**

தனிமையான ஓரிடத்தில் ஒருமடமிருந்தது. அங்கே தேவசன்மா என்ற பெயருடைய யாசகன் வசித்து வந்தான். அவன் தனக்குப் பல சாதுக்கள் கொடுத்த உயர்ந்த வஸ்திரங்களை விற்பனை செய்து நிறையப் பணம் சம்பாதித்தான். எவரிடத்தும் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. இரவும் பகலும் அவன் அப்பணத்தைக் கக்கத்தில் வைத்திருப்பான். இவ்வாறு நன்றாகவே கூறப்பட்டிருக்கிறது. பொருளைத் "தேடுவது துன்பம்; அதைக்காப்பாற்றுவது துன்பம்; வந்தால் துன்பம்; செலவானால் துன்பம்; துன்பத்துக் கேதுவான பொருள் நாசமாய்ப்போக."

பின்னர்ப் பிறர் பொருளைக்கவரும் தூர்த்தனான ஆசாடபூதி என்ற பெயருடைய ஒருவன் கக்கத்திலிருந்த பண

முடிப்பைக் கண்டு யோசிக்கலானுன், "எவ்வாறு நான் இந்தப் பணமுடிப்பைக் கவருவேன்? இம்மடத்தின் சுவர் கள் திடமான கற்குவியல்களால் ஆக்கப்பட்டபடியாற் சுவ ரைப் பிரிக்கவும் முடியாது. சுவர் உயரமாயிருப்பதால் வாசலாற் போகவும் முடியாது ஆதலால் நயவஞ்சகமான பேச்சினுல் அவனிடம் நம்பிக்கை யுண்டாக்கி அவனுக்குச் சீடனுவேன். அதனுல் நம்பிக்கை யடைவானுயின் ஒரு வேளை என்னிடம் நம்பிக்கை வைப்பான். வைத்தால் அவன் என்வசப்படுவான். சாமர்த்தியமற்றவன் மற்றவர்க் குப் பிரியமானவகையிற் பேசமாட்டான். வெளியாய்ப் பேசு பவன் வஞ்சனையறியான். ஆசையில்லாதவன் அதிகாரி யாய் இருக்கத் தகுதியற்றவன்.

இவ்வாறு நிச்சயித்து அவனுடைய முன்னிலையிற் சென்று "ஓம் நமசிவாய" என்று உரக்கக் கூறிச் சாட் டாங்கமாக விழுந்து வணங்கி விநயத்தோடு கூறினுன். "பகவானே! இந்த உலகம் மாயை; இளமை மலையருவி போன்றது; இன்பங்கள் கோடைகாலத்து மேகத்தின் நிழல் போன்றது. மக்கள், மனைவி, சேவகர் என்பவர் சேர்க்கை யெல்லாம் கனவு போன்றன. இவற்றை நான் நன்கு அறிந்துகொண்டேன். இந்தப் பிறவிக்கடலை நீந்திக் கரை சேர்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ருன். இதைக்கேட்ட யாசகன் அன்போடு "இளவயதிலேயே இந் தப் பற்றின்மை உண்டாயிருப்பதாற் குழந்தாய் நீ தன் னியனுனுய்" என்ருன்.

இதைக் கேட்ட ஆசாடபூதி ஆசாரியனுடைய பாதங் களைப் பிடித்துக்கொண்டு அன்போடு "ஐயனே, எனக்குத் தீட்சை செய்து அருள்புரிவீராக" என்ருன். தேவசன்மா "குழந்தாய் உனக்கு அனுக்கிரகஞ் செய்வேன், ஆனுல் இரவில் நீ என் இருப்பிடத்துக்கு வரக்கூடாது. துறவிகள் பற்றற்றவராயிருக்க வேண்டும். உனக்கும் எனக்கும் அது பொருந்தும் எனவே நீ விரதமேற்றபின் மடத்து வாசலில் உள்ள பன்னசாலையிற் படுத்துக்கொள்" என்ருன். ஆசாட

பூதி "பகவானே! உங்கள் உபதேசமே எனக்குப் பிரமாணம். அதுவே மறுமைக்கு உதவும் என்றான். பின்னர் படுக்கை பற்றிய ஒப்பந்தத்துக் குடன்பட்ட அவனுக்குத் துறவி திட்சை செய்து சாத்திர முறைப்படி அவனைச் சீடனாக ஏற்றுக் கொண்டான். அவனும் துறவிக்குக் கால் கை பிடிப்பது முதலிய தொண்டுகளைச் செய்வதோடு, வில்வபத்திரம் கொண்டுவருதல் முதலிய சேவைகளாலும் தேவசன்மாவைப் பிரியப்படுத்தினான். ஆனால் கக்கத்திலிருந்த பணமுடிப்பை அவன் கைவிடவில்லை.

இவ்வாறு காலஞ்செல்ல ஆசாடபூதி சிந்திக்கலானான் "ஐயோ! என்னதான் செய்தாலும் இவன் என்னிடம் நம்பிக்கை வைக்கிறானில்லை. இவனைப் பகலிலேயே குத்திக்கொன்று விடலாமா? அல்லது விடத்தைக் கொடுக்கலாமா? இவ்வாறு சிந்திக்கையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

[பஞ்சதந்திரம் G. C. E. 1962]

1. யாசகன் தன்னையடைந்த சீடனுக்குத் தீட்சை செய்ய என்ன நிபந்தனை விதித்தான்?
2. துறவிக்குப் பணம் எவ்வாறு கிடைத்தது? அதை அவன் எங்ஙனம் காப்பாற்றினான்?
3. சீடன் உலகத்தை வெறுப்பதற்குக் கூறிய காரணங்கள் எவை? ஏன் அவ்வாறு கூறினான்?
4. சீடன் ஏன் கொல்ல நினைத்தான்? எவ்வாறு கொல்ல நினைத்தான்?
5. உரைப்பகுதியிலுள்ள இச் சொற்றொடர்களுக்குக் கருத்தெழுதுக.

   (a) சாட்டாங்கமாகவிழுந்து (b) விநயத்தோடுகூறி
   (c) தன்னியனாய்.

## 19.

**பின்வரும் செய்யுட்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினுக்களுக்கு விடை தருக.**

*இது தமயந்தி காட்டிலே தன்னந்தனியாகக் கணவனை யிழந்து அலையும்போது பாம்பினால் விழுங்கப்பட்ட நிகழ்ச் சியைக் குறிப்பிடுகிறது.*

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவ நின்
தாளடைந்து வாழுந்தமியேனை—தோளால்
விலக்காயோ என்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கங்
கிலக்காகி நின்றாள் எடுத்து.

வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகம் நான் காண்கிலேன் தோவேந்தே என்றாள்
பொருமுக வேற்கண்ணாள் புலர்ந்து.

(பொருமுக - போரைச் செய்யும் நுனியையுடைய)

மற்றொடுத்த தோள்பிரிந்தும் மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகும்—கோற்றவனை
நீரேனுங் காண்குதிரோ என்றழுதாள் நீள்குழற்குக்
காரேனும் ஒவ்வாள் கலுழ்ந்து.

(மற்றொடுத்த—மற்போர் செய்யும்)

அடையுங் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்டு
உடையுமுயிர் நாயகனே ஓகோ—விடையெனக்குத்
தந்தருள்வாய் என்னாத்தன் தாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து.

(செந்துவர் - செந்நிறமான பவளம்)

உண்டோர் அழுகுரல்என் றேற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயில்
முழுகுவாழ் தெய்வ முகம்

[நளவெண்பா - G. C. E. 1963]

1. தமயந்தி எவ்வாறு புலம்பினுள் என்பதைப்பற்றி உமது உரைநடையில் எழுதுக.
2. இலக்காகி நின்ருள், ஆவிமாள்கின்றேன், காரேனும் ஒவ்வாள், தாமரைக்கை கூப்பினுள், மென்மொழியாள் என்ற சொற்றெடர்களை விளக்குக.
3. இச்செய்யுளில் எத்தனை பாத்திரங்களுண்டு?
4. பிரித்தெழுதுக:- என்றழுதாள், வன்றுயரால், அடையுங் கடுங்கான், காரரவின்.

## 20.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழுள்ள வினுக்களுக்கு விடைதருக:-**

ததிமுகன் அப்பொழுதே அங்கதனிடம் சென்று, "ஐயா மதுவனத்தைக் கொள்ளையிட நீர் உமது வானரர்களுக்கு உத்தரவிட்டது உண்மைதானு? அது உம்முடைய சிறிய தந்தையான சுக்கிரீவ மகாராசருக்கு மிகவும் பிரியமானதொன்றென்று நீர் அறியீரா? அவர் உமது தந்தையையும் வென்றவரன்ருே. அத்தகைய வல்லமை படைத்த அவருடைய வனத்தை அழிக்க நீர் எப்படிக் கட்டளையிடலாம். இப்போது என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்? இளங்கன்று பயமறியா தென்றபடி சிறிதும் யோசனையின்றி இதிற் றலையிட்ட நீர் இனி எவ்விதம் உமது காலத்தைக் கழிக்கப் போகிறீர். சிறுபிள்ளைச் செயலை இயற்றி எனக்கல்லவா பேராபத்தை விளைத்து விட்டீர். மகாராசருக்கு நான் என்ன சொல்லிப் பிழைக்கப் போகின்றேன். நீர் கெட்டதுமன்றி என்னையும் கெடுத்தீரே" என்று பலவாருகப் பேசலுற்ருன்.

இப்பேச்சு, தளகர்த்தனை அங்கதனுக்குக் கோபத்தை மூட்டிவிட்டது. உடனே அவன் ததிமுகனைப் பிடித்து "அடா! ததிமுகா! இவ்வாறு அதனப் பிரசங்கம் செய்ய உனக்கதிகாரம் கொடுத்தது யார்? என் உத்தரவால் மதுவனம் அழிக்கப்பட்டதென்று நீ அறிந்தபோது, கேள்வி வரும்

காலத்தில் இதை வெளியிடலாம் என்று மௌனமாயிருக்க வேண்டும். அப்படியிருக்க மனமொப்பாவிடின், இவ் விஷயத்தை உடனே சென்று எனது சிறிய தந்தையிடம் தெரிவித்து, அவர் கட்டளையிடுகிறபடி நடந்துகொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு என்னிடம் வந்தா உன்னுடைய வாய் வல்லமையைக் காட்டுகிருய்? இதோ நான் புரியும் தண்டனையைப் பெற்றுக்கொண்டு நீ செய்ய உத்தேசித்திருப்பதைச் செய்'' என்று சொல்லி, அவன் மூக்கிலும் வாயிலும் குருதிவெள்ளம் பிரவகிக்கும்படி தன் கைகளால் ஓங்கியடித்து, ''ஓடிப்போ'' என்று விடுத்தனன்.

இரத்தப் பிரவாகத்துடன் ததிமுகன் ஓட்டமும் நடையுமாகச் சென்று சுக்கிரீவனிடம் முறையிட்டான். சுக்கிரீவன் அவனைநோக்கி ''அடாது செய்தவன் படாது படுவன்'' என்கிறபடி நீயே தேடிக்கொண்ட தீங்கிற்கு நானென்ன செய்வேன். அங்கதன் என்னைச் சார்ந்தவனென்றும், அவனுக்கும் அவ்வனம் உரியதென்றும் நீ அறியாமற் போனதென்ன? என்னிடம் நேரே வந்து என் கருத்தையுணர்ந்து கொள்ளாமல் நீ ஏன் அவனிடம் கற்றதெல்லாம் பேசலுற்ருய். உன்வாய்க் கொழுப்பால் நீ கெட்டதற்கு நான் செய்யத்தக்க பரிகாரம் ஒன்றுமில்லை. நீ அவனையே சரணமடைந்து உன் குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொள்.'' என்று புத்திபுகட்டி அனுப்பிவிட்டான்.

[அங்கதன்]

1. மதுவனத்தைக் கொள்ளையிடுமாறு கட்டளையிட்டவன் யாவன்?
2. ''இளங்கன்று பயமறியாது'' என்று கூறியவன் யாவன்? அவன் யாருக்குக் கூறினுன்?
3. ததிமுகன் அங்கதனிடம் கூறியன யாவை?
4. அங்கதன் ததிமுகனுக்களித்த தண்டனை யாது?
5. சுக்கிரீவன் என்போன் யாவன்? அவன் அங்கதனுக்கு எம்முறையினன்?

6. "அடாது செய்தவன் படாது படுவன்" என யாரால் யாருக்குக் கூறப்பட்டது? ஏன் அங்ஙனம் கூறப்பட்டது.
7. அங்கதனின் தந்தை யாராயிருக்கலாம்?
8. சுக்கிரீவன் ததிமுகனுக்குக் கூறிய மாற்றம் யாது?

## 21.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழுள்ள வினுக்களுக்கு விடைதருக:-**

ஔவையார் வறுமையில் வாடி வருந்துபவர்; அரசவாழ்வில் அகமகிழ்ந்திருக்கும் மன்னன் தான்என்று வேற்றுமை பாராட்டினுன் அல்லன் அதியமான். அழுக்கேறி முடைநாறும் அவர்தலே, நீரில் வளர்ந்து முதிர்ந்த நீர்ப்பாசியின் வேர்போல் நெகிழ்ந்து கிழிந்துபோன அவர் ஆடை, இவை கண்டு அவரை அணுக அருவருப்புக் கொண்டானல்லன், ஆண்டு முதிர்வால் ஆடித்தளரும் அவரை அணேத்துக் கொண்டே அழைத்துச் சென்முன் அரண்மனேயுள்ளே, அவர்தம் வழிநடைத் தளர்ச்சியும் உடல் மாசும் ஒருங்கேபோக நீராட்டினுன். அழுக்கேறிய அவர் ஆடையை நீக்கி. மல்லிகைமலர் போல் மென்மையும், வெண்மையும் வாய்ந்த ஆடை அளித்தான். அருகே இருக்கையில் இருத்தி திங்களேச் சூழ்ந்த உடுக்களே போன்று, பொன்னுலான சிறு கலம் பல சூழ இடையே அமைந்த வெள்ளியாலான வெண் கலத்தில் கறிவிரவு நெய்ச் சோறிட்டு, அதைக் கையாலெடுத்து ஊட்டினுன். மேலும் அவர் மகிழ்ந்து பாடுமாறு மணம் வீசும் தேன் பல அளித்து மகிழ்ந்தான். இவ்வாறு ஔவையாரை வரவேற்று ஆவனசெய்து வழிபட்ட அவன் அவரோடு வந்து, அவ்வூர்ப் பொதுவிடத்தே அயர்ந்து வதியும் அவர்தம் சுற்றத்தாரையும் அழைத்து, அவர்க்கும் வறுமை நீங்கும் அளவு வேண்டும் செந்நெற் குவியல் பல அளித்துச் சிறப்புச் செய்தான்.

அதியமான் வழிபட, அவன் அரசவைப் புலவராய் அமர்ந்திருந்தார் ஔவையார். ஒருநாள் அதியமானுக்கு

அருமையான நெல்லிக்கனியொன்று கிடைத்தது. அதியமான் தகடூர்க்கண்மையில் ஒரு பெருமலை; அம்மலையின் உச்சி அடைதற்கரிய உயரமும் அருமையும் உடையது. அங்கேயுளது ஓர் அருமையான நெல்லிமரம். அதிலுள்ள கனி, உண்டார் உடலை ஊறு இன்றி நெடுநாள் வாழச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது. அக்கனியில் ஒன்றை அரும்பாடுபட்டுக் கொணர்ந்தான் அதியமான். அக்கனியுடன் அரண்மனை நுழைந்த அதியமான், அரண்மனையில் ஒளவையார் இருப்பது கண்டான். அவன் எண்ணம் மாறிற்று. தன்னிலும் அவரே உலகில் வாழத்தக்கவர். தான் வாழ்வதினும், அவர் வாழின் உலகிற்குப் பெரும்பயன் விளையும் என்று எண்ணினான். ஆகவே, அந்நெல்லிக்கனியினை ஒளவையார்க்கேஅளிப்பது என முடிவுசெய்தான். ஆனால், ஒளவையார் அக்கனியின் அருமை அறியின் அதை உண்ண மறுப்பார். தன்னையே உண்ண வற்புறுத்துவர் என்பதையும் அறிந்தான். ஆகவே, அக்கனியின் அருமை பெருமைகளை அவர்க்கு முன்னர் அறிவியாதே, அதை ஒளவையார்க்கு அளித்தான். அன்புடையார் அளிக்கப்பெறுவன யாவையேயாயினும், அவற்றை இனிமை நிறைந்ததாகக் கொண்டு ஏற்றுக்கொள்வதே ஒளவையார் பண்பாதலின், அது எளிதான நெல்லிக்கனிதானே என்று குறைவாக மதியாது, அன்புடன் வாங்கி வாயிலிட்டு உண்டார். அவர் அதை உண்டார் என்பதறிந்த அதியமான், ஒளவையாரை நோக்கி "அறிவு சார்ந்த ஒளவையே! தாங்கள் இப்போது உண்ட நெல்லிக்கனி ஏனைய கனிகளைப் போன்றதன்று. உண்டார் கேடின்றி நீண்டநாள் இவ்வுலகில் வாழ்வர். அவ்வளவு அருமையுடையது. எளிதில் கிடைக்கக்கூடியதுமன்று. நானும் இவ்வுலகமும் வாழ்வது தங்கள் அறிவுடைமையால். தங்களைப்போன்ற பெரியோர்கள் வாழ்வதாலேயே உலகம் வாழ்கிறது. ஆகவே தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று விரும்பினேன். ஆதலால், இக்கனியினைத் தங்களுக்கு அளித்தேன்" என்றான்.

[சங்கத்தமிழ்ப் புலவர்]

1. இப்பகுதியில் வரும் பாத்திரங்கள் யாவர்?
2. ஔவையார் அரசனிடஞ் சென்றபோது எங்ஙனம் காட்சியளித்தார்?
3. அரசன் ஔவையாரை எவ்விதம் வரவேற்று உபசரித்தான்?
4. அவன் ஔவையாருக்கு அளித்த கனியாது? அக்கனி எத்தன்மையது?
5. மன்னன் நெல்லிக்கனியை ஔவையாருக்கு அளித்த காரணம் என்ன?
6. அரசன் ஆண்ட நாடு யாது? அவன் நெல்லிக்கனியை எங்கிருந்து பெற்றான்?
7. கனியின் அருமையை மன்னன் ஔவையாருக்கு முன்பு அறிவிக்காததேன்?

## 22.

**பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இது கலியின் வலியால் நாடு நகரிழந்து கானகம் சென்ற நளன், தமயந்தியைத் தன்னந் தனியாய்க் காட்டில் விட்டுப்பிரிந்து செல்லும் நிகழ்ச்சியைக குறிப்பது.

வஞ்சக் கலிவலியால் மாகத் தராவளைக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்தன் நெஞ்சத்
துதித்ததே வேறோர் உணர்வு.

(மாகம் – ஆகாயம், அரா – பாம்பு, செஞ்சுடர் – சூரியன், கருஞ்சுடர் – காரொளி, தானை – படை, வயம் – வெற்றி)

காரிகைதன் வெந்துயரம் காணாமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கும் ஒருயிர்போல் எய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தான் ஆங்கு

(நீத்து – விட்டு, கூர் – மிகுந்த)

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

(துகில் – உடை, முதல் – அடி, நிலைமை – இயல்பு.)

தீக்கானகத் துறையுந் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன் போற் போகின்றேன் யான்.

(தீ – கொடிய, உறையும் – தங்கும், கோகாதலி – சிறந்த அன்புடையாள்)

தாருவேனப் பார்மேல் தருசந்திரன் சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார் போல்—கூரிருளில்
செங்கா னகம்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து.

(தாரு – கற்பகதரு, தரு – கொடுக்கின்ற, விரவார் – சேரார், வரைத்தோள் – மலைபோன்ற தோள்)

[நளவெண்பா]

1. செய்யுள்களின் பொருளை உரைநடையில் எழுதுக.
2. பிரித்தெழுதுக:- செஞ்சுடர், கருஞ்சுடர், கூரிருள், காரிருள், செங்கானகம், வெங்கானகம்.
3. பின்வருவன எவற்றிற்கு உவமானமாகக் கூறப்பட்டன:-
   (i) செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்.
   (ii) தாரு.
4. சந்தர்ப்பம் கூறுக:-
   "கோக்காதலியைக் குறிக்கொண்மின்"
5. (i) உதித்ததே வேறோர் உணர்வு எங்கு?
   (ii) "அரிதற்கவனினைந்தான் ஆங்கு" எதை?

(iii) "தெரிந்தான் இருந்தான் திகைத்து" எவற்றை? யார்?

(iv) "காதலன்பு மிக்காள்" யார்?

(v) "தேவியை விட்டேகினான்" எங்ஙனம்?

## 23.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக:-**

மாணவனுடைய தலையாய கடமை பாடங்களைக் கற்பது. இவ்வுலகம் போராட்டங்கள் நிறைந்ததாக இருப்பதால் கருமங்களில் தடையற்ற கவனம் செலுத்துவது கடினம். வேறு கடமைகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன. ஆகவே மாணவர் தமது நாள் வாழ்க்கைக்கு வேண்டிய கடமைகளை முடித்தபின் பாடங்களைக் கற்பதில் கருத்தைச் செலுத்துதல் வேண்டும். மாணவனது கடமைகளுள் பாடங்களைப் பயில்வது முதன்மையாக விருந்தபோதிலும் அவன் பெற்றோருக்குக் கீழ்ப்படியாவிடில் தனது கடமைகளில் தவறியவனாவான். நாம் அதிக மதிப்புக் கொடுக்கவேண்டியவர்கள் நமது பெற்றோரோவர். நமது நற்பழக்கங்களுக்கெல்லாம் அவர்களே பொறுப்பாகவுள்ளனர். அவர்களுக்கு அடுத்தபடியில் ஆசிரியர்கள் உள்ளனர். நாம் அவர்களிடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து பாடங்களை நன்கு பயிலுதல் வேண்டும். வீட்டிலிருக்கும்போது பெற்றோரும் பள்ளியிலிருக்கும்போது ஆசிரியரும் பிள்ளைகளுக்குக் கல்விகற்பிக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் புரிவதை முக்கியமற்றதாகக் கொள்ளுதலாகாது.

கல்விகற்கும் அவாவினால் சில மாணவர் சில சமயங்களில் சுகவாழ்க்கைக்கு வேண்டிய விதிகளைப் பின்பற்றுவதில்லை. கல்வியில் அதிக கருத்துச் செலுத்துவதால் வாழ்க்கையில் உயர்ந்த இலக்கை அடையலாமென அவர்கள் நினைக்கிறார்கள். இவ்வெண்ணம் தவறானது. ஒருவனுடைய உடல் நலம் கேடடைந்தால் அவன் எவ்விலக்கை உன்னிக்

கல்வி கற்கின்ருனே அவ்விலக்குக்குப் பயனற்றவனுகி விடு கின்ருன். வாழ்நாள் முழுமையும் அவன் மகிழ்ச்சியற்றிருப் பான். அதிக மூளையுடையமாணவர் திறந்தவெளிகளில் உலா வுதல் விளையாடுதல்போன்ற உடற் பயிற்சிகளில் பங்கு பற்றல்வேண்டும். இடைவிடாது கல்விகற்கும் மாணவன் புத்தகத்தில் கற்ற கல்வியை நிறைவாக்கும் பொருட்டுப் பல இடங்களுக்குப் பிரயாணஞ்செய்து பலவகைப்பட்ட இயற்கைக் காட்சிகளையும் மக்களின் வாழ்க்கை முறைகளை யும் காணுதல் வேண்டும்.

பழங்காலத்தில் மாணவர்தாம் அரச வமிசத்தவராக இருந்தபோதும் ஆசிரியர் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயின்ருர்கள். அங்கு கலவிகற்பதோடு வீட்டு வேலைகளை யும் செய்துவந்தார்கள். அவர்களின் அவசிய தேவைக்கு வேண்டிய வாய்ப்புகள் மாத்திரம் கிடைத்தன. ஆகவே அவர்கள் சகிப்புத்தன்மையும் நல்லொழுக்கமுமுடையவர்களா கவும் வளர்ந்தார்கள். இவ்வகைவாழ்க்கையில் அவர்களின் மூளை வளர்ச்சியடைந்தது. நூல்களை மனப்பாடஞ்செய்திருக் கும் அளவுக்கு ஞாபகசக்தி இருந்தது. அச்சு எந்திரம் வந்தமையால் நிலைமை முற்ருக மாறுபட்ட இக்காலத்து முன் வாழ்ந்தவர்களின் அறிவாற்றலைக் காண்பது அரிது. மனஅடக்கம், கட்டுப்பாடு, நல்லொழுக்கம், கீழ்ப்படிவு என் பவை மாணவருக்கு அமையவேண்டிய குணங்களாகும்.

1. மாணவர் கடமைகள் எவை?
2. மாணவர்கள் மதிப்புக் கொடுக்கவேண்டியவர்கள் யாவர்?
3. கல்விகற்கும் சிறந்த மாணவர் உடல்நிலை பாதிக்கப்படுவ தேன்?
4. அவர்கள் எவ்விதம் உடல் வலிமையைப் பெறல் வேண் டும்?
5. மாணவர்களுக்குப் பழைய காலக் கல்வியினுல் உண்டாய நன்மைகள் எவை?
6. சிறந்த மாணவர்களுக்கு அமையவேண்டிய குணங்கள் எவை?

7. ஒரு மாணவனுடைய நற்பழக்கங்களுக்குப் பொறுப்பாக வுள்ளவர்கள் யார்?

## 24.

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்துக் கீழ்க்காணும் வினுக் களுக்கு விடைதருக.**

விஞ்ஞானக்கல்வி சாதாரணக் கல்வியைப்போல அறிவை விசாலப்படுத்துகிறது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், நம்மைச் சூழ்ந்துள்ள மிருகங்களின் இயக்கம், தாவரங்களின் இயல்புகள், உயிர்களின் இனத் தோற்றம், வாயுக்கள் இரசாயனப் பொருட்கள், மின்போன்ற இயற்கைப் பொருள் முதலியவற்றின் அற்புதங்களைத் தெரிவிக்கின்றன. விஞ்ஞானம், விருப்பு வெறுப்பு இன்றிப் பொருள்களின் இயல்புகளை ஆராயும் பழக்கத்தை உண்டாக்குகிறது. பொருள்களைக் கவனித்து நோக்கும் ஆற்றலை அதிகப்படுத்திப் பொறுமை, நிறைவு. உண்மையைக் கண்டுபிடித்தலில் ஆர்வம் என்பனவற்றை அதிகப்படுத்துகிறது. பொதுக்கல்வி அதன் அளவில் நிறைவில்லாதிருப்பதால் அதற்கு விஞ்ஞானக் கல்வியின் துணை வேண்டும். இலக்கியக் கல்வி விஞ்ஞானத்தை அதிகம் விளங்கிக்கொள்ளவும், விஞ்ஞானக் கல்வி இலக்கியக் கல்வியை அதிகம் விளங்கிக்கொள்ளவும் உதவுகின்றன.

தாவரங்களும், விலங்குகளும் உண்டாக்கப்பட்டிருக்கும் பொருள்களை உள்நோக்கிப் பார்த்தால் தாவரங்களும், விலங்குகளும் அற்ப பொருள் எனத் தோன்றமாட்டா. தாவர சாத்திர அறிவில்லாது. பூக்களையும் மரங்களையும் புகழ்வது ஒரு கூட்டத்தில் நிற்கும் அன்னியப் பெண்ணையும் அவள் அழகையும் புகழ்வதுபோலாகும். தாவர சாத்திரிகள் காட்டுக்குச் செல்லும்போது, அவர்கள் தமது நண்பர்களாகிய தாவரங்களோடு பேசுகிறார்கள். ஒவ்வொருமரத்துக்கும் அவர்

கள் சொல்லவேண்டிய செய்திகள் இருக்கின்றன. கலையும் இலக்கியமும் கற்பனை மிகுந்தனவாயிருப்பதால் அவை கற்பனைக்கும் புலன்களுக்கும் எட்டுகின்றன.

விஞ்ஞானம் சாதனை முறையானது. அது மனத்திலும் சிந்தனையிலும் பட்டு சாதனை முறையான உருவத்தை அடைகிறது. இலக்கியம் சம்பந்தப்படாமல் உணர்ச்சிவயப்பட்ட வாழ்க்கை இருக்கமாட்டாது. விஞ்ஞானமில்லாத உலகின் முன்னேற்றம் மந்தமாகவிருக்கும்.

1. விஞ்ஞானக் கல்வியால் பெறக்கூடிய அற்புதங்கள் எவை?
2. விஞ்ஞானக் கல்வி எத்தகைய தன்மைகளை அதிகப்படுத்தும்?
3. இலக்கியத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் உரிய தொடர்புகள் எவை?
4. ஒரு நாடு முன்னேற்றமடைந்துள்ளது என்று கூறும்பொழுது நீர் விளங்கிக்கொள்வதென்ன?

## 25

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினுக்களுக்கு விடை தருக:-**

இயல்பிலேயே கோபத்தைக் கொண்டது புலி சாதுவான தன்மையுடையது மான். புலிக்கு விருப்பமான உணவு மானிறைச்சி. அவ்வாறு இருந்தும் அவ்விரண்டும் ஒரே துறையில் ஒன்ருக இருந்து நீர் பருகும்படி பசி, பகை முதலியவற்றைப் போக்கிய வலிமையுடையவன் மாந்தாதா என்னும் சோழமன்னன். அவன் உயிர்களிடத்தில் செலுத்திய அருளின் தன்மையால் ஆட்சிபுரிந்தான். முசுகுந்தன் என்ற மன்னன் போர்க்களத்தில் புகுந்து இமையவர் உலகம் முழுவதையும் எவ்விதத் திங்குமின்றிக் காவல்புரிந்து அரசோச்சிக் காப்பாற்றிய புகழ்த் தன்மையை உடைய

வன் ஆவன். பிருதுலாட்சன் என்னும் சோழ மன்னன் திருப்பாற்கடலை மந்தர மலையையிட்டுக் கலக்கினான். அதிலிருந்து இனிய சாவா மருந்தாகிய அமுதம் உண்டாயிற்று. அதனைத் தேவர்கள் உண்ணுமாறு கொடுத்தான். சிபி என்ற சோழமன்னன் ஒரு புரு அடைந்த துன்பத்தை நீக்குவதற்காக ஒப்பற்ற தராசுத் தட்டில் தன் உடல் சதையை அறுத்து வைத்தான். அது புருவின் எடைக்குச் சமமாக வில்லை. அதனால் அவனாகவே அந்தத் தட்டில் ஏறி அமர்ந்தான். அப்பொழுதுதான் எடை சரியாயிற்று. தராசில் சிபிச் சக்கரவர்த்தியின் உடல் நிறுக்கப்பட்டதுபோல் உலக மக்களின் உள்ளமாகிய தராசில் சிபியின் புகழ் உடம்பும் அளந்து அறியப்பட்டது. 'இதுவே நீதியாகும்' என்று கூற்றுவனுக்கு எடுத்துரைத்தவன் கிள்ளிவளவன் என்னும் சோழனாவான். குடகுமலையைக் குடைந்து காவிரியாற்று நீரைச் சோழநாட்டுக்குக் கொண்டுவந்து ஓடச் செய்தவன் கவேரன் என்பவனாவான்.

சித்திரன் என்னும் சோழன், தன் துகில் கொடியில் இந்திரனைப் புலிக்கொடியாகக் கொண்டான். அதனால் ''வியாக்கிரகேது'' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். சமுத்திரசித்து என்னும் சோழன் கப்பல் போக்குவரவுக்காகப் பூசந்தியை வெட்டி மேல்கடலையும் கீழ்க்கடலையும் ஒன்று சேர்த்துச் சலசந்தியாக்கினான். நீர் வேட்கையால் வருந்திய ஐந்து இயக்கர்களுக்குத் தன்னுடைய ஐந்து இரத்தக் குழாய்களையும் அறுத்துக் கொடுத்து உதவிய, வலிமையுடையவன் பஞ்சபன் என்னும் சோழமன்னன் ஆவான். இவ்வாறு, தனக்குமுன் விளங்கிய சோழ அரசர்களின் வரலாறுகளை எல்லாம் நாரதர் கூறக் கேட்ட கரிகாலன் அவற்றை இமயத்தில் எழுதினான்.

[கலிங்கத்துப் பரணி]

1. மாந்தாதா எங்ஙனம் ஆட்சிபுரிந்தான்?
2. இமையவர் உலகம் முழுவதையும் காவல் புரிந்தோன் யாவன்?

3. பிருதுலாட்சன் யாது செய்தனன்?
4. சிபி என்போன் செய்த செயற்கருஞ் செயலென்னை?
5. 'இதுவே நீதியாகும்' என்று கூற்றுவனுக்கு உரைத்தோன் யாவன்?
6. காவிரியைச் சோழ நாட்டுக்குக் கொண்டுவந்த மன்னன் யாவன்?
7. 'வியாக்கிரகேது' என்னும் சிறப்புப்பெயர் எம்மன்னனுக் குரியது? அப்பெயருக்குக் காரணம் யாது?
8. கப்பல் போக்கு வரவிற்காகச் சலசந்தி அமைத்தவன் யாவன்?
9. பஞ்சபன் செய்த தென்னை?

## 26

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினுக்களுக்கு விடைதருக:-**

கண்ணன் மணித்தேரேறிப் பாண்டவர்க்குத் தூதுவ ஞய் அத்திஞபுரம் நோக்கிச் செல்கின்ருன் என்பதனை அறிந்த மன்னரும் மக்களும் மனம் மகிழ்ந்தனர். அரவக் கொடியோனும் தன் நகரையும் சுற்றுப்புறங்களையும் அலங்க ரித்துக் கண்ணபிரானை வரவேற்க ஒழுங்குகள் செய்யக் கட் டளையிட்டான். ஆனல் குடிகேடனுகிய சகுனி இதை விரும் பவில்லை. அவன் துரியோதனனை அழைத்து, "அரசர்க்கரச ஞகிய நீ எப்படி இடைக்குலத்தில் வாழ்ந்தவனை எதிர் சென்று உபசரிக்கலாம், நின் பெருமைக்கும் தகுதிக்கும் இது ஏற்றதன்று; கண்ணனை நீ எதிர்கொள்வது சிறிதும் பொருந்தாது. இச்செயலை விட்டொழிக" எனப் புத்தி புகட்டினன். துரியோதனனும் அவ்வாறே தன் எண் ணத்தை மாற்றிக்கொண்டு "அலங்காரமும் வேண்டா" ஆடம்பரமும் வேண்டா. அந்தமாயவனை என்சபையில் உள்ள யாருமே சென்று எதிர்கொள்ளவும் கூடாது" என்று கட்

டளையிட்டான். அவனுடைய அதிகாரத்துக்குப் பயந்த சிற்றரசர்களும் அடங்கி ஒடுங்கி இருந்தனர்.

கண்ணபிரான் தமது நகருக்கு வருகின்றார் என்பதனை அறிந்த வீடுமன், விதுரன், துரோணர், அசுவத்தாமன் என்பவர்கள் நகர எல்லைக்கே சென்று அவனை எதிர்கொண்டு நல்வரவு கூறி வாழ்த்தினர். பரந்தாமனும் உளங்கனிந்து இன்சொற் பேசி அவர்களுடன் நகருட் பிரவேசித்து, மற்ற எல்லோர்க்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு விதுரன் மனையிற் சென்று தங்கினன். அங்குச் சென்றதும் "என்னை யும் ஒரு பொருளாகக் கருதி நீ எய்துவதற்கு என்ன மாதவம் செய்தது இச் சிறு குடில்! இன்றே, நான் பிறவிப் பயனை எய்தியவனானேன்" என்று விதுரன் மனமுருகி வாழ்த்தி, கண்ணனுக்கும் அவனுடன் வந்த பரிசனர்க்கும் நல்விருந்தளித்து உபசரித்தான். உண்டியும் உபசாரங்க ளும் முடிந்தபின் கண்ணபிரானும் விதுரனும் தனித்திருந்து அரசியல் விஷயங்களையும் அத்தினபுரியின் எதிர்காலத்தை யும் துரியோதனனுடைய கெடுமதியையும் அவனுடைய தீய கூட்டத்தாரையும் பற்றிப் பேசினர்கள்.

[பாரதச் செல்வம்]

1. மன்னரும் மக்களும் மனம் மகிழ்ந்த காரணமென்னை?
2. கண்ணன் எங்கு சென்றான்? யாரிடம் சென்றான்? எதற் காகச் சென்றான்?
3. சகுனி துரியோதனனுக்குக் கூறியன யாவை?
4. சகுனியின் வார்த்தையைக் கேட்ட துரியோதனன் என்ன கட்டளையிட்டான்?
5. கண்ணபிரானை எதிர்கொண்டு வரவேற்றவர்கள் யாவர்?
6. அத்தினபுரம் சென்ற பரந்தாமன் எங்கு தங்கியிருந்தான்?
7. விதுரன் கூறியதென்னை?
8. கண்ணனும் விதுரனும் தனித்திருந்து பேசிய விஷயங் கள் யாவை?

## 27.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப் படும் வினுக்களுக்கு விடை தருக:-**

மனம்போன போக்கிலே போதல், உரமில்லாதவர்க ளின் வாழ்க்கை; அவர்களே உண்மையில் கோழைகள். மனத்திற்கு ஒருபோக்கு—ஒரு நெறி--ஏற்படுத்தி அதில் செலுத்துகிறவர்கள், உரம் மிகுந்தவர்கள். வாழ்க்கையில் வீரர்கள் அவர்களே. இத்தகைய உரம் உடையவர்களும் இள மையில் காதல் வளர்ந்த நிலையில் கலங்கி நிற்பர். மனம் போன போக்கில் போகிறவர்களுக்கு அப்போது உள்ளத் தில் போராட்டம் இல்லை. புறத்தே மட்டும் போராட்டம் இருக்கும். பிறரால் வரும் இடையூறுகள் மட்டுமே அவர் கள் காண்பன. ஆனுல், நெறிவகுத்து வாழ்கிறவர்களுக்கு உள்ளத்தில் போராட்டம் உண்டு. வெளி இடையூறுகளைப் பற்றி அவர்கள் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. தம் நெஞ்சைத் தமக்குத் துணையாக வைத்திருப்பதற்கு முயல் வார்கள். காதல் வயப்பட்ட நெஞ்சம் கலங்கும்போதும், கடமையில் சோர்வுறும் போதும், நெஞ்சைக் கடிந்து ஒறுப் பார்கள்; தடுத்து நிறுத்துவார்கள். இன்சொல் கூறிக் குழந் தையை வேண்டுவது போலவும் வேண்டுவார்கள். இளை ஞன் ஒருவன் தன் மனத்திற்குக் கூறும் சொல்லாக அமைத்து மதுரைக் கணக்காயனுர் இதை விளக்குகிறுர்.

நெஞ்சே! உனக்கு வன்சொல் சொல்லி ஒறுத்தாலும் விடமாட்டாய். இன்சொல் சொல்லி நிறுத்திஞலும் நிற்க மாட்டாய். ஒன்றுபட்ட நண்பர்போல் என் நிலையைப் போற்றி உணர்ந்திடு. உனக்கு யான் உறவினன் அல்லனே? உள் ளம் சிறிதளவு துயர் உறும்போது, சொற்களால் அத்துய ரத்தைப் புலப்படுத்த முடிகிறது. உள்ளத்து உணர்ச்சி சிறிதளவாக இருப்பதால் அப்போது வாய்ச்சொற்கள் பய னுடையனவாக, பற்பலவாக வெளிவருகின்றன. உள்ளம் பெருந்துயரத்தில் அமிழ்ந்து ஆழ்ந்துள்ளபோது, வாயில் சொற்கள் பிறப்பதில்லை. அந்நிலை பேச்சற்ற நிலையாக உள் ளது. மதுரைத் தெருக்களைச் சுற்றி அலைந்தபோது, கண்

ணகியின் உள்ளம் துயரத்தில் ஆழ்ந்திருந்ததாகக் கூற முடியும். துயரத்துடன் பெருஞ்சினமும் கலந்து உள்ளத்தில் குடிகொண்டிருந்த நிலை அது. அதனால் அழ முடிந்தது. அரற்ற முடிந்தது; முறையிட முடிந்தது. மதுரை நகரை விட்டு நீங்கியபோது, சினம் அடங்கித் துயரமேகுடிகொண்டிருந்தது. அப்போது அழுகை இல்லை; அரற்றல் இல்லை; முறையிடு இல்லை. "கிழக்கு வாயிலில் கணவனோடு புகுந்தேன். மேற்கு வாயிலில் தனியே செல்கின்றேன்" என்றாள்.

[நெடுந்தோகை]

1. கோழைகளின் குணங்கள் யாவை?
2. வாழ்க்கையில் வீரர் எனப்படுவோர் யாவர்?
3. எத்தகையோருக்கு உள்ளத்தில் போராட்டம் நிகழ்வதில்லை?
4. தம் நெஞ்சைத் தமக்குத் துணையாக வைத்துக் கொள்வோர் யாவர்?
5. பேச்சற்ற நிலைமை எப்பொழுது ஏற்படுகின்றது?
6. மதுரை நகரைவிட்டு நீங்கிய கண்ணகி அழாதும், அரற்றாதும் இருந்ததற்குக் காரணமென்ன?

## 28.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை தருக:-**

நல்லமுறையில் இல்லறம் நடத்தி உள்ளம் பக்குவமடைந்த பின்னரே துறவு நிலையானது உண்மைப் பயன் தரும் என்பது நம்முடைய தருமநூல்களின் முடிபு. இல்லற வாழ்வினால் மனம் எவ்வாறு பக்குவம் அடையும்? ஒருவன் தன்மனைவியிடம் அன்பு செலுத்தித் தன்னைத் தான் ஓரளவு மறக்கவும் துறக்கவும் கற்றுக் கொள்கிறான். அவ்வாறே குடும்பத்தின் நன்மை, குலத்தின் நன்மை, விருந்தினரின் திருப்தி முதலியவைகளும் 'தான்' என்னும் வலையினின்று வரவர வெளியேற மனிதனுக்குப் பயிற்சி தந்து வழிகாட்

டுகின்றன. இல்லற வாழ்வுக்குரிய அன்புகள் அனைத்தும் பேரன்புக்கு ஒரு பயிற்சியேயாகும். இந்தப் பயிற்சியைச் சரிவரப் பெற்ற பின்னரே உள்ளத்தில் ஞான ஒளிக்கு வாய்ப்பு ஏற்படும்.

மக்கள், மனைவி, கணவன், குலத்தார், ஊரார், தேசத்தார் என்றெல்லாம் கருதிக் கவலைப்பட்டு அன்பும், பணியும் செய்தால் அப்பொருள்களில் மறைந்து உள்ளே நிற்கும் மெய்ப்பொருளைக் காணும் அறிவு உண்டாகும். ஆனால் இதற்கு இல்லற வாழ்வை ஓர் அறமாக எண்ணி, அறவழியில் நடத்தி, வரவரப் பற்றுக் கழற்றுப்பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

யாக்ஞவல்கியர் இல்லற வாழ்வு முடித்துவிட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்து மனைவி மைத்திரேயியைப் பார்த்து உபதேசித்தது இந்த உண்மையையே. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

கணவனைப் காதலிப்பது கணவனைக் காதலிக்க அல்ல பரமாத்மாவைக் காதலிக்கப் பயில்வதற்காகவே. கணவன் மனைவியைக் காதலிப்பதும் இதற்காகவே. இதுவே காதலின் பயனும் உண்மைப் பொருளும் ஆகும். பெற்ற மக்களிடம் உள்ளம் கரைவது இதற்காகவே. மனைவி, கணவன், மக்கள், செல்வம், பசுக்கள் இவைகளினுள் நிற்கும் பரம் பொருளைக்கண்டு அதனுடன் கலந்து ஒன்றுவதற்கு உள்ளம் பொங்கவேண்டும். இந்தப் பயிற்சி பெறுவதே அவைகளைக் காதலித்து அனுபவித்து வாழ்வதன் உண்மைப் பயனாகும். பரம்பொருளைத் தனியாகக் காணவோ, அடையவோ முடியாது. மற்றப்பொருள்களில் அது உள்ளூடு நிற்பதை அறிந்து அப்பொருள்களின் வழியாகவே அதை அடைய முடியும்.

[உபநிடதம்]

1. துறவுநிலை எப்பொழுது உண்மையான பயனைத் தருகிறது?

2. பேரன்புக்கு ஒரு பயிற்சியாய் அமைவது யாது?
3. உள்ளத்தில் ஞான ஒளி, எப்பொழுது உண்டாகின்றது?
4. மெய்ப்பொருளைக் காணும் அறிவு எதனாலுண்டாகின்றது?
5. யாக்ஞவல்கியர் மனைவிக்குக் கூறியதைச் சுருக்கி யெழுதுக.
6. பரம்பொருளை எவ்வாறு அடையலாம்?

## 29.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை தருக:-**

நல்லரசும் வல்லரசும் இவ்வுலகில் எந்நாளும் உண்டு. நல்லரசு அறநெறியிற் சென்று நெடுங்காலம நிற்கும். வல்லரசு மறநெறியில் முனைந்து நிலைகுலைந்து அழியும். படைத்திறம் படைத்த வல்லரசுகள் வீழ்ந்துபட்ட வரலாற்றைப் பழங் காவியங்களிற் காணலாம். அரக்கர்கோனாகிய இராவணனும், அசுரர் வேந்தனாகிய சூரனும் வரம் பெற்றுயர்ந்த வல்லரசர் ஆயினும் ஈரமற்ற நெஞ்சினர். வீரமே விளைத்துத் திளைத்தவர். இலங்கையில் இராவணன் நிறுவிய அரசு இராமனது வில்லால் அழிந்தது. வீரமகேந்திரத்தில் சூரன் அமைத்த அரசு முருகனது வேலால் முறிந்தது. இலங்கை அழிந்த கதையைக் கம்பர் எழுதிய இராமாயணத்திலும், வீரமகேந்திரம் வீழ்ந்த வரலாற்றைக் கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணத்திலும் விரிவாகக் காணலாம். இரு கதைகளின் போக்கும், கவிகளின் வாக்கும் ஒற்றுமையுடையனவாகத் தோற்றுகின்றன.

இலங்கைமாநகரில் அரசுவீற்றிருந்த இராவணன் நெடுந்தவம் புரிந்தான். அதன்பயனாகப் பெருவரம் பெற்றான்; வரத்தாலும், வலிமையாலும் செருக்குற்றுத் தேவரையும் மூவரையும் வென்றான். மானிலமன்னர் அவன் படைத்திறங் கண்டு அஞ்சி ஒடுங்கி அடிபணிந்தார்கள். இத்தகைய வீரமன்னன் கும்பகருணன் முதலாயதம்பியரோடும், மேகநாதன் முத

லாய மைந்தரோடும் இலங்கையிற் சிறந்து வாழ்ந்தான். வானவர் அந்நாட்டில் வாயடங்கிப் பணி செய்தனர். எங்கும் அறம் தளர்ந்தது; பாவம் வளர்ந்தது. இராவணனைப் போலவே சூரனும் பெருந்தவம் இயற்றினான். அண்டங்கள் பலவற்றை ஆளும் வரம் பெற்றான்; விண்ணுலகின்மீது படையெடுத்து, வானவரைப் பிடித்து, வீரமகேந்திரத்தில் சிறை வைத்தான். சிங்கமுகன் முதலாய தம்பியரோடும் பானுகோபன் முதலாய மைந்தரோடும மன்னர் மன்னனாக விளங்கினான்.

இவ்வுலகில் மறம் முருகி அறம் வாடும்பொழுது இறைவன் திருவுருக்கொண்டு தோன்றி, மறத்தினை யறுத்து அறத்தினை நிலைநிறுத்துவான் என்பது ஆன்றோர் கொள்கை. அதற்கேற்ப அரக்கர்கோன் செய்த கொடுமையால் இராமன் அவதரித்தான். அசுரர்கோன் இழைத்த தீமையால் முருகன் தோன்றுவானாயினான். அறமே உருவாய சீதையைச் சிறையினின்றும் மீட்பதற்கு இராமனது விற்படை எழுந்தது சயந்தன் முதலிய வானவரைச் சிறைமீட்பதற்கு முருகனது வேற்படை எழுந்தது. இங்ஙனம் வில்லும் வேலும் அறத்திற்குத் துணையாகநின்று மறத்தினை அறுத்த சரித்திரம் இருகாவியங்களிலும் விளக்கப்படுகின்றது.

[வேலும் வில்லும்]

1. நல்லரசு எத்தன்மையது? வல்லரசு எப்படிப்பட்டது?
2. அரக்கர்கோன் யாவன்? அசுரர் வேந்தன் யார்?
3. அரக்கர்கோன் அரசு எதனால் அழிந்தது? அசுரர்கோன் அரசு எதனால் முறிந்தது?
4. இலங்கை அழிந்த கதையைக் கூறும் நூல் எது? வீரமகேந்திரம் வீழ்ந்த கதையை உரைக்கும் நூல் யாது?
5. இராமபிரானின் அவதாரத்திற்குக் காரணமென்ன? முருகப்பெருமான் தோன்றிய நோக்கமென்னை?

## 30.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை தருக:-**

தாபசியின் பேச்சைக் கேட்ட நானும் கண்ணீர் பெரிதும் உகுத்து இரகசியமாகக் கூறினேன்: "அம்மா, அஃதப்படியானால் ஆறுதலடைவாயாக. அத்தருணம் நீ புத்திரனைத் தேடுவதற்காக ஒரு முனிவரை வேண்டிக்கொள்ளவில்லையா? அவரும் அப்புத்திரனைத் தேடியடைந்து அவனை வளர்த்துவிட்டார். அது நீண்ட கதை. அது இப்பொழுது எதற்கு? அப்புத்திரன் நான்தான். அந்த விகடவர்மனை எவ்வாறாயினுமடைந்து அவனைக் கொன்றுவிட என்னால் முடியும். ஆனால் அவனுக்குச் சகோதரர் பலர். குடிகளும் கிராம மக்களும் அவன் பக்கந்தான் சேர்ந்திருக்கிறார்கள். என்னை இந்தப் பக்கத்தில் இன்னான் என்று எவரும் அறியார். அப்படியானால் மற்றவர்களைப் பற்றிக் கூறியென்ன? ஆனபடியால் இந்த விடயத்தை உபாயத்தினால் முடிப்பேன்" என்று கூறினேன். அந்தக் கிழவி அழுதுகொண்டு என்னை அணைத்து உச்சிமோந்தாள். பின்னர் தளதளத்த குரலில் "குழந்தாய்! நீடு வாழ்வாயாக. உனக்கு நன்மையுண்டாக விதி இன்றுதான் உன்மீது அருள்புரிகிறது. இன்றுதான் பிரகாரவர்மன் விதேக நாட்டுக்கு அதிபதியாகப் போகிறான். ஏனெனில் கடக்கமுடியாத சோகக் கடலைக் கடக்க நீண்ட பெரிய புயங்களோடு இன்று நீ வந்தாய். ஆகா, பிரியம்வதை இராணியாரின் பாக்கியம் பெரிதே" என்று மகிழ்ச்சி பொங்க அச் செவிலித்தாய் கூறிக் குளிக்கச்செய்து போசனம் முதலியன தந்து ஆதரித்தாள்.

கபடமின்றிக் கருமம் சித்தியடைய மாட்டாது. பெண்களே கபடத்தின் விளைநிலம். அந்தப்புரச் செய்திகளை இப்பொழுது இவள்மூலமே அறிந்துகொண்டு அதன்படி ஏதாவதொரு சூழ்ச்சியைச் செய்வேன் என்று எண்ணினேன். இவ்வாறு நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில்

பெரிய கடலிலிருந்து வெளிக்கிளம்பும் சூரியனுடைய குதிரைகளின் மூச்சினால் கலக்கப்பட்டதுபோல இரவு நீங்கிற்று. கடலின் மத்தியில் இருந்ததால் குளிர்மை யடைந்ததுபோலவெப்பம் தணிந்து சூரியன் தோன்றினன் நான் நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு என்செவிலித்தாயைப் பார்த்தேன். "அம்மா, அந்தமூடன் விகடவர்மனுடைய அந்தப்புரச் செய்திகளை அறிவாயா?" என்று நான் அவளைக் கேட்டது கேட்கவில்லை, ஒரு பெண் அங்கே தோன்றினாள். அவளைக் கண்டதும் என்னுடைய தாதி "மகளே, புட்பரிகா, பார் அரசகுமாரனை, இவனைக் கருணையின்றிக்காட்டிலேவிட்டு விட்டேன். அவன் மறுபடியும் திரும்பி விட்டான்" என்றாள். மிக்கமகிழ்ச்சியினால் ஆட்கொள்ளப்பட்ட அவள் நெடுநேரம் அழுது பெரிதும் புலம்பிப் பின்னர் அமைதியடைந்தாள். அந்தப்புரச் செய்திகளைக் கூறுமாறு தாய் பணிக்கவே அவள் "அரசகுமாரனே! காமரூபத்தரசனான கலிந்தவர்மன் மகளான கற்பசுந்தரி கலைகளிலும் அழகிலும் அப்சரமாதரைத்தானும் வென்றவள். தன் கணவனை வெறுத்திருக்கிறாள். விகடவர்மனோ பலபத்தினிகளை யுடையவனாயிருந்தும் அவள்மீதே பெருகிய காதலுடையவனாயிருக்கிறான்" என்று கூறினாள். நான் அவளிடம் "கற்பசுந்தரியிடம் நான் தரும் வாசனை பொருந்திய மாலையோடு அணுகி, அவளுடைய கணவனுக்கு அவளிடம் வெறுப்பை உண்டாக்கு தமக்கேற்ற கணவரையடைந்த வாசவதத்தை முதலியோரை வருணிப்பதன்மூலம் அவள் பச்சாத்தாபம் அடையச்செய். இவ்வாறு அவளுடைய பொறுமையை வளர்ப்பாயாக" என்று கூறிப் பின் அந்த முதியவளிடம் கூறினேன். 'இவ்வாறே நீயும் வேறு வேலையின்றி அந்த அரசியோடு அகலாதிருக்க வேண்டும் ஒவ்வொருநாளும் அங்கே நடப்பவற்றை அறிந்து எனக்குக் கூறவேண்டும். நான் கூறியபடி இவள் நல்ல பலனை அடையும்வரை அவளை நிழல்போல விட்டு நீங்காதிருப்பாயாக" என்று கூறினேன்.

[G. C. E. 1963]

1. இந்தக் கதையில் வருகிற கிழவி யாராயிருக்கலாம்? அவளோடு உரையாடுபவன் யார்? அவன் யாரைக் கொல்லுதற்குச் சூழ்ச்சி செய்கிறான்?

2. இந்தச் சம்பாஷணையின் முற்பகுதி இரவிலா பகலிலா நடைபெறுகிறது? அரசகுமாரனுக்கு இளமையில் என்ன நடந்தது? அவனை யார் காப்பாற்றிவந்தார்கள்.

3. அங்கே வந்த பெண்ணின் பெயரென்ன? பிரகாரவர்மனுக்கும் விகடவர்மனுக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டது?

4. கற்ப சுந்தரி யார்? அவளைப் பெறுவதற்கு அரசகுமாரன் என்ன சூழ்ச்சி செய்கிறான்?

5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுக.
நீடுவாழ்வாய், காலைக்கடன், அந்தப்புரம், செவிலித்தாய், பச்சாத்தாபம்.

## 31

பின்வரும் செய்யுள்களின் பொருளை உரைநடையில் எழுதுக:-

1. நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

2. களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

3. காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே— காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

4. இன்சொல் விளைநிலமா யீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

## 32.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக:-**

அடிப்படைக் கல்வி இன்று எத்தன்மையதாயிருந்தாலும் அதன் மெய்ப்பொருள் யாது என்று "நான்" என்ற முனைப்பின்றி ஆலோசித்தேன். "யாருக்குக் கல்வி?" என்று அருகிலிருந்த அன்பர் அழகரைக்கேட்டேன். "குழந்தைக்குத்தான் கல்வி இதிலென்ன ஐயம்" என்ற பதில் பளிச் சென்றுவந்தது "குழந்தைவளர்ச்சி நிறைந்ததா?". "இல்லை, இப்போதுதான் வளர்வது." "எதில் வளர்வது?" "உடலில், அறிவில், உள்ளத்தில் வளர்வது" "உடம்பு ஒருநேரத்திலும், அறிவு மற்ருெரு நேரத்திலும், உள்ளம் பிறிதொரு நேரத்திலும் வளர்கிறதா?" இல்லை, தனித்தனியாக வளரவில்லை. மூன்றுஞ் சேர்ந்துதான், இணைந்துதான், வளர்கின்றன. ஒவ்வொரு நிமிடமும் ஒரேஅளவு வளர்கிறது. "மூன்றையும் ஒரே அளவையில் எப்படி அளக்கமுடியும்! கத்தரிக்காயையும் கதரையும் ஒரே அளவையால் அளக்கிறோமா?" என்று எதிர்க்கேள்வி கேட்டார் அன்பர் அழகர். "இல்லையே, ஆனாலும் ஒன்றை உணர்வோம். அவ்வப்போது நேரிடும் தூண்டுதலுக்கு ஏற்ப ஒருவேளை உடல் வளர்ச்சியும் மற்ருெருவேளை உள்ளச் செப்பமும் அதிகமாக நிகழலாம்" என்று தொடர்ந்தார். குழந்தையைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். குழந்தை வளர்ப்பு எதையொட்டி இருக்க வேண்டும்? அதன் இயல்பையொட்டித்தானிருக்க வேண்டும். "ஏன் அப்படி?" "புடலங்கொடி படரப் பந்தலும், தக்காளிச் செடியைத் தாங்கக் குச்சியுந்தானே அமைக்கிறோம். அதைப் போலத்தான்."

[G. C. E. 1961]

1. குழந்தையின் மூவித வளர்ச்சி எவை?
2. இவ்வளர்ச்சிகள் எவ்வாறு உண்டாகின்றன?
3. பந்தலும் குச்சியும் எதை விளக்க எடுத்துக் காட்டப்பட்டுள்ளன?
4. பொருள் எழுதுக:- மெய்ப்பொருள், உள்ளச் செப்பம், முனைப்பு
5. இவ்வுரைப் பகுதியில் பொதுப்படையாக ஆராயப்படும் விடயம் யாது?

## 33.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

பாண்டியர் எல்லாரும் சைவர். பாண்டி நாட்டை உமாதேவியார் மீனாட்சியம்மை என்ற பெயருடன் ஆட்சி புரிந்தனர் என்பதும் சிவபெருமான் அவ்வம்மையாரை மணந்து சோமசுந்தர பாண்டியர் என்னும் பெயருடன் அந்நாட்டை அரசாண்டனர் என்பதும் புராணச் செய்திகளாகும். பாண்டி நாட்டு மக்களுள் பெரும் பகுதியினர் சைவ சமயத்தினர்; ஏனையோர் வைணவராகவும் சமணராகவும் பௌத்தராகவும் இருந்தனர். பாண்டி நாட்டூர்களில் சிவாலயங்களும் விண்ணகரங்களும் அருகன் கோட்டங்களும் புத்தப் பள்ளிகளும் இருந்தன. பாண்டியரும் சமயப்பொறுமை யுடையவராய் எல்லா மதத்தினரையும் ஆதரித்து அவர்கள் கோயிலுக்கு நிபந்தங்கள் விட்டுள்ளனர். எனவே சங்ககாலத்தில் சமயச் சண்டைகளும் அவற்றால் மக்களுக்குள் உணர்ச்சி வேறுபாடுகளும் நிகழவில்லை என்பது தெள்ளிது ஆயினும் பிற்காலங்களில் சில இடங்களில் சமயப் பூசல்கள் நேர்ந்துள்ளன என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் சமயத்தினை யாண்டும் பரப்ப வேண்டும் என்றெண்ணி முயன்று வந்தமையே சமயப் பூசல்களுக்குக் காரணமாகும். சிவாலயங்களிலும் விண்ணகரங்களிலும் திங்கள் தோறும் முழுமதி நாட்களில் திருவி

ழாக்கள் நடைபெற்று வந்தன. அரசர்களும் தலைவர்களும் தாம்பிறந்த நாட்களில் விழாக்கள் நடத்துவதற்கு இறையிலி நிலங்களும் பொருளும் அளித்துள்ளனர். அன்றியும் தேவாரப் பதிகங்களையும் திருவாய் மொழியையும் சைவ வைணவ ஆலயங்களில் நாள்தோறும் இன்னிசையுடன் ஓதுவதற்கு அன்னோரால் நியந்தங்கள் விடப்பட்டிருந்தன. இசை, நடனம், கூத்து முதலான கலைகளின் வளர்ச்சிக்கும் கோயில்கள் அக்காலத்தில் பெரிதும் உதவிபுரிந்து வந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஊரானோர் தேவகுலம் என்பதற்கேற்பப் பாண்டிநாட்டில் பல செங்கற் கோயில்களையும் கற்றளிகளையும் வேந்தரும் பிறரும் எடுப்பித்து வந்தமையின் சிற்பம் ஓவியம் இவற்றில் வல்லவர்களும் செப்புத் திருமேனிகளும் கற்படிமங்களும் அமைப்பவர்களும் அணிகலன்கள் செய்பவர்களும் நன்கு ஆதரிக்கப்பட்டனர். எனவே இக்கலைகளும் ஆலயங்களால் வளர்ச்சியுற்று வந்தன எனலாம். அந்நாளில் அன்பர் பலர் ஆலயங்களுக்குப் பெரும் பொருள் அளித்து வந்தமையின் அவை செல்வ நிலையில் சிறந்து விளங்கின. ஆதலால் இக்காலத்துள்ள ஐக்கிய சங்கங்கள் போல் கோயில்களும் பொது மக்களுக்குக் கடன் கொடுத்து உற்றுழி உதவி வந்தன. அவ்வாறு கொடுக்கப்பெற்ற கடன் தொகைகளுக்குப் பலிசையாகக் கோயில்களுக்கு வேண்டப்படும் பண்டங்கள் வாங்கப் பெற்று வந்தன.

நாள்தோறும் உச்சியம் போதில் அடியார்களுக்குக் கோயில்களில் அன்னம் அளிப்பது வழக்கம். சில ஆலயங்களில் புத்தகசாலைகள் இருந்தன அவற்றைப் பாதுகாத்தற்குப் பொதுமக்கள் பொருளுதவி புரிந்துள்ளனர் என்பது சில கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. கோயிற் காரியங்களைச் சில ஊர்களில் அரசாங்க அதிகாரிகளும் வேறுசில ஊர்களில் ஊர்ச்சபையினரும் நடத்திவந்தனர் என்று தெரிகின்றது. அரசர்களும் பிற அரசியல் தலைவர்களும் நாட்டைச் சுற்றிப்பார்த்து வருங்கால் கோயில்களும் மற்ற அறநிலையங்களும் திட்டப்படி நடத்தப்பெற்று வருகின்றனவா என்று கண்காணித்து வந்தனர். தவறுகளும் ஊழல்களும்

காணப்படின் கண்ணேட்டமின்றித் தக்கதண்டனை விதிப்ப துண்டு.

கோயில்தோறும் காணப்படும் எண்ணிறந்த கல்வெட்டுக்கள் நம் நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கு ஏற்ற கருவிகளாக அமைந்திருக்கின்றன. கோயிலைப் புதுப்பிக்க விரும்புவோர் முதலில் அரசாங்க உத்தரவுபெற்று கல்வெட்டுக்களைப் படியெடுத்து வைத்துக்கொண்டு திருப்பணி முடிந்தபின்னர் அதிகாரிகள் குறிப்பிட்ட இடங்களில் அவற்றை மீண்டும் எழுதுவித்தல் வேண்டுமென்பது அரசரது ஆணையாகும்.

[பாண்டியர் வரலாறு]

1. பாண்டிநாட்டில் பழையகாலத்தில் சமயச் சண்டைகள் நிகழவில்லை என்பது எவ்வாறு அறியப்படுகின்றது?
2. அக்காலத்துக் கோவில்களால் வளர்ச்சியடைந்த கலைகள் யாவை?
3. சிற்பக்கலை எவ்விதம் வளர்ச்சியடைந்தது?
4. கோவில்களின் மூலம் பொதுமக்கள் அடைந்த நன்மைகளைக் கூறுக?
5. தவறுகளும் ஊழல்களும் கோவில்களில் நடவாது அக்காலத்து நடத்தி வந்தவர் யாவர்?
6. கல்வெட்டுகளின் சிறப்பு யாது? அவை எவ்வாறு பாதுகாக்கப்பட்டன.
7. கீழ்க்காணும் சொற்களை விளக்குக:- விண்ணகரம், சமயப் பொறுமை, தேவகுலம், உற்றுழி, திட்டப்படி, கண்ணேட்டமின்றி, படியெடுத்தல்.

## 34.

**பின்வரும் செய்யுள்களின் பொருளை உரைநடையில் எழுதுக.**

1. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

2. தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கோடையாற்
கண்ணீர்மை மாருக் கருணையாற்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்ருற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

3. பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்ருகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலும் தோன்ரு துணர்வு.

4. வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற கவலைபடே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி.

## 35.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க்காணும் வினுக்களுக்கு விடை தருக:-**

எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்வதே கல்வி என்று சொல்லும் வழக்கம் இப்பொழுது நமக்கிடையில் இருந்து வருகிறது. ஆனல் பண்டைக்காலத்தில் நம் நாட்டில் பல பேர் எழுதவும் படிக்கவும் தெரியாமலேயே நல்ல குடிமக்களாக இருந்து வந்திருக்கின்றனர். நல்வாழ்க்கைக்குரிய பயிற்சியைத்தான் உண்மையில் கல்வி என்று சொல்ல வேண்டும். நம் நாட்டுப் பெண்மக்களிடத்து எழுதவும் படிக்கவும் தெரிந்துகொள்ளுதல் என்னும் கல்வி மிக அண்மையில் வந்துள்ளது இத்தகைய கல்வி வருவதற்கு முன்பு இந்தியப் பெண்மக்கள் எல்லோரும் பண்பிலே கீழ்த்தரத்தில் இருந்தார்களென்று பகரலாகாது. இன்றைக்கும் இந்தியப் பெண்மக்களுக்கிடையில் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டவர்களையும் தெரியாதவர்களையும் சீர்தூக்கிப் பார்க்கலாம் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் பெண்மையில்

கீழ்மையுற்றிருக்கிறார்களென்று இயம்பலாகாது. ஒருவிதத்தில் நவீனக் கல்வி கற்றவர்களைவிட அதைக் கல்லாத பெண்மக்களே பெண்மையில் மேன்மையுற்றிருக்கின்றனர். இதே கூற்றை பாமரர்களைப் பற்றியும் பகரலாம். இந்தியப் பாமரர்களிடத்து ஓரளவு பண்பாடு உண்டு. அது வழிமுறை வழிமுறையாக வாழ்க்கைப் பயிற்சியாகவந்துள்ளது; எனவே எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டவர்களெல்லாம் பண்பில் உயர்ந்தவர்களென்றும் தெரியாதவர்களெல்லாம் பண்பில் தாழ்ந்தவர்களென்றும் பகரலாகாது கல்வியென்பதே வாழ்க்கையைப்பற்றிய பயிற்சியாக அமையவேண்டும். நன்கு வாழத்தெரிந்து கொண்டவர்களெல்லாம் கல்வி கற்றவர்களாகின்றனர். கல்வியின் அடிப்படைத்தத்துவம் ஒன்றை கண்டு ஞாபகத்துக்குக் கொண்டுவரவேண்டும். தன் மனதில் புதைந்திருக்கும் திறமைகளையெல்லாம் தோற்றத்திற்குக் கொண்டுவருவதே கல்வி. வித விதமான திறமைகள் எல்லா உயிர்களிடத்திலும் இருக்கின்றன. மற்ற உயிர்களை விட மனிதனே திறமை மிக வாய்க்கப்பெற்றவனாக இருக்கிறான். பயிற்சியின் மூலம் சிற்றுயிர்களையும் மேல்நிலைக்குக் கொண்டுவரலாம். இனி பயிற்சியின் மூலம் மனிதனை மிகவும் உயர்ந்தநிலைக்குக் கொண்டுபோய் விடலாம். எனவே கல்விப்பயிற்சிக்கு மற்ற உயிர்களைவிட மனிதன் தகுதிமிக வாய்க்கப் பெற்றவன். திறமையைத் தோற்றத்துக்குக் கொண்டுவருவதில் அவன் எட்டும் உயர்வை அளவிடமுடியாது. தக்க சந்தர்ப்பங்களை அமைத்துவிட்டால் பலவிதமான ஆற்றல்களிலே மனிதன் உன்னதமான நிலையை எட்டிவிடுவான்.

> தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு என்பது பொய்யா மொழி
> [கல்வி]

1. கல்வியென்றால் என்ன என்பதை விளக்குக?
2. கல்லாதவர்களும் பண்புடையவர்களாய் இருக்கலாமென்பதை இரண்டு உதாரணம் கூறி விளக்குக?
3. மனிதனை எவ்வாறு உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரலாம்?

4. உடலுக்கும் அறிவுக்கும் உள்ள வேறுபாடு யாது?
5. கல்வி கற்கும்போது ஆசிரியர் செய்யும் வேலையாது?
6. மக்கள் இயல்புகள் ஆசிரியரின் உதவியால் வளர்ச்சியடைவதை விளக்கக் கூறப்பட்டிருக்கும் உவமையாது?
7. பின்வருவனவற்றை விளக்குக:-
அண்மையில், சீர் தூக்கிப் பார்த்தல், பண்பாடு, வியாபகப் படுத்துதல், சந்தர்ப்பக் குறைவு.

## 36.

**பின்வரும் செய்யுள்களை வாசித்துக் கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இப்போழு தெம்ம ஞோரலியம்புதற் கெளிதேயாரும்
செப்பருங் குணத்தி ராமன்திருமுகச் செவ்விநோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்போழுதலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா.

மன்னவன் பணியன்றாகி னும்பணி மறுப்பனோவென்
பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்றதன்றோ
என்னினியுறு தியப்பால் இப்பணிதலை மேற்கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்கொண்டேன்

1. இயம்புதற்கு எளிது எது? யாரால்?
2. அலர்ந்த செந்தாமரையினை ஒத்திருந்தது யாது? எப்பொழுது?
3. செந்தாமரையினை வென்றது எப்பொழுது?
4. "நும்பணி மறுப்பனோ?" இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
5. மன்னவன் பணியாது? "நும்" என்பது யாரைக் குறிப்பிடுகின்றது?

6. பின்னவன் பெயரென்னை?

7. "தலைமேற் கொண்டேன்" எவற்றை?

8. "இன்றே போகின்றேன்" யாரால்? எங்கு போவதாகக் கூறப்பட்டது?

9. (i) "பெற்ற செல்வம்" இதன் பொருள் யாது?

(ii) பதப்பொருள் தருக:- செப்பரும், செவ்வி, ஒப்பது, பணி, பின்னவன், மின், கானம்.

(iii) பிரித்தெழுதுக:- இயம்புதற் கெளிதே, பணியன் றுகில், என்னினி, மின்னொளிர், செப்பரும்.

10. செய்யுள்களின் பொழிப்பை உரைநடையில் எழுதுக.

## 37.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை எழுதுக:-**

குமரகுருபர சுவாமிகளுடைய செய்யுட்களில் தனிச் சிறப்புப் பெற்றுவிளங்குவது அவற்றின் இன்னோசையே யாகும். ஏனைப் பாட்டுக்களிலிருந்து இவருடைய செய்யுட் களைச் செவிப்புலன் கொண்டே வேறுபடுத்திவிடலாம். இவற் றைக் கேட்கும்போது நமக்குத் தென்பாண்டி நாட்டுப் பொருநை நதியின் ஓட்டம் ஞாபகத்துக்கு வருகிறது. சொல் லின்பத்தை விளைவிப்பனவாகிய கருவிகள் அனைத்தும், கம் பீரமாகச் செல்லும் இவருடைய செய்யுள்கள் நடையில் நன்கு அமைந்துள்ளன. விருத்தங்களிலும், வெண்பாவிலும் இவ ருக்கே உரிய ஓசைநயம் மேம்பட்டு விளங்குகின்றது. அக வல்களிலும், வேறு செய்யுட்களிலும் இவருடைய கருத்துக் கள் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளன.

தமிழில் இவருக்கு இருந்த அன்பு அளவிடற்கரியது. இறைவன்பால் அன்பையும், அன்பர் தொடர்பையும், துற வுள்ளத்தையும் வேண்டும் இவ்வாசிரியர் உலகியற் பொருள்

களில் எதனையும் விரும்பவில்லை. ஆயினும் சொல்விற்பனமும் கவிசொல்லவல்ல நல்வித்தையும் வேண்டுமென்ற வேட்கைமாத்திரம் இவரை விடவில்லை. தமிழினிடத்தே இம்முனிவர் தெய்வத்தன்மையைக் கண்டனர். அதனைத் தெய்வத்தமிழ் என்று பாராட்டுகின்றனர். தாம் பாராட்டுந் தெய்வங்களையெல்லாம் தமிழ்த்தொடர்பும் தமிழின்பால் வேட்கையுமுடையவர்களாகக் கூறுகின்றனர். முத்தமிழுக்குச் சிவபெருமானே பயனாக உள்ளாரென்பது இவர் கொள்கை.

தமிழின் நலமுணர்ந்து தமிழ்மாலை புனைந்து உவக்கும் குமரகுருபரர் வடமொழிக்கு உரிய நன்மதிப்பையும் அங்கங்கே வெளிப்படுத்துவதில் தவறவில்லை. சிறப்பாக வேதங்களைப் பலவாறு இவர் பாராட்டிச் செல்கின்றார். சில இடங்களில் மறைகளின் பழமைப் பண்பும், தமிழின் புதுமைக் கவினும் ஒருங்கே புகழப் பெறுகின்றன.

தமிழின்பால் அன்பும் மற்றக்கலைகளில் விருப்பமும் உடைய இம்முனிவர் எழுத்துமுதலா மைந்திலக்கணமுந் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமையுடையவர். தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களில் இவர் பயிற்சியுடையவரென்பதற்கு அறிகுறியாக இவர் செய்யுட்களிற் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

தவத்தாலும் அறிவாலும் முதிர்ந்த இம் முனிவர்பிரான் உலகினருக்கு உறுதி பயக்கும் அறம் பொருளின்ப வீடுகளாகிய நால்வகைப் பொருளையுங் குறித்துப் பல அரிய நீதிகளை எடுத்து உணர்த்துகின்றார். நீதிகளைத் தனியே எடுத்து நீதிநெறி விளக்கத்தில் உணர்த்தியதன்றி, மற்ற இடங்களிலும் சில வகையில் அமைத்துத் தெரிவிக்கின்றார்.

குமரகுருபரர் கருவிலே அருளுடையவர்; பிறக்கும் போதே அருள் கூட்ட நல்லிளமையில் தமிழறிவும் தெய்வபத்தியும் வாய்ந்து பலகலையும் அறிந்து தலவழிபாடு செய்து ஞானாசிரியரது உபதேசம் பெற்றார். புலமையாற் பெற்ற

பெருமையோடு தவவொழுக்கத்தாற் பெற்ற பெருமையும் சேர்ந்து 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பதுபோல இவருடைய சிறப்பை மிகுதியாக்கியது. இவர் ஒரு சிறந்த பக்தர், நிறைபுலமையுடைய நாவலர், உலகியலறிந்த பேரறிவாளர். உயர்குணம் நிறைந்த தவச்சீலர், பிறருக்கு நல்லுரை நவிலும் பெரியார்.

[குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு]

1. குமரகுருபர சுவாமிகளுடைய செய்யுட்களின் தனிச்சிறப்பு யாது? அதை எவ்வாறு உணர்ந்துகொள்ளலாம்?
2. அவருடைய சொன்னயத்தை விளக்கப் பயன்படுத்தப்பட்ட உவமை யாது?
3. இவருடைய பல்வேறுவகைச் செய்யுட்களிலும், காணப்படும் சிறப்புககள் யாவை?
4. துறவியான இவர் விட்டுத்துறவாத ஆசை யாது?
5. தமிழினிடத்தே இப்பெரியார் கண்ட பெருமை யாது? அதை எவ்வாறு எடுத்தியம்புகின்றார்?
6. 'பொன் மலர் நாற்றமுடைத்து' விளக்குக.

அல்லது

கீழ்க்காணும் சொற்களின் கருத்தைத் தருக:-

செவிப்புலன், கம்பீரமாக, உலகியற் பொருள், சொல்விற்பனம், பாராட்டுதல், நலமுணர்தல், மேற்கோள், கருவிலே அருளுடையவர்.

## 38.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக:-**

'நாவல்' என்ற ஆங்கிலச்சொல் முதலில் புதுமையையே குறித்தது. பின்பு வழக்கு வேறுபாட்டால், அச்சொல் அசாதாரணத்தையும் வியப்பையும் குறித்து நிற்றலேயல்லாமல், வியப்பைத்தரும் நூதனக்கட்டுக் கதையாகும் ஒருவித நூலுக்குக் காரணப்பெயராகவும் வழங்குகின்றது. இவ்வித நூல்களில் அசாதாரண அற்புத சம்பவங்களே மிகுந்துள்

னவற்றை, 'உரோமான்ஸ்' என்றும், உலகவாழ்க்கையைக் கண்ணுடிபோற் பிரதிபலித்துப் பெரும்பாலும் அனுபவத்தோடொத்து நிகழும் கதைகளை 'நாவல்' என்றும் மேல்நாட்டார் கூறுவர். பிற்கூறிய நாவல் வகுப்பில், சரித்திர நாவல், சமுகநாவல், மதசம்பந்தமான நாவல், உயர்தர வாழ்க்கை நாவல், கீழ்த்தர வாழ்க்கை நாவல், மனோதத்துவ ஆராச்சி நாவல், விஞ்ஞான நாவல் எனப் பல பிரிவுகள் உள்ளன. ஆங்கிலத்தில், நாவல்கள் வசன நடையிலேயே எழுதப்படுகின்றன. இவை சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களாகக் கையாளப்பட்டு வந்தாலும், கடைசி ஐம்பது ஆண்டுகளாகவே மிகப் பரவிச் செழித்தோங்கியுள்ளன. இவ்வித நூல்கள் ஆண்டாண்டுதோறும் ஆயிரக்கணக்காக வெளியிடப்படுவதுமன்றி, பெயர்போன நாவலாசிரியர்களால் இயற்றப்படும் நாவல்கள் வெளியாகிச் சிலமாதங்களுக்குள், விலையாகியும் விடுகின்றன. பொழுது போக்குதற்குரிய ஒரு சில்லறை நூலாக இதை மதித்திகழாது, பேரறிஞர்களும் புலவர்களும் கல்விமான்களுங்கூட இவ்வித நூல்களை இயற்றிப் புகழ் பெறுகின்றனர். ஆங்கில நாவல்களில் சிறந்தவை பிற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப் படுவதுபோல, பிறமொழிகளில் இயற்றப்படும் சிறந்த நாவல்களையும் ஆங்கிலேயர் தம் மொழியில் மொழிபெயர்த்துக் கொள்கின்றனர்.

வசன நூல்களே மிகமிகக் குறைவாயுள்ள நமது தமிழ் மொழியில் நாவலுக்குச் சமமான வசன நூல்கள் பழைய காலத்தில் ஒன்றேனுமில்லை. பின்பு, புராணக்கதைகள் சுருக்கமாகவும் விரித்தும் வசனநூல்களாக எழுதப்பட்டன; வடமொழி, ஆங்கிலம் என்பவற்றில் உள்ள கதைகள் சிலவும் மொழிபெயர்க்கப்பட்டன; ஆங்கில நாவல்களைத் தழுவிச் சில நாவல்களும் எழுதப்பட்டன. ஆனல் பிரேமகலாவதியமும், பிரதாப முதலியார் சரித்திரமுமே முதன் முதல் எழுதப்பட்ட நாவல்களாகும்; ஆயினும், பலகாரணங்களால் அவைகூட அப்பெயர்க்கு நன்கேற்றவை அல்ல. பிரதாப முதலியார் சரித்திரத்தை 'உரோமான்ஸ்' என்னும் அற்புதக்

கதையாகப் பாகுபடுத்தலே சாலச் சிறந்ததாகும். வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டாலும், ஒருசில அம்சங்களே அக் கதையில் மேலோங்கி நிற்பதை எவரும் உணர்வர். இராஜமையர் அவர்கள் இயற்றிய 'கமலாம்பாள் சரித்திரம்' என்ற நூலே தமிழில் வெளிவந்த முதல் நாவலாகும். அதைத் தொடர்ந்து மாதவையர் அவர்கள் தமது 'பத்மாவதி சரித்திரம்' என்ற நாவலைத் தமிழுக்குத் தந்துதவினர்கள்.

மற்றெல்லா உயர்தர நூல்களைப்போலவே, நாவலும், படிப்பவர் மனதைக் கவர்ந்து மகிழ்ச்சியூட்டுதலை முதல் நோக்கமாகவும், அத்துடன் நல்லறிவூட்டலை உட்கருத்தாகவும் கொண்டது. நாவலும், காவியத்தைப்போல வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் பிரதிபலித்துக் காட்டி அறிவூட்டுகிறது.

[பத்மாவதி சரித்திரத்தின் முகவுரை]

1. 'நாவல்' என்ற ஆங்கிலச் சொல்லின் கருத்தை முற்றுய்த் தருக.
2. 'நாவல்' என்னும் இலக்கியத்தின் தனிப்பண்பு யாது?
3. அவ்விலக்கியத்தின் நோக்கம் யாது?
4. ஆங்கிலேயர்களிடையே நாவல் இலக்கியம் பெரிதும் மதிக்கப்படுகிறது என்பதைக் காரணங்காட்டி நிறுவுக.
5. தமிழில் முதன்முதல் எழுதப்பட்ட வசன நூல்கள் யாவை?
6. விளக்குக:-
   வழக்கு வேறுபாடு, வியப்பு, பிரதிபலித்தல், உயர்தர வாழ்க்கை, கீழ்த்தர வாழ்க்கை, நாவல்களைத் தழுவி.

## 39.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினக்களுக்கு விடை எழுதுக:-**

தமிழரது கொள்கை ஒரு கடவுட்பேராறு. உலகம் தோன்றிய நாள்தொடங்கி உலகனைத்தையும் தன்னருட்

பெருவெள்ளத்தில் மூழ்கச்செய்து இன்பமூட்டி, அறிவுவிளக்கு எரிக்க விரைந்து போந்து, உண்மை முடிவு என முழங்கி, ஓடிவந்து கொண்டிருக்கிறது இந்தக் கடவுட்பேராறு. இந்த ஆறு, உள்ள பொருள் ஒன்றே யாதலின், ஒன்ருய்த் திரண்டு பரவுவதும் இயல்பேயன்ரே?

'ஒன்றே உள்ளது; உயர்ந்தோர் பலவகையாகப் பேசுகின்றனர்' என்பது திருமறை. ஊள்ளீடாய் உற்று நோக்குமிடத்து உயிருள் பொருளும், உயிரில் பொருளுமாய் ஒளிரும் உலகனைத்திலும் ஒரு பெரும்பொருளே உளதாதலைக் காணலாம். உண்மையாய், உண்மையில் ஒளிரும் அறிவாய், அவ்வறிவிலூறும் இன்பமாய்த்திகழ்வதே இதன் இயல்பாம். (சத்-சித் - ஆனந்தம்) எல்லாப் பொருளிலும் இவ்வியல்பு விளங்குதலின், இருப்பது இப்பொருளேயாம். உள்ளதாந் தன்மை எப்பொருளில் இல்லை? ஒருபொழுது பனிக்கட்டியாய்த் திரண்டு ஒரு பொருள் உளதாகிறது. மற்ருெரு பொழுது அப்பொருள் வடிவு மாறி, நீர் என்ற வடிவோடும் பெயரோடும் உளதாகின்றது. இன்னும் தாழ்த்தால் ஆவியாய் மாறி அவ்வடிவோடும் பெயரோடும் உளதாகின்றது. இவ்வாறு பொருள்கள் அழிந்தும் மாறியும் உழல்கையிலும் ஏதோ ஒரு வடிவோடும் பெயரோடும் இருத்தலால், உளதாந் தன்மை தனித்து நின்று, என்றும் விளங்குகிறது. அறிவு தான் எப்பொருளிடத்தில் இல்லை? அறிவாவது யாது? விளக்கமேயாம். பொருள்கள் அனைத்தும் நம்புலன்களுக்கோ, மனத்திற்கோ, விளங்கிக்கொண்டே எதிர்நிற்கின்றன. இன்பந்தான் எப்பொருளில் இல்லை? ஒவ்வொரு பொருளும் பயன் தருவதாய், இன்பவூற்ருய்ப் பொங்கி வழிகின்றது. எருவென இகழப்படுவதும் மருக்கொழுந்திற்கு உரமூட்டி, நறுநாற்றத்தை நாற்புறமும் வீசி நமக்கு இன்பமூட்டுகின்றது; கிழங்கையும் கனியையும் வளர்த்து வாய்க்கினிய உணவாய் இன்பம் ஊட்டுகின்றது. மக்களின் மறலியாம் நல்ல பாம்பும் தன்னுடைய காதலிக்கு இன்பமாகின்றது. துன்பமென்ற பொருளிலுமன்ரே இன்பம், வெள்ளமாகப் புரண்டோடுகின்றது. அதனை அறிந்த நம் பகைஞன் நமது

துன்பத்தில் ஓர் இன்பம் துய்க்கின்றான். இவ்வின்பவழியை உணராது நாம் இடர்ப்படுகிறோம். எனவே உண்மை அறிவின்ப வடிவான பொருள் ஒன்றே உள்ளது. ஆதலின் அப்பொருள் முழுதினையும் தன்னுட்கொள்ளவே தமிழரது கடவுட் பேராறு காவிரிக் கரையில் பரந்தெழுந்தது.

அங்ஙனம் ஒன்றாய் ஒளிரும் பொருளை அறியும் வழியோ நமது உள்ளத்தியல்பைப் பொறுத்தது. உள்ளமோ பொருள்களை அறிகிறது; தொழிலின்மேல் ஊக்கமாய் முயல்கின்றது. இன்புற்றும் சினந்தும் உள்ளக் கிளர்ச்சியால் பொங்குகிறது. உள்ளத்தின் செயலனைத்தையும் இம்மூன்று தலைப்பில் அடக்கிவிடலாம். உள்ளத்தின் அறிவோ, கல்வியால் நீண்டு வளர்கிறது. தொழிலுறு நிலையோ ஒழுக்கத்தால் உயர்ந்து ஓங்கி எழுகிறது. உள்ளக்கிளர்ச்சியும் அழகின் வயப்பட்டு அன்பாய் அகன்று இன்புறுகின்றது. நல்லறிவும், நல்லொழுக்கமும், நல்லழகும், நமது உள்ளத்தின் நாட்டமாகும். நாடநின்றபொருளோ உண்மையறிவின்பமேயன்றி வேறில்லை ஆகவே கல்விக்கடலையும், குணப்பெருங் குன்றையும், அழகுவெள்ளத்தையும் காணும்போதெல்லாம் அவற்றை இறைவனொளியின் மின்னற் பிழம்பெனக் கண்டு வழிபடுதல் வேண்டும். இவற்றின்வழியே, உண்மை அறிவின்பப் பெரும்பொருளை உணர்ந்து அதனோடும் ஒன்றுகின்றோம்.

[சம்பந்தரும் சமணரும்]

1. தமிழ் மக்களுடைய பழம்பெருங் கொள்கை யாது?
2. எல்லாத்திற்கும் மேலான பெரும் பொருளின் இயல்பு யாது?
3. பனிக்கட்டி, நீர், ஆவி இவைகளின் தோற்றம் எந்தவுண்மையை விளக்குகின்றது?
4. எல்லாப் பொருளிலும் இன்பம் உண்டு என்பதை உதாரணங்களோடு விளக்குக.
5. உள்ளத்தின் செயல்கள் யாவை?
6. இறையொளியின் பிழம்புகள் யாவை?

அல்லது

கருத்தெழுதுக:- ஒளிர்தல், உள்ளதாந்தன்மை, மறலி, உள்ளக்கிளர்ச்சி, தொழிலுறுநிலை, வயப்படுதல், நாட்டம்.

## 40.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்துக் கீழ்க்காணும் வினுக் களுக்கு விடை எழுதுக:-**

உழைப்பவர் குடிமக்கள்; உயிர்வாழ்வதற்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் குடிமக்கள். இவர்களுக்குத் துணையாக நின்று ஊக்கப்படுத்துவதே அரசாங்கத்தின் கடமை. உழைப்பவர்கள் தங்கள் பொருள்களைக் கொள்ளைகொடுத்துவிட்டு உடலும் உள்ளமும் சோர்வடையாமல் வாழும்படி பாதுகாப்பதற்கே அரசாங்கம் வேண்டும்.

இத்தகைய அரசாங்கம், மக்களால், மக்கள் நன்மைக்காக, மக்கள் நாகரிக வாழ்வு சிறந்து மேலோங்கி வளர்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது தான். இந்த அரசாங்கம் நடைபெறுவதற்கு உதவி செய்பவர்களும் குடிமக்களே ஆவர். குடிமக்கள் கொடுக்கும் வரியைக்கொண்டு தான் அரசாங்கம் நடைபெற்றுகவேண்டும்.

அரசாங்கத்தை நடத்துவோர் குடிமக்களின் குறைகளைப்பற்றிச் சிந்திக்காமல் தங்கள் இன்பத்தையும் தங்கள் அதிகாரத்தையுமே பெரிதாக எண்ணுவார்களானல், அவர்களால் நடத்தப்படும் அரசாங்கம் நிலேத்து நிற்காது. குடிமக்கள் வெறுப்புக்கும், அவமதிப்புக்கும் ஆளான எந்த அரசாங்கமும் இவ்வுலகத்தில் நிலேத்திருந்ததில்லே.

குடிமக்கள் கொடுக்கும் வரிப்பொருள் எந்த அரசாங்கத்துக்கும் முதன்மையான வருமானம். மக்களிடம் வரி வாங்கும்போது அவர்கள் மனங்கோணுமல் அவர்கள் சக்திக்கேற்றவகையில் வரிவாங்கவேண்டும். மக்களைக் கசக்கிப் பிழிந்து, பெரிவாரியான வரிகளை அவர்களிடமிருந்து வாங்கும் அரசாங்கம் நீண்டநாள் நடைபெறுது. வரிகொடுக்கும் மக்கள் கொஞ்சநாள் தான் கொடுப்பார்கள். இறுதியில் அவர்கள் தங்கள் உடைமைகளை இழப்பார்கள். உற்பத்தி செய்யமுடியாமல்போய் விடுவார்கள். வறுமையிலே ஆழ்ந்து

விடுவார்கள். இப்படிக் குடிமக்கள் கெட்டுப்போவதனால் அரசாங்கத்திற்கு வரும் வருமானமும் குறைந்து போய்விடும். இந்த உண்மையை உள்ளத்திற் கொண்டுதான் எந்த அரசாங்கமும் வரிவிதிக்க வேண்டும்.

பண்டைத் தமிழரசர்கள் குறைந்தவரி வாங்கிக் குடிகள் துன்புறாமல் பாதுகாத்து வந்தனர். இந்த மன்னர்களை மக்களும் மதித்துப் போற்றிப் புகழ்ந்து வந்தனர். சில மன்னர்கள் அறிவின்மை காரணமாக, அல்லது அவர்களுக்குத் துணைசெய்யும் அதிகாரிகளின் தந்நலங் காரணமாக, குடிமக்கள் மனம் கோணும்படி வரிவாங்க முனைவார்களாயின், அப்பொழுது புலவர்கள் மன்னனுக்கு அறிவுரை கூறித் திருத்துவார்கள். இத்தகைய நிகழ்ச்சியை விளக்கும் பல பாடல்களைப் பண்டைச் சங்க இலக்கியங்களில் பார்க்கலாம்.

[இலக்கியச் சோலை]

1. அரசாங்கத்தின் கடமை யாது?
2. அரசாங்கம் ஏன் தேவைப்படுகின்றது?
3. அரசாங்கம் தனதுவருமானத்தை எப்படிப் பெறுகின்றது?
4. வரி மக்களிடமிருந்து எப்படி வசூலிக்கப்பட வேண்டும்?
5. பண்டைத் தமிழரசர்கள் எவ்வாறு வரி வசூலித்தனர்?
6. இவ்வரசர்களின் பிழைகளை யார் திருத்தினர்?
7. இதை நாம் எப்படி அறியக்கூடியதாயிருக்கிறது?
8. மேல்வரும் சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைக்கவும்
   (i) கசக்கிப் பிழிதல் (ii) நிலைத்து நிற்றல்.
   (iii) மனங் கோணல் (iv) மதித்துப் போற்றல்.

## 41

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக:-**

உலக நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு, வள்ளல்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். வள்ளல்கள் பலவகையி

னர். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி ஒருவகை வள்ளல். பல்லாயிரம் கோடி ரூபாயை வாரி வழங்கி நிலைத்த நிறுவனங்களுக்கு அளந்து கொடுத்துப் பயனுறு அறங்களை அறிவுத் துறையில் செய்துவரும் வள்ளல்கள் ஆல்பிரட் நோபலும், போர்டும், இராக்பல்லரும். அவ்வப்போது, உலகப்படத்தைப் புரட்டிப்பார்த்து சின்னஞ்சிறு தீவுகளிலும் நோய் நீக்கவும் கல்வி புகட்டவும் அமைந்த நிலையங்களுக்கு உதவுவது நப்பீல்டு என்ற ஆங்கில வள்ளலின் வழக்கம் வாய்ப்பில்லாத, ஆனால் திறமை மிக்கவர்க்கு உயர் கல்வியளிப்பதற்காகப் பொருள் வழங்குவது செசில் ரோட்சின் வள்ளன்மை வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யும்போது தமக்குக் கார் ஓட்டியவனுக்குத் தங்கக் கடிகாரமும், சவரஞ் செய்தவனுக்கு ஐயாயிரம் ரூபாயும், சாலையில் செல்லும் கிழவிக்குப் பத்தாயிரமும் தருவது சாடி அரேபிய அரசரின் இயல்பு. இவர்களினின்றும் வேறுபட்டவர் வள்ளல் அழகப்பர். கொடுப்பதாக உறுதிகூறிவிட்டு, பிறகு அதற்கெனப் பொருளீட்டும் தனித்த சிறப்புடைய வள்ளல் டாக்டர் இராம. அழகப்பச் செட்டியார்.

தர்மம் பலவகைப்பட்டது. கோவை மாவட்டத்தில் பவானிக்கு அருகே காளிங்கராயன் வாய்க்கால் இருக்கிறது. இதை வெட்டியவர்கள் தாம் தர்மத்துக்காக வெட்டிய வாய்க்காலிலிருந்து தண்ணீரை எடுத்துக் குடித்தால், தர்மம் செய்ததன் பயன் குறைந்து விடுகிறது, அதனுடைய புனிதத் தன்மை கெட்டுவிடுகிறது என்று கருதினார்கள். அதனால் அவர்கள் பவானிப் பகுதியைவிட்டு, தாராபுரம் பகுதியில் போய் குடியேறினர். இது கற்பனையன்று நடந்த நிகழ்ச்சி.

இத்தகைய ஒரு சிறப்பு அழகப்பச் செட்டியாருக்கும் உண்டு. தாமே பணங்கொடுத்து, பிறர்பெயரால் பல அறச் செயல்களை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். சண்முகம் செட்டியார் நூல்நிலையம், மான்கொம்பு ஆண்டி ஐயர் உணவு விடுதி, வீரப்ப அம்மான் உணவு விடுதி என்பனவும் சென்னையிலுள்ள மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் "நர்சரி ஸ்கூல்" என்பனவும் இவ்வாறு அழகப்பர் அமைத்தவையே

சில வள்ளல்கள் தொடங்கும் நிறுவனங்களில் தங்கள் காலத்திலும் பிற்காலத்திலும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தார்க்கும் இன்ன இன்ன உரிமைகள் இருக்கவேண்டும் என்ற ஏற்பாட்டை முதலில் செய்துகொள்வர். இது நாம் அறிந்தது; நாடு அறிந்தது. அழகப்பச் செட்டியார் எந்த அறத்தையும் அவ்வாறு செய்ததில்லை. காரணம் அவர் எண்ணியவுடன் எதையும் செய்தார். விரிந்து திட்டமிட அவருக்கு அவகாசம் இல்லை. அவர் வாழ்வு ஒரே ஓட்டம். ரயிலில் செல்லப் பணம் இல்லாவிட்டால் விமானடிக்கட்டைக் கடனுக்குப் பெற்று வானில் பறப்பார். கடிதம் போடுவதற்குக் காசு இல்லாவிட்டால் காசு கிடைத்தவுடன் கடிதம் எழுதி அதைத் தந்தியாக அடிப்பார்.

[பல்சுவைக் கட்டுரைகள்]

1. இங்கு கூறப்பட்ட வள்ளல்களின் பெயரைத் தரவும்.
2. அவர்கள் செய்த அறங்கள் என்ன என்பதை எழுதவும்
3. அழகப்பரின் தனிச்சிறப்பு என்ன?
4. காளிங்கராயன் வாய்க்கால் வெட்டியவர்கள் என்ன காரணத்திற்காக தாராபுரம் பகுதியில் போய் குடியேறினர்?
5. அழகப்பர் பிறர் பெயரால் அறநிலையங்களை நிறுவியதற்கு சான்றுகள் எவை?
6. மேல்வருவனவற்றைக் கொண்டு வசனங்கள் அமைக்கவும்

(i) அவகாசம் (ii) வள்ளன்மை (iii) வாரிவழங்கல் (iv) திட்டமிடல்.

## 42.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை தருக:-**

இவ்வுலகில் மனித சரித்திரத்திலே காணப்படும் மிகப் பெரிய உண்மை, அவனுடைய உலகாயத சாதனைகளல்ல; அவன் நிர்மாணித்து அழித்த இராச்சியங்களல்ல; ஆனால் யுகம் யுகமாக, உண்மையையும் நன்மையையும் சத்தியத்

தையும் பண்பையும் துருவித் துருவி ஆராய்ந்து அதனல் ஏற்பட்ட ஆன்ம வளர்ச்சியேயாகும். இத்தகைய ஆன்மிகத் தொடர்புள்ள பிரச்சினைகளில் எவரொருவர் பங்கெடுத்துக் கொள்கிருரோ, அவர் மனிதப் பண்பாட்டின் சரித்திரத்தில் நிரந்தரமான இடத்தைப் பெற்று விடுபவராகிருர். காலமானது தன்போக்கில் யாவரையும் மறந்ததே போல வீராதி வீரர்களையும் மறந்து புறக்கணித்துவிட்டது. ஆனல் துறவிகள் மட்டும் மறக்கப்படவும் இல்லை; புறக்கணிக்கப்பட்டதும் இல்லை. எஞ்சி நின்றவர்கள் அவர்களே. காந்தியாரின் பெருமை, அவர்தம் போராட்டம் மிகுந்த வீரவாழ்க்கையிற் காட்டிலும் புனிதமான வாழ்க்கை நடத்தி வந்ததிலும், அழிக்கும் சக்தி உச்சத்தில் நின்று கோரத் தாண்டவமாடிய காலத்தில் ஆன்மாவின் ஆக்கச் சக்தி, அதன் உயிரளிக்கும் பண்பு ஆகிய இவைகளை வற்புறுத்தி வந்ததிலுமே காணப்பெறும்.

தன் தளையைத் தகர்த்தெறிந்த இந்தியா தேசத்தின் எழுச்சிக்குக் காரணராய் மற்றவரைக் காட்டிலும் உலகத்திற்கு மகாத்மா காந்தி நன்கு தெரிந்தவராவர். அரசியல் வாதிகளுள் எவரும் பொதுவாக மதத்தினை தீவிரமாக எடுத்தாள்வதாகப் பெயர் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் ஒரு சார் மக்கள்மீது மற்றெருரு சாரார் சுமத்தும் கட்டுப்பாடும் ஏழ்மையும் எளிமையும் வாய்ந்த மக்களைச் சுரண்டுஞ் செயலும் மதத்தினல் ஏற்படக்கூடிய பலாபலனுக்குத் தொடர்பு இன்றி இருத்தலால் மதத்தை மிகத்தெளிவாகவோ அல்லது சரியாகவோ அனுட்டிக்கவும் விவரிக்கவும் முடியாது. ஆனல் அது காந்தியாருக்கு வாழ்க்கை முழுவதும் ஒட்டில்லாத முழுமையானதாகவே விளங்கிற்று.

[இந்தியப் பெரியார்கள்]

1. மனித சரித்திரத்தில் காணப்படும் மிகப்பெரிய உண்மை என்ன?
2. காலம் யாரைப் புறக்கணிப்பதில்லை என்று ஆசிரியர் கூறுகின்ருர்.

3. மகாத்மா காந்தியின் பெருமை எதில் காணப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது?

4. என்ன காரணத்திற்காக அரசியல் வாதிகள் மதத்தினைத் தீவிரமாக எடுத்தாளவில்லை?

5. பின்வருவனவற்றிற்குப் பொருள் எழுதுக.

(i) உலகாயத சாதனைகள் (ii) புறக்கணித்தல்
(iii) ஆக்கச் சக்தி (iv) தளையைத் தகர்த்தெறிதல்.

## 43.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும் வினாக்களுக்கு விடை தருக:-**

ஆத்திரங்கொண்டு அடித்துக் கொள்வது ஆண்மையாகாது. குருட்டுத்தனமாகக் குத்துச்சண்டையிலே குதிப்பது வீரமன்று. உடல்வன்மையாற் செய்யும் செயல்களை மட்டும் வீரத்தனம் என்று உயர்த்திக் கூறுவதிலே உண்மையில்லை. அநீதியை எதிர்ப்பது, அக்கிரமத்தை தலையெடுக்கவொட்டாமல் நசுக்குவது, அறத்தைப் பாதுகாப்பது, தனக்கு எத்தகைய ஆபத்து வருவதாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் நாடு நன்மையடைய உழைப்பது, நாட்டின் அமைதிக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க ஆண்மையுடன் உழைப்பது, இவை சிறந்த வீரத்தின் சின்னங்களாகும்.

தன் உள்ளத்தில் உண்மையெனப்பட்டவற்றை ஒருவருக்கும் அஞ்சாமல் உரைப்பது, அவ்வுரையைச் செயலிலே காட்ட முயற்சிப்பது, இவையும் வீரத்தின் விதைகள். உடல் வன்மையைக் காட்டிலும் உள்ளத்தில் உரம் பெற்றவர்களே ஒப்பற்ற வீரர்கள். உள்ளத்திலே உரமற்றவர்கள் கோழைகளாகத்தான் – பயங்காளிகளாகத்தான். எடுத்த செயல்களை வெற்றியுடன் முடிக்கும் திறமையற்றவர்களாகத்தான் காணப்படுவார்கள். ஆராய்ச்சியும், உண்மையறிவும், அஞ்சாமையும் உடையவர்களே மனோவலிமை பெற்றவர்கள். அவர்களால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

ஒருவன் உயர்ந்த மனிதத்தன்மையுடன் வாழ்வதற்கு மனவுறுதியே சிறந்த அடிப்படை. பணமோ பதவியோ மனிதத் தன்மையை உண்டாக்கிவிடமுடியாது. மனவலிமை அற்றவர்களைப் பணமும், பதவியும் ஆட்டிவைத்து அல்லற் படுத்தி மனிதத் தன்மையைக் கொள்ளை கொள்வதையும் பார்க்கிறோம். மனவுறுதி படைத்தவன் பணத்தையும் பதவியையும் தன் விருப்பப்படி ஆட்டிவைப்பான்; கோழையை மனவலிமை இல்லாதவனைப் பணமும் பதவியும் தமது வழியிலே இழுத்துச் செல்லும். மனிதத்தன்மைக்கு மாறான வழிகளிலே அழைத்துச் செல்லும். அவனை அவதிக்கும், அவமதிப்புக்கும் ஆளாக்கிவிடும். இவை கோழைத்தனத்துக்கும் குன்றாத வீரத்தனத்துக்கும் உள்ள வேற்றுமை.

[இலக்கியச் சோலை]

1. வீரத்தின் சின்னங்கள் எவையென ஆசிரியர் கூறுகின்றார்?
2. வீரத்தின் விதைகள் யாவை?
3. கோழைக்கும் வீரனுக்குமுள்ள வேற்றுமைகள் எவ்வாறு விளக்கப்பட்டிருக்கின்றன?
4. மன உறுதியின் சிறப்பு என்ன?
5. மேல்வருவனவற்றின் பொருளைத்தரவும்.

(i) அக்கிரமம் (ii) உரம் (iii) அல்லல் படுத்தல் (iv) ஆண்மை.

## 44.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க்காணும் வினுக்களுக்கு விடை தருக:-**

என்னைக் காணவேண்டுமென்று நீங்கள் எவ்வளவு ஆவலோடு இருந்தீர்களோ, அவ்வளவு நானும் உங்களைக் காண ஆவலோடு இருந்தேன். கோடீஸ்வரர்கள் தரும் பொருள் நான் நன்றியறிதலோடு பெற்றுக்கொண்ட போதிலும் வாழ்க்கைத் துறையில் காலெடுத்து வைப்பதற்கு முயன்று வருகிற சிறுவர் சிறுமிகளிடமிருந்து கிடைக்கும்

பணமே எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருவது உண்டு. அவர்கள் தருகிற நன்கொடை மிகச் சிறிய அளவினதாய் இருப்பினும் அதுதான் எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. இவ்விதம் நான் பெருமகிழ்ச்சி கொள்ளுவதற்கு இரு காரணங்கள் உண்டு. குழந்தை உள்ளம் படைத்த சிறுவர் சிறுமியர் கொடுக்கும் நன்கொடை உலக அனுபவமுள்ள அறிவாளிகள் என்று கருதப்படுகிறவர்கள் கொடுக்கின்ற நன்கொடையைக் காட்டிலும் அதிக நற்பயனைத் தரும் என்பது ஒன்று. இரண்டாவது காரணம், உங்களைப் போன்றோர் கொடுக்கிற நன்கொடை எனது பொறுப்பை மேலும் அதிகமாக்கிவிடுகிறது.

இந்தப் பணமுடிப்பில் அடங்கியுள்ள ஒவ்வொரு ரூபாயும், வெளியுலகத்துடன் தொடர்பில்லாத எத்தனையோ கிராமங்களில் வசிக்கும் பெண்களுக்கு, கால்வயிற்றுக்குக் கூட உணவின்றித் திண்டாடும் அந்தப் பெண்களுக்கு வேலைதேடிக் கொடுக்க உபயோகிக்கப்படும். அவ்விதம் வேலை செய்கிறவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு அணுவீதம் கிடைக்கும். அவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஒருநாளாவது, இரண்டுவேளைக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. இந்தியாவில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் நேரில் நான்கண்ட அனுபவத்திலிருந்தே இதைச் சொல்லுகிறேன். உண்மையான ஒரு தர்மகாரியத்திற்கே நீங்கள் இந்த நன்கொடையைத் தந்திருக்கிறீர்கள். இளம்பிராயமுடைய நீங்கள் இன்னும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது உங்களைமட்டும் எண்ணிக்கொண்டிராமல், ஏழைகளாய் இருப்பவர்களையும் எண்ணி உதவி செய்திருக்கிறீர்கள். இதைவிட நன்மைதரும், மேன்மை பொருந்தியது வேறு என்ன இருக்கமுடியும்?

[மகாத்மா காந்தி]

1. மாணவர்களிடம் இருந்து பெறும் பணம் பெருமகிழ்ச்சி தருவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டுள்ளது. அவை எவை?

2. பணமுடிப்பில் இருக்கும் ஒவ்வொரு ரூபாயும் எவ்வாறு செலவழிக்கப்படும் என்று கூறுகிறார்.

3. இந்திய கிராமங்களில் வசிக்கும் மக்களின் நிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது.

4. மாணவர்களுக்கு மகாத்மா கூறிய அறிவுரை என்ன?

5. மேல்வருவனவற்றை வசனங்களில் அமைக்கவும்.

(i) உலக அனுபவம் (ii) நன்றியறிதல் (iii) இளம் பிராயம் (iv) பெருமகிழ்ச்சி (v) நன்கொடை.

## 45.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினுக்களுக்கு விடை தருக.**

கம்பனது பெருங்காப்பியம் நமது பாரதநாட்டுக் கவித்துவக் கொள்கைகளுக்கும் காவியக் கொள்கைகளுக்கும் முற்றும் பொருந்தி அவற்ருலும் சிறந்து மேம்பட்டு விளங்குவதுடன், எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமுள்ள கவித்துவக் கொள்கைகளை வைத்து அளவிட்டு நோக்கினும் அவற்ருலும் தலைசிறந்து விளங்குகிறது. இதனுல் இப்பெருங்கவிஞனை உலக மகாகவிகளுள் ஒருவன் எனப் பலரும் போற்றுகிருர்கள். இவனது பெருநூலை வான்மீகியின் மொழிபெயர்ப்பு என்று கொள்ளுதல் சிறிதும் தக்கதன்று. வான்மீகி முனிவர் தம் காலத்தில் வடநாட்டில் வழங்கிவந்த இராமசரித்திரத்தை தமது அற்புதக் கவித்துவ சக்தியால் பேரிதிகாசமாக இயற்றித்தந்தனர். பரதகண்ட முழுதும் இதனைப் பாராட்டுகின்றது. மேலைநாடுகளிலும் காவிய ஆராய்ச்சி செய்வோர் இதனை ஆராய்ந்து, இதன் பல நயங்களையும் வியந்து போற்றுகின்றனர்.

தென்னுட்டிலும், அதாவது தமிழ்நாட்டிலும் இச்சரிதம் பரவியது இங்கே பற்பல புதிய அம்சங்களால் சிறந்து விளங்கியது. காவிய நாயகனுன இராமன் புருஷோத்தமன்

என்ற நிலையினின்று இப்பொழுது உலோகநாயகனும் உலோகசரண்யனுமான தெய்வநாயகனாக மாறிவிட்டான். இவ்வாறு மாறுவதற்குத் தென்னாட்டில் முழுவேகத்துடன் பிரவகித்துக்கொண்டிருந்த பக்தியியக்கமே தனிப்பெருங் காரணமாகும். இந்நிலையிலே இராமன் சரிதத்தை வரையறுத்துப் பெரியதோர் அற்புதச் சித்திரமாகக் கம்பன் இயற்றியளித்தனன் இவ்வுண்மையால் இவனது இராமாயணம் மொழிபெயர்ப்பே ஆகாமை தெளிவாம்.

பொதுவகையில் வான்மீகியைப் பின்பற்றிய போதினும் கட்டங்கள் தோறும் இவன் இராம சரித அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகுபட அமைத்திருக்கிறான். இவற்றையெல்லாம் ஊன்றி நோக்குமிடத்து, கம்பனது பெருநூலை ஓரளவில் முதற் காவியம் என்றும், ஓரளவில் வழிமுறைக் காவியம் என்றும் நாம் கொள்ளுதல் வேண்டும்.

கம்பனது பெறலருங் காப்பியம் தமிழ்க் கவித்துவத்திற்குப் பேரெல்லையாய், காவியங்களுக்குச் சிரோபூஷணமாய் விளங்குகிறது. ஆற்றலும் அழகும்மிக்கு, அளந்தறியலாகாத தமிழ்மொழியின் மதிப்பரிய கருவூலமாக இக் காப்பியம் திகழுகின்றது. தமிழும், வடமொழியும் இனிது கலந்து வேற்றுமையுணர்ச்சி சிறிதுமின்றி, அழகு நிரம்பிச் செல்லும் பேராறுபோல விழுமியதாய் ஒழுகுகின்றது. தென்னாட்டுப் பண்பாடும் வடநாட்டுப் பண்பாடும் ஒன்றுபடக் கலந்து, அறிவையும் உளத்தையும் ஒருங்கு மகிழ்வித்து, உயர்ந்த இலட்சியங்கள் பலவற்றைக் குன்றின் மேலிட்ட விளக்கெனத் தோற்றுவித்து, தமிழ் மக்களுக்கும் கவிதையுணர்ச்சியுடைய அனைவர்க்கும் வற்றாத இன்ப சாகரமாக இப் பெருங்காப்பியம் காம்பீர்யத்தோடு அமைந்து கிடக்கின்றது.

இக்காவியம் தமிழரது கவித்துவத்தின் பேரெல்லையை உணர்த்துகின்றது. எத்தனை முறை இவ்வுண்மையை வற்புறுத்திக் கூறினும் தகும்.

1. ஒரு பெருங்காப்பியம் எப்படியிருக்க வேண்டுமென்பதைச் சுருக்கமாகக் கூறுக.
2. கம்பராமாயணம் ஒரு மொழிபெயர்ப்பன்று என்பது எவ்வாறு பொருந்தும்?
3. தென்னாட்டில் இராமசரிதம் எவ்வித மாற்றத்தையடைந்தது?
4. 'கவித்துவம்' என்றால் என்ன என்பதை விளக்குக. அதன் நோக்கம் யாது?
5. விளக்குக:- நயம், புருஷோத்தமன், உலோக சரண்யன் சிரோபூஷணம், கருஹலம், விழுமியது, குன்றின் மேலிட்ட விளக்கு, காம்பீர்யம்.

## 46.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

இனி, அந்நாளில் தமிழர் நீதிமுறை செய்யும் பரிசு பற்றிச் சில பேசுவோம் ஊர்கடோறும் நீதி விசாரித்துத் தீர்ப்புச் செய்து முறைசெய்ய நீதிமன்றங்களிருந்தன. அவைகளுக்கு மேற்பட்ட நிலையிலே அமைச்சர்களும் வேறு அரசாங்க உத்தியோகத்தர்களும் நீதிபரிபாலனஞ் செய்து வந்தார்கள். அந்நாளில் யாரேனும் நீதிதவறி நடந்து நீதி பிறழ்ந்த காலத்திற் குறையுடையோர் அரசனிடம் நேரே அறிவித்து நீதிபெறுதலும் அந்நாள் வழக்கம். அரசரது அரண்மனை வாயிற்காவலர் அவ்வாறு குறையுடையோரை உள்ளே அரசனிடம் அறிவித்து விடுக்காமற் போனால், அரசநீதிக்குக் குறைவு வருமே என்று அஞ்சி அரச முற்றத்திலே யாவரும் சென்று அடிக்கத்தக்கபடி ஓர் ஆராய்ச்சிமணி தொங்கவிடப்பெற்றிருக்கும். ஆராய்ச்சி மணியாவது குற்றம் நடந்துவிட்ட வகையைப்பற்றி ஆராய்ச்சியைக் கிளப்பும் மணி என்று பொருளாகும். எனவே, யாருடைய தயவுமின்றியே குறையுடையவர்கள் அரசனிடம் நேரில் தம் குறைகளை அறிவித்துக்கொள்ள அந்நாள் அரசநீதி இடம்

கொடுத்தது. ஆராய்ச்சிமணியோசை கேட்ட அரசன் தானே நேரில் வந்து நிகழ்ச்சிகளை விசாரித்து முறைசெய்வான். ஆராய்ச்சிமணி அடிக்க அவசியம் பெருமலே ஒருவனது ஆட்சி நிகழுமானால் அது அரசனுக்குப் பெருமையாகக் கருதப்பட்டது. ஆனால், குறையுடையோர் தம் குறைகளைச் சபைகளிலேயோ, அமைச்சர்களிடமோ, அரசரிடமோ அறிவிக்க எழுத்து மூலமான வழக்குப்பத்திரங்கள் வேண்டப் படவில்லை. வாய்மொழிப் பிராதுகளே விசாரித்து முறை செய்யப்பட்டன. வழக்குகளுக்கு இந்நாள் விதிக்கப்படும் கட்டணவிதி அந்நாளில் இல்லை. நம் தமிழரசர்கள் நீதி பரிபாலனத்திற்காகத் தனிவரி விதிக்கவில்லை என்பது துணிபு

ஒருவன் மற்றொருவன்பேரில் குறைசொல்லிக்கொள்வானானால் முதலில் அந்த எதிரியை வரவழைத்து, முன்னால் வைத்துக்கொண்டு, பிராது சொல்பவன் பேச்சைக்கேட்டு, அதன்பின் எதிரி அதற்கு என்ன மறுமொழி சொல்கிறான் என்பதையுங் கேட்டு, அதில் இருவரும் மாறுபட்டால அதன் பின் சாட்சியங்களை விசாரித்துத் தீர்ப்புச் செய்வது, இக்கால நீதிமுறைபோலவே, அக்காலத்திலும் அரசநீதிமுறை வழக்கமாயிருந்தது.

ஒருவழக்கில் நீதித் தீர்ப்புக்குத் துணைசெய்வன மூன்று வகைப்பட்ட சாட்சியங்களாகும். அவை ஆட்சி, ஆவணம், அயலார் சாட்சி என்பன. ஆட்சி என்பது, தொன்றுதொட்டுச் சான்றோரால் கையாளப்பெற்று அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கமாம். ஆவணம் என்பது ஒரு வழக்கைத் தீர்மானிக்க உதவும் சுவடி ஓலை முதலிய எழுத்துச் சீட்டுக்கள். அயலார் சாட்சி என்பது வழக்கு நிகழ்ச்சியைக் கண்டார் சொல்வது. அயலார் தங்கள் காட்சி என்பதனாலே தாமே கண்டது சான்றாகுமன்றிப் பிறர் கண்டதைக் கேட்டுப் பேசுவது சான்றாகாது என்று ஒதுக்கப்பெற்றதும் தெரியலாம்.

ஆவணம் என்பவை அந்நாளில் ஓலைகளில் எழுதப், பெற்றன. அவைகளில் எழுதிக்கொடுத்தோர் பெயரும்

எழுதி வாங்கிக்கொண்டோர் பெயரும், எழுதும் பொருளின் விவரமும் அடங்கும். இறுதியில் "இதற்கு இவை என் எழுத்து" என்று எழுதிக்கொடுத்தோர் கையெழுத்தும் இடம் பெற்றிருக்கும்.

[சேக்கிழார்]

1. இக்காலத்து உயர் நீதிமன்றம் (சுப்றீம கோர்ட்) செய்யும் நீதிபரிபாலனம், பழைய தமிழ்நாட்டில் யாரால் செய்யப் பட்டது?
2. அக்காலத்தில் இருந்த வழக்குத் தொடரும் முறையைச் சுருக்கமாகக் கூறுக.
3. 'ஆராய்ச்சிமணி' என்ற சொல்லை விளக்குக. அது அரச முற்றத்தில் தொங்கவிடப் பட்டிருந்ததன் காரணம் யாது?
4. மூவகைச் சாட்சியங்கள் யாவை? அவற்றுள் 'ஆட்சி' என்பதை விளக்குக.
5. 'கையெழுத்து' என்பதற்குப் பழையகாலத்தில் வழங்கிய சொல் யாது?
6. கருத்தெழுதுக:- செய்யும் பரிசு, நீதிபிறழ்தல், முறை செய்தல், பிராது செய்தல், கையாளுதல், ஆவணம்.

## 47.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக:-**

நம் தமிழ்நாட்டார் ஏதாவது நிலையான காரியமொன்றைக் குறிப்பிடும்பொழுது, 'இது என்ன சிலாசாஸனமா'? 'சிலாசாஸனமாக அதைச் செய்துவிட்டார்' என்று கூறுவதை நாம் கேட்கிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகியும் இன்று வரைந்ததுபோலவே காணப்படுவன, இக் கல்லெழுத்துக்கள். இதனாற்றான்,

"இளமையிற் கல்வி சிலையிலெழுத்து"
"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே"

என்று முன்னோர்களும் கூறலாயினர். இவ்வாறு நிலைத்து நிற்கும் சிலையெழுத்துக்கள், இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக இப்பரத கண்டத்தில் பலவிடங்களிலே அகப்படுகின்றன. ஆனால் அவை வடநாட்டு மொழிகளிலும் எழுத்துக்களிலும் வரையப்பட்டவை. தமிழ் நாட்டுச் சாஸனங்களாக நமக்கு இப்போது கிடைப்பனவெல்லாம் இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டனவே. இவை ஆயிரக்கணக்கில் அகப்பட்டுள்ளன. கல்லெழுத்துக்களையும் செப்புப் பட்டயங்களையும் புதிதுபுதிதாகக்கண்டு அறிஞர்கள் இன்னும் வெளியிட்டு வருகின்றனர். பத்தித்திறம் வாய்ந்த உத்தம சீலர்களால் ஆலயங்களுக்கும், தருமங்களுக்கும் நன்மக்களுக்கும் நிலையாகச் செய்த அறச்செயல்களே இச்சாஸனங்களில் மிகுதியாகக் காணப்படுஞ் செய்திகள். இவற்றிலிருந்து தெய்வங்களிடமும் பெரியோர்களிடமும் முன்னோர் காட்டிவந்த மதிப்பும் ஈடுபாடும் இத்தகையன என்பது தெரியவரும். என்றும் நிலைத்து நிற்கவேண்டிச் செய்யப்பட்ட அறங்களாதலால், அக்கால முறைப்படி அரசர் அதிகாரிகளின் அனுமதி பெற்றுக் கோயில் முதலிய பொதுவிடங்களிலே கல்லில் வெட்டியும் செப்பிற் செதுக்கியும் முன்னோர் இவற்றைப் பகிரங்கப்படுத்தி வைத்தனர்.

தமிழ் மொழியின் வரலாறுகளையும் மரபுகளையும் அறிவதற்கு இலக்கியவாராய்ச்சி எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு சாஸனங்களை ஆராய்வதும் வேண்டத்தக்கதாம். இவ்வாராய்ச்சியால் உழவு, தொழில், வாணிபம், சிற்பம், போர் முதலியவற்றைப் பற்றிப் பண்டுவழங்கிய சொற்பொருள் வழக்குகளும், மக்களின் நடையுடை பாவனைகளும் பழக்கவொழுக்கங்களும் எத்தனையோ அறிய இடமுண்டு.

சங்க காலத்தில் அமைந்த சாஸனங்கள் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், அக்காலத்து நூல்

களிற் கண்ட வரலாறுகளும் வழக்குகளும் பிற்பட்ட சாஸனங்களிலும் பயில்வதால் அவற்றின் உண்மை நிலைகள் நமக்குத் தெரியவருகின்றன. சங்க காலத்துக்குப் பின் ஏழு எட்டாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ்ச் சாஸனங்கள் தொடர்ச்சியாகவே நமக்குக் கிடைக்கின்றன.

சாஸனங்கள் பெரும்பாலும் வசனநடையில் அமைந்தவைகளே. ஆனால் செய்யுளுருவமாகவும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

சாஸனத் தமிழ் என்பது ஒரு தனிப்பட்ட தமிழன்று. நம் முன்னோர் தத்தம் காலங்களில் பேசியும் எழுதியும் நித்தமும் பயின்றுவந்த தமிழே அது. உலக வழககான மொழி எதுவும் காலந்தோறும் மாறுபாடு அடைந்து வரக்கூடியது இயல்பு. உலகவழக்கும் செய்யுள் வழக்குமான சொற்பொருள்களைக் கொண்ட தமிழிலக்கியங்களும் இவ்விதிக்கு உட்பட்டவைகளே. இவ்வாறு மாறி வந்த வழக்குகளை பழைய தமிழாசிரியர்களும் தழுவிக் கொண்டார்கள்.

[இலக்கியக் கட்டுரைகள்]

1. 'சிலாசாஸனம்' என்னும் பதத்திற்குரிய பொதுக்கருத்து யாது?

2. இந்தியாவில் இன்று கிடைக்கக்கூடிய பழைய கல்வெட்டுக்கள் எவை?

3. தமிழ் நாட்டுச் சாஸனங்களுள் பழையவை எந்நூற்றாண்டைச்சேர்ந்தவை? அவைகளில் காணப்படுகின்ற செய்திகள் யாவை?

4. கல்வெட்டுக்களின் ஆராய்ச்சி எவ்வகையில் அறிவு வளர்ச்சிக்கும், மொழி வளர்ச்சிக்கும் உதவுகிறது?

5. கல்வெட்டுக்களில் வழங்கும் சாஸனத்தமிழின் நிலையிலிருந்து நாம் அறியும் உண்மை யாது?

6. அவற்றின் கருத்து விளங்கக்கூடியதாக, கீழ்க்காணும் சொற்களை உமது வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

சீலம், ஈடுபாடு, பகிரங்கப்படுத்தல், தழுவிக் கொள்ளுதல்
பயின்றுவருதல், திறம்,
அல்லது,
இப்பகுதிக்கு ஏற்ற ஒரு தலையங்கம் இடுக.

## 48.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்துக் கீழ்க்காணும் வினுக்களுக்கு விடை எழுதுக:-**

பௌத்த திருமுறைகள் திரிபிடகம் என்று தற்காலத்தில் வழங்கும் நூற்றொகுதியாகும். பிடகம் என்பதற்கு, பெட்டி அல்லது கூடை என்று பொருள். மூவகைப் பிடகங்களாவன விநய பிடகம், சுத்த (சூத்திர) பிடகம், அபிதம்மபிடகம் என்பன. விநயபிடகம் என்பது பிக்கு சங்கத்தாரின் ஒழுக்க நியமங்களைப்பற்றிக் கூறுவது. சுத்த (சூத்திர) பிடகம்என்பது உபதேசங்களையும் அவற்றின் விளக்கங்களையும், கூறுவது அபிதம்ம (தர்ம) பிடகம் என்பது பௌத்த தருமத்தின் நுணுகிய பொருட்பாகுபாடுகளை, விளக்குகின்றது.

ஜாதகம் என்னும் பௌத்த கதைகளின் தொகுப்பு சுத்தபிடகத்தில், குத்தக நிகாயம் என்ற பகுதியைச் சேர்ந்தது. இத்தொகுப்பைப் போதி தத்துவக் கதைகள் என்றும் கூறலாம். புத்தராவதற்கு முன்பு புத்தர் பெருமான் வாழ்ந்த வாழ்க்கைக் கதைகளே இதிற் கூறப்படுவன. அவர் தமது முற்பிறப்புக்களில் செய்துள்ள நிகழ்ச்சிகளைக் குறித்து இந்த ஜாதகங்கள் கூறுகின்றன. உதாரணமாக ஆரம்பத்தில் ஒவ்வொரு ஜாதகமும் 'பிரமதத்தன் வாரணசியில் அரசாண்டு கொண்டிருந்தபோது, போதி சத்துவர் ஒரு பெண்யானையின் கருப்பத்திலிருந்தும் பிறந்தார்' என்பது போன்ற தொடக்கத்தை முற்கொண்டு, பின்னர் கதை தொடங்கும்.

ஒவ்வொரு ஜாதகத்திலும் நிகழ்காலத்தையும், முற்காலத்தையும், காதைகள் என்னும் கதையைச் சுருக்கிக் கூறும் செய்யுட்களும், காதைகளை விளக்கும் உரைப்பகுதியும், நிகழ்காலக் கதையில் வருபவர்களுக்கும் முற்காலக் கதையில் வரும் பாத்திரங்களுக்கு மிடையில் உண்டான தொடர்பைக் கூறும் பகுதியும் உள்ளன. காதைகள் தான் பௌத்தத் திருமுறைகளைச் சார்ந்ததாகக் கொள்ளப்படுகின்றன. கதைகள் முதலியவை அட்ட (அர்த்த) கதைகள் என்று பெயர்பெறும். இவை பிற்காலத்தவையாகும்.

ஜாதகங்களிற் பலவும், பாட்டும் உரையும் விரவிவந்த நடையிலேதான் அமைந்திருக்கின்றன. இவைகள் இருபத்திரண்டு நிபாதங்களாகப் (பகுதிகளாக) பகுக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள ஜாதகத் தொகுதியில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட கதைகள் உள்ளன. ஆனால், ஆதியில் ஏற்பட்டவை ஐந்நூறு ஜாதகக் கதைகளே என்று துணிதற்குச் சான்றுகள் உள்ளன.

ஜாதகக் கதைகளிற் சில கி. மு. 2 அல்லது 3-ம் நூற்றாண்டில் வழங்கிய பௌத்த வரலாறுகளைச் சார்ந்தன என்பதற்குத் தக்க சான்றுகள் கிடைக்கின்றன. பர்குத், சாஞ்சி என்ற இடங்களிலுள்ள ஸ்தூபங்களின் சுவர்களில் இக்கதைபற்றிய சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உரை நடையிலுள்ள கதைப்பகுதிகூட இவற்றில் காணலாம். ஜாதகக் கதைகளின் பெயர்களின் பெயர்கள்கூட இவற்றில் எழுதப்பட்டிருக்கின்றன. பாஹியான் என்னும் சீன யாத்திரிகன் ஐந்நூறு ஜாதகங்கள்பற்றிய சித்திரங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றான்.

ஜாதகக் கதைகள் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெற்றுள்ளவை; அன்றியும் உலக இலக்கிய வரலாற்றிலும் சிறந்த ஒரு ஸ்தானம் பெற்றுள்ளன. பௌத்த சமயத்தைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கு இவை மிகுதியும் பயன்பட்டன. பௌத்த சமயம் பரவிய இடங்களில் எல்லாம் ஜாதகக் கதைகள் புகுந்து அந்த அந்த நாட்டு

இலக்கியங்களை வளப்படுத்தியுள்ளன. இந்தியாவிற்கும், பிற நாடுகளுக்குமுரிய சிற்பக்கலையையும் செழித்து வளரச் செய்துள்ளன. மேலும், இவை இந்திய இலக்கியங்களிலுள்ள மற்ற நூல்களால் அறியப்படாத சமுதாயத்தின் வாழ்க்கையை உணர்த்துகின்றன.

[இலக்கிய உதயம்]

1. 'பிடகம்' என்ற சொல்லை விளக்கி, மூவகைப் பிடகங்களை விபரித்துக் கூறுக.
2. போதிசத்துவர் என்பவர் யார்?
3. ஒவ்வொரு ஜாதகத்திலுமுள்ள பிரிவுகளை விரிவாகக்கூறுக
4. பர்குத், சாஞ்சி என்ற இடங்களிலுள்ள சித்திரங்கள் மூலம் நாம் அறிவதென்ன?
5. ஜாதகக்கதைத் தொகுப்பின் பெருமையைத் தொகுத்துக் கூறுக.
6. கருத்தெழுதுக:- வாரணசி, முற்கொண்டு, பாத்திரங்கள், துணிதல், வரலாறுகளைச் சார்ந்தன, சதுக்கப்பட்டுள்ளன, வளம்படுத்துள்ளன, சமுதாயம்.

## 49

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் காணப்படும். வினாக்களுக்கு விடை தருக:-**

"என்னுடைய துன்பங்களில் முதல் துன்பம், நான்பிறந்ததுதான்" என்று மனம்புழுங்கி எழுதுகிருன் உருஸ்ஸோ ஓரிடத்தில். அவனுடைய வாழ்க்கை முழுவதும் இந்த ஒரு வாக்கியத்தில் அடங்கிவிட்டது. ஆனல் இதன் ஒவ்வோர் எழுத்திலும் எவ்வளவு துயரம், எவ்வளவு மனோவேதனை, எத்தனை பேருடைய சூழ்ச்சி, எத்தனை பேருடைய துரோகம் எல்லாம் அடங்கியிருக்கின்றன! எவன், ஆடம்பரத்தின் பகட்டுக்கும் அதிகாரத்தின் உறுமலுக்கும் மத்தியில் இருந்து கொண்டு ஏழைகளுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்தானே, எவனுடைய எழுத்துக்கள் பிரெஞ்சுப் புரட்சியென்று சொல்லப்படுகிற மகத்தான நெருப்பை மூட்டி

விட்டனவோ, எவனுடைய நூலான "சமுதாய ஒப்பந்தத்தைப் படிப்பது ஒரு கௌரவமென்று பதினெட்டாவது நூற்றாண்டு ஐரோப்பாவில் கருதப்பட்டதோ, அவன், அந்த உரூஸ்ஸோ, உயிரோடிருந்த காலத்தில் பித்தனென்று பரிகசிக்கப்பட்டான். ஓநாயைப்போல் வேட்டையாடப்பட்டான்.

அறியாமைச் சேற்றிலே உழன்றுகொண்டிருக்கும் ஜனங்களை மேலே தூக்கிவிட எவனொருவன் தன்கையைக் கொடுக்கிறானோ, அந்தக் கையையே, அவனையேகூட அந்த அறியாமை இழுத்துக்கொண்டு விடுகிறது. ஆயினும் அவன் துணிந்து கையைக் கொடுக்கிறான். ஏன்? அவர்களோடே விழுந்து, உழன்று, அப்படியாவது அந்த அறியாமைக் குட்டையைக் கொஞ்சம் கலக்கிவிடுவோம் என்ற எண்ணந்தான். கலக்கம் ஏற்பட்டால் தெளிவு உண்டாகும் அல்லவா? இப்படி வலியக் கைகொடுக்கிறவன் நிகழ்காலத்திலே இறந்துவிடுகிறான். ஆனால் எதிர்காலத்திலே வாழ்கிறான். நிகழ்காலம், அவனைத் தூற்றுகிறது; கல்லாலும் கழியாலும் அடிக்கிறது; குகைபோன்ற சிறையிலே கொண்டுபோய்த் தள்ளுகிறது.

ஆனால் அந்த மகான்களை, மகா கவிஞர்களை, தீர்க்கதரிசிகளை, எதிர்காலம் எவ்வளவு அன்போடு வரவேற்கிறது. எத்தனை பேருடைய இருதயத்தில் அவர்களுக்கு இடம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த எதிர்கால சாந்தியை எதிர்பார்த்துத்தான், மகான்கள், நிகழ்காலத் துன்பங்களை புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஐரோப்பாவில் மிக அழகான இடம் சுவிற்சலாந்திலுள்ள ஜினீவா நகரம். இது கடிகாரத் தொழிலுக்குப் பெயர்போனது. அப்படியே அண்டினோரை ஆதரித்துக் காப்பாற்றும் நல்லியல்பு வாய்ந்தது. எப்படியென்றால், கி. பி. பதினாறுவது நூற்றாண்டில் ஐரோப்பாவில் கிறிஸ்துவமதத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெயரால்

அநேக கொடுஞ் செயல்கள் நடைபெற்றன. இவற்றினின்று தப்ப முயன்றவர் பலர் இந்த ஜினீவாவிலேதான் அடைக்கலம் புகுந்தனர். இங்ஙனம் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் வந்து தஞ்சம்புகுந்தவர்கள், பாஷையிலும், பரம்பரையிலும், பழக்க வழக்கங்களிலும் வித்தியாசப் பட்டவர்களாயிருந்த போதிலும், நாளாவட்டத்தில் ஒரு நாட்டுப் பிரஜைகளாகிவிட்டார்கள். கி. பி. பதினேழாவது நூற்றாண்டில் இவர்களிடத்தில் நிலவிய நாட்டுப்பற்றும், ஒற்றுமையுணர்ச்சியும் வியக்கத்தக்கனவாக இருந்தன. இந்த இரண்டுதன்மைகளும் இவர்களிடத்திற் சுலபமாக அமைந்துவிட்டதற்குக் காரணம், இவர்களுடைய பரம்பரைதான்; அதாவது, மதவேற்றுமை காரணமாக வெளிநாடுகளிலிருந்து வந்த இவர்கள் அனைவரும் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நுண்ணறிவு உடையவர்கள். இவர்களுடைய வருகைக்குப் பின்னரே ஜினீவாவில் கடிகாரத் தொழில் சிறப்புற்றதென்று சொல்லவேண்டும்.

இங்ஙனம் ஜினீவாவிலே வந்து குடியேறினவர்களிற் பலர் பிரெஞ்சுக்காரர்கள். இவர்களுடைய செல்வாக்குத்தான் சுவிற்சலாந்தின் பிற்காலத்தை சமுதாய வாழ்க்கையில் அதிகமாகப் பிரதிபலித்தது. 1712-ம் வருஷத்தில் ஜினீவாவின் ஜனத்தொகை சுமார் 18500. இவர்கள் அனைவரும் பிரெஞ்சு மொழியையே பேசினார்கள் இவர்களுடைய கலைப் பண்பு பிரெஞ்சு மயமாகவே இருந்தது. கிறிஸ்துவமதத்தின் கத்தோலிக்கப் பிரிவினருக்கு எப்படி ரோமாபுரி மையஸ்தானமாயிருந்ததோ அப்படியே புராட்டெஸ்டாந்த பிரிவினருக்கும் ஜினீவா மையஸ்தானமாயிருந்தது இந்தப் பிரெஞ்சுக்காரர்களில் உருஸ்ஸோ குடும்பத்தினரும் ஒருவர்.

[ருஸ்ஸோ வாழ்க்கை வரலாறு]

1. "என்னுடைய துன்பங்களில் முதல்துன்பம், நான் பிறந்ததுதான்" – என்பதன் உட்கருத்தை விளக்குக.
2. ரூஸ்ஸோவின் பெருமை யாது?
3. சனங்களுடைய அறியாமையைப் போக்க விரும்பும் சீர்திருத்தவாதிகள் எந்த மாற்றத்தைச் சமுதாயத்தில் செய்ய முற்படுகின்றனர்?
4. ஜினீவாவிலே அடைக்கலம் புகுந்த பல்வேறு ஐரோப்பிய மக்களும் ஓரினமாய் ஒருமித்ததன் காரணம் யாது?

5. பொதுவாகப் பெரியார்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களைக் கூறுக:-

6. விளக்குக:

(i) ஆடம்பரத்தின் பகட்டு; அதிகாரத்தின் உறுமல்.

(ii) ஓநாயைப்போல் வேட்டையாடப்பட்டான்.

(iii) நிகழ்காலம் தூற்றுகிறது; எதிர்காலம் வரவேற்கிறது.

கருத்தெழுதுக: மனம் புழுங்குதல், அர்ப்பணஞ் செய்தல்.

## 50

**பின்வரும் செய்யுள்களின் பொருளை உரைநடையில் எழுதுக.**

1. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவா
பேசுற்ற இன்சொல் பிறிதென்க — ஈசற்கு
நல்லோன் எறிசிலையே நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

[நல்லோன் – சாக்கியநாயனர், ஒண்கருப்பு வில்லோன் – மன்மதன், சிலை – கல்.]

2. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே நின்று.

[தளர்ந்து-மனம் இளகி, பிறர்க்குஉறும் - பிறருக்கு உண்டாக்கிய, வெம்குறை - வெவ்விய குறையை, திங்கள்-சந்திரன், கறையிருள் - தனது களங்கமாகிய இருள்]

3. போய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் — துப்பிற்
சுழற்றுங்கோல் கற்றூணைச் சூறுவளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு.

[புல்லியர் - புல்லறிவாளர், மெய்ப்புலவர் - மெய்யறிவுடையவர் சூறுவளி - சுழற்காற்று, பொய்ப்புலன்கள் - பொய்யாகிய ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்னும் ஐம்புலன்கள்]

4. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகைமறுப்பரோ — பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

[நல்கூர்ந்தான் - வறியவனானான், ஈகை - கொடை, அரம்பை - வாழை, எந்தை - எங்கள்பிதா, மறுப்பரோ - கைவிடுவரோ]

[நன்னெறி]

## பகுதி II

# சுருக்கப் பயிற்சி

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

உலக வாழ்வென்னும் துன்பத்தில் கிடந்து உழன்று கொண்டு கடவுளை நினைத்தற்கு இடமின்றி வருந்தும் மக்களுக்கு இடையிடையே நம் ஐயனைப் பற்றிய எண்ணத்தை எழுப்பும் பொருட்டாகவே ஓர் ஊரில் பல இடங்களிலும் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களே இல்லாத நாடு நகரங்களில் இருப்பவர்களுக்குக் கடவுளைப் பற்றிய நினைவு சிறிதுந் தோன்றாதாகையால் அவர்கள் விலங்குகளிலும் கடைப்பட்டவராவார்கள். உயர்ந்த நினைவில்லா அவர்கள் தங்கியிருக்கும் அவ்விடங்கள் விலங்குகள் குடிகொண்ட காடுகளையே ஒப்பனவாகும்.

இனி மன உறுதி உடையவர்கள் எந்த இடத்தில் இருந்தும் கடவுளை நினைக்கலாமாகையால், கடவுளைத் தொழும் பொருட்டுக் கோயிலுக்குத்தான் செல்லல் வேண்டுமென்று வற்புறுத்துவது என்னையெனின், கோயிலைத் தவிர மற்ற எல்லா இடங்களும் வேறு வேறு நினைவுகளை உள்ளத்தில் எழுப்பி மன உறுதியைச் சிதைப்பனவாய் இருத்தலால் நம்மனோரில் எவ்வளவு மனத்திட்பம் வாய்ந்தவர்கள் இருந்தாலும் அவர்கள் மற்ற இடங்களில் இருந்து கடவுளை நினைக்கப் புகுவார்களாயின் அவர்களைச் சுற்றிலும் நடக்கும் உலக முயற்சிகளாலும் அவ்வவ்விடங்களைப் பற்றிய எண்ணங்களாலும் அவர்களுடைய நினைவு கலைந்து பழுதுபட்டுப் போகும்.

பலருடைய நினைவாற் கடவுளுக்கென்றே அமைக்கப்பட்ட கோயிலிற் சென்று வணங்குவதால் மன உறுதி உடையார்க்கு அவ்வுறுதி மேன்மேலும் உரம்பெற்று விளங்குவதோடு அவரது நினைவும் அங்குள்ள இறைவன் திருவுருவத்தை நேரே கண்டு மகிழ்ந்து திருவருள் இன்பத்திற் படிந்திருக்குமன்றோ ? ஆகையால் மன உறுதி உடையார்க்குந் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாது வேண்டற்

பாலதேயாம் என்க. அளவற்ற மன உறுதியும் கரை கடந்த அன்பும் தூய உள்ளமும் தூய அறிவும் நிறைந்த திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கர் முதலான மேலோரே கோயில்கள் தோறுஞ் சென்று இறைவனை வணங்கி வந்தனராயின், தாழ்நிலையில் உள்ள மற்றவர்கள் திருக்கோயில் வழிபாட்டைக் குறைவாகக் கருதுவதும் அதனை ஏளனம் செய்வதும் எவ்வளவு பொல்லாத குற்றமாய் முடியும்.

[அறிவுரைக் கொத்து.]

2

**பின்வரும் உரைப் பகுதியை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக:—**

பெரியாரது புகழ் அவர் இறந்த பின்னர் உலகெங்கும் பரவி ஒளிருமே அல்லாமல் அவர் வாழுங் காலத்தில் அவர் பெருமையை அறிந்து போற்றுதல் அரிதாகும். தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழ்ந்த பெருமக்கள் பிறந்த இடமும் இறந்த இடமும் பிற்காலத்தில் புதை பொருளாயிருப்பதே இவ்வுண்மைக்குப் போதிய சான்றாகும். அவர் வாழுங் காலத்தில் அவரை ஒரு பொருளாகக் கருதிப் போற்றாத உலகம் பின்னர் அவரைப் பற்றி யாதும் தெளிவாக அறியமாட்டாது உழல்வது இயல்பேயன்றோ? இன்னும் பல பெரியார் உண்ண உணவும் உடுக்க நல் உடையுமின்றி வறிஞராய்ப் பித்தர் போலவும் பேதையர் போலவும் உலகில் வாழ்ந்து மாக்களது கொடுமையால் மனமும் மெய்யும் வருந்தியுள்ளார்கள். மும்மையும் உணரவல்ல மேலோனயினும் தன் நாட்டினும் காலத்தினும் மதிக்கப் படுதல் அரிதென்று ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகின்றது. இக்காலத்தில் ஆங்கில நாட்டார் கண்ணும் ஆவியுமாகப் போற்றுகின்ற நாடகக் கவியாய "செகப்பிரியர்" தாம் வாழ்ந்த காலத்தில் ஓர் எளிய கூத்தராகவே கருதப்பட்டார் என்று தெரிகின்றது. விலையற்ற மணிகளாக இக் காலத்தில் கருதப்படுகின்ற அவரது இனிய நாடகங்கள் அக்காலத்தில் கூழுக்குப் பாடப்பெற்ற கூத்தாகவே கரு

தப்பட்டன. இவ்வாறே இக்காலத்தில் தமிழ் மொழியின் கண்ணென இலங்கும் கம்பர் அக்காலத்தில் வடமொழிக் காவியமொன்றைத் தென்மொழியில் அமைத்துத் தந்த ஒரு சாமானியகவியாகவே கருதப்பட்டார் என்று கருதுதல் தவறாகாது. இன்னும் நமது காலத்திலேயே உள்ளொளியும் உயரிய கவி நலமும் வாய்ந்து விளங்கிய உண்மைக் கவிஞர் உண்ண நல் உணவும் உடுக்கப் போதிய உடையும் இன்றி உயிர் துறந்த பின்னர் அவரது கவிகளைப் பாடிப் பாடிக் கனிகின்ற தன்மையை நாம் கண்கூடாகக் காண்கிறோம் அல்லவா? இந்நீர்மையை நினைக்கும்பொழுது பூதவுடம்பு அழிந்த பின்னரே புகழுடம்பு தோன்றுவதாகும் என்னும் பழமொழியின் உண்மை இனிது விளங்குகின்றது.

### 3

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

ஒரு காலத்தில், தமிழகத்தின் பல பாகங்களிலும் பேசப்பட்ட தமிழ், பகுதிதோறும் சிறிது சிறிது வேறுபட்டு இருந்திருக்கவேண்டும் அப்பகுதிகளில் முக்கியமாகப் பன்னிரண்டு பகுதிகள் இருந்தன. செந்தமிழ் ஆவதற்கு உரியன என மதிக்கப்பட்ட பகுதி மொழிகள் பன்னிரண்டுமே. "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்" என்றவிடத்துத் தொல்காப்பியராற் குறிப்பிடப்பட்டன போலும். பிறகு அரசியல் ஆதிக்கம் காரணமாக, சேர, சோழ, பாண்டி நாட்டு மொழிகள் ஆகிய வஞ்சித் தமிழ், உறந்தைத் தமிழ், கூடற்றமிழ் ஆகியவை ஏனையவற்றைக் காட்டிலும் சிறப்பாகச் செந்தமிழ் என மதிக்கப்பட்டிருக்கலாம். அரசியல் செல்வாக்குக் காரணமாக, ஏனைய பகுதிகளின் குறுநில மன்னரை அடக்கிக் கொண்டுவிட்ட காரணமாக, மூவேந்தர் நிலத்திலும் வழங்கிய மொழி வகைகள் மூன்றும் செந்தமிழ் எனவே மதிக்கப்பட்டன போலும். சேரர் செல்வாக்குக் குறைந்த காலத்திலே கூடற்றமிழும் உறந்தைத்

தமிழும் ஆதிக்கம் பெறுவன ஆயின. அந்தக் காலத்தில் தான் எழுந்திருக்கவேண்டும், பாண்டி நாட்டையும் சோழ நாட்டையுமே செந்தமிழ் நாடு எனக் கூறும் இரண்டு சூத்திரங்களும். நாளடைவில் சோழரைப் பாண்டியர் வென்றாராக, அரசியல் ஆதிக்கத்தால் பாண்டி நாட்டு மொழியே செந்தமிழ் என்னும் கருத்து வலியுறுவதாயிற்று. விஜய நகரத்து நாயக்க அரசர்கள் மதுரையை ஆளத் தலைப்பட்ட பதினைந்காவது நூற்றாண்டில், இச் செந்தமிழ் வேறுபடத் தலைப்பட்டாலும், பின்னர் அச்சுக் கருவிகளின் உதவியால் அதிகமாறுதலின்றி நிலைபெறுவதாகிவிட்டது. இவ்வாறு பல்வேறு பகுதிகளிலும் வழங்கிய அடிப்படை மொழி வகைகளில் இருந்தே பொதுத் தமிழ் என்பது வளர்ச்சியுறுவதாயிற்று. அதனால்தான் சங்க இலக்கியங்களிலும் பல்வேறு பகுதிகளின் சிறப்பான சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாகத் தென்பாண்டிச் சொல் எனக் கருதப்படும் "சொன்றி" எனும் சோற்றைக் குறிக்கும் சொல் "புன்புலவரகின் சொன்றி" எனப் புறநானூற்றில் காணப்படுகிறது. (பாடியவர் தென்பாண்டி நாட்டாரல்லர்) "பெற்றம் என்னும் தென்பாண்டிச் சொல் "பசு" என்னும் பொருளில் திருக்குறளின் கண்ணே" பெற்றம் புலித்தோல் போர்த்தற்று என வந்துள்ளது. இவற்றால் அறியப்படுவது என்ன என்றால், செந்தமிழ் பிறபகுதி மொழிகளைத் தன் வயப்படுத்துவது போலவே, சிலவேளைகளில் கீழிறங்கி வந்து அவ்வப் பகுதிச் சொற்களையும் எடுத்து ஆளத் தயங்கவில்லை என்பதே.

[டாக்டர் அ. சிதம்பரநாதன்.]

## 4

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

மகான்கள் கால தேச வர்த்தமானங்களைக் கடந்தவர்கள். இவர்கள் ஒரு காலத்திலே தோன்றி அந்தக் காலத்திற்கேற்ற வகையில் சில காரியங்களைச் செய்கிறார்களென்

பது வாஸ்தவம். ஆனால் அந்தக் காரியங்கள், எக்காலத்திற்கும் பொருத்தமுடையனவாயிருக்கின்றன; பிரயோசனமுடையனவாகவும் இருக்கின்றன. இங்ஙனமே இவர்கள், ஒரு தேசத்திலே பிறந்தாலும் உலகத்திற்காக வாழ்கிறார்கள். எந்நாட்டவரும் எக்காலத்தவரும் போற்றக்கூடிய விதமாகவும் பின்பற்றக்கூடிய விதமாகவும் இவர்களுடைய வாழ்க்கை இருக்கிறது. இவர்கள் காலத்திலே நிகழும் வர்த்தமானங்கள் இவர்களுடைய தீர்க்க திருஷ்டியை மறைப்பதில்லை; உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுகின்ற இவர்களுடைய மனப்பான்மையை மாற்றுவதில்லை. இவர்களுடைய மன அமைதியைக் குலைப்பதுமில்லை.

இவர்கள் பிறந்த நாடு மண்ணிலே புதைந்து போய் விடுகிறது; இவர்கள் வாழ்ந்த காலம் ஜனங்களுடைய மறதியின் ஆழத்திலே மறைந்துவிடுகிறது. இவர்களுடைய அன்றாட வாழ்க்கையையொட்டி நடைபெற்ற நிஜமான சம்பவங்கள், காலாந்தரத்தில் கட்டுக் கதைகளாக மாறிவிடுகின்றன. ஆனால் இவர்கள் நித்தியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; இவர்களுடைய சிருஷ்டிகள் என்றும் ஜீவ களையோடு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன; இவர்களுடைய தொண்டு பிற்காலத்தவருக்குக் கலங்கரை விளக்கமாக இருக்கிறது. மகான்கள் காலத்தின் தேவையை அனுசரித்து அவதரிக்கிறார்கள்; அந்தக் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள். ஜனங்களுடைய எண்ணத்திலே கலக்கம், பார்வையிலே சூனியம், செயலிலே தடுமாற்றம், இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் மகான்கள் தோன்றி அந்த ஜனங்களுடைய எண்ணத்திலே தெளிவையும், பார்வையிலே பிரகாசத்தையும் செயலிலே நிதானத்தையும் உண்டுபண்ணுகிறார்கள். இவர்கள் நித்திய புருஷர்களாதலால், எந்த நாடு எந்தக் காலம் தங்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது இவர்கள் தீர்க்கதரிசிகளானபடியால், இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற விதமாகத் தங்கள் சொல்லையும் செயலையும் அமைத்துக் கொள்கிறார்கள்.

[வெ. சாமிநாத சர்மா.]

5

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:—**

ஒரு காலத்தில் நாகரிக வாழ்க்கை உடையராயிருந்த ஆரிய மக்கள் தம் ஆரிய மொழியை நூல்களில் நிலைநிறுத்தி வைத்திருந்தும் அஃது உலக வழக்கில் வழங்கா தொழிந்தது. என்னையோவெனின் அம்மொழி இயற்கைக்கு மாறான வல்லோசைகளையும் குறிப்போசைகளையும் மிகுதியும் உடையதாகலின் அஃது இங்ஙனம் இறந்துபட்டது. அவ்வாறாயின் முகன் முதல் தமிழரும் நாகரிகமற்றவராய் இருந்த காலத்துத் தமிழ்மொழியை இயற்கை ஒலி முறையோடு எவ்வாறு கண்டறிந்து வழங்கினர் என்று வினவுவார்க்கு விடை கூறுவாம். ஒலி ஒரே தன்மைத்தாயினும், இந்நிலவுலகத்திற் பலவேறிடங்களும், அவ்விடங்களிலுள்ள பொருள்களும் பல்வேறு தன்மையுடையனவாயிருத்தலால், அவ்வவற்றில் வாழும் மக்களும் அவ்வந் நிலத்தின் தன்மைக்கேற்பப் பல்வேறியற்கையும், அவ்வியற்கைக்குரிய ஒலி வேறுபாடுகளும் உடையராயினர். எங்ஙனமோவெனின் நாடு குளிர் மிக்கதாயிருந்தால் அந்நாட்டின் பொருள்களும் அதற்கேற்ற தன்மையவாயிருக்கும். அதன்கண் வாழும் மக்களும் குளிரின் மிகுதியால் வெளியே வந்து, பலவகைப் பொருள்களை நன்றாக உழைத்துச் சீவிக்கவும், சிறந்த கட்டிடங்களைக் கட்டவும் முடியாதவர்களாகி, தமக்குக் கிடைத்த உணவை உட்கொண்டு சிறு குடில்களில் வாழ்ந்துகொண்டு நாகரிக மற்றவராயிருப்பர். அங்ஙனம் வாழும் குடிகளை இஞ்ஞான்றும் பனி மிகுந்த நாடுகளிற் காணலாம். இனிப் பனி நிலத்தில் வாழும் அம்மக்கள் வெண்ணிறத்தினராயும், வலுவினராயும் இருத்தலுக்கிசைய அவரது குரலும் உரத்த ஓசையினை உடையதாகவே இருக்கும். வட ஆசியா என்னும் குளிரும் பனியும் மிகுந்த நாட்டில் முதல் முதல் உயிர் வாழ்ந்த ஆரியர் நாகரிகமற்ற வாழ்க்கையினராய்த் தமது உரத்த குரலுக்கேற்ற வல்லோசை நிரம்பிய மொழி ஒன்றை வழங்கினர்.

குளிரும் பனியும் ஒரே நிலையான இந்நாவலந் தீவின்கண் அவ்வாரியர் குடியேறியபின் அவர் நாகரிக நிலை சிறிது அடைந்து அதற்கிணங்க மெல்லிய குரலும் வாய்க்கப் பெற்றாராய்த் தம் முன்னோர் வழங்கிய ஆரிய மொழியை உரத்துப் பேச இயலாது நெகிழவிட அம்மொழியும் உலக வழக்கின் இல்லாது மறைந்தது.

தி. நீலாம்பிகையம்மையார்.

6

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

வாணிகம் செய்யப் புகுவோர், இது மக்கள் எல்லார்க்கும் நிரம்பவும் பயன்படுதலை உணர்ந்து எல்லாரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையவர்களாயும் மக்களுக்கு வேண்டிய பல பண்டங்களின் வகையும் அவையுண்டாகும் இடங்களின் வரலாறும் தெரிந்து, அவற்றைக் குறைந்த செலவில் வருவித்து எல்லார்க்கும் நயமாக ஒரே விலை கூறி முக மலர்ந்து இனிய சொற் பேசி விற்கும் அறிவும் திறமான செய்கையும் வாய்ந்தவர்களாயும் இருத்தல் வேண்டும். இவ்வளவுக்கும் அன்பும் அறிவும் திறமான செய்கையும் இன்றியமையாது வேண்டப்படுதலால், இவ்வுயர்ந்த தன்மைகளை வணிகர்கள் ஒவ்வொருவரும் தம்மிடத்தே பழக்கத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். மக்களிடத்தில் அன்பில்லாமல் எந்நேரமும் தமக்கு வரும் ஊதியத்தையே எண்ணிப் பார்ப்பவர்கள், உண்மையான வணிகர்கள் அல்லர். தாம் செய்யும் வாணிக முயற்சி பலர்க்கும் பெரும் பயன்படுதலை உள்ளக் கனிவோடு எண்ணிப் பாராமல், தாம் அடையும் ஊதியத்திலேயே கருத்து வைப்பவர்கள், அவ்வாணிகத்தை இழந்து வறியராய்ப் போவார்கள். அன்பும், இரக்கமும், வாய்ந்த வணிகனிடத்தே திருமகள் குடிகொண்டிருப்பாள். அவன் சென்றவிடமெல்லாம் செல்வம் ஓங்கும். நல்லோர் நெஞ்சத் தாமரையில் இருக்கும் திருமகள், தன் நலத்

தையே முதன்மையாய்க் கருதும் வணிகனின் கரடுபட்ட வன்னெஞ்ச நெருஞ்சிற் காயை மிதிக்க அஞ்சி, அவனை அறவே விட்டு விலகிப் போய்விடுவாள். அறிவும் பண்பும் உடையவர்களைக் கண்டால் எல்லாரும் அவரை விரும்பி அணுகி அவர்க்கு எல்லாச் சிறப்பும் செய்தலைப் பார்த்திருக்கின்றோம். வன்னெஞ்சமும் அறியாமையும் உடையவர்களாயிருப்பவர்களைக் கண்டால் எல்லாரும் அவரை அருவருக்கின்றனர். வாணிபம் செய்பவர்கள் ஈர நெஞ்சமும் விரிந்த அறிவும் உண்டாகப் பழகிக் கொள்வார்களாயின், அவர்கள் முகத்தில் இதற்குமுன் இல்லாத அழகும் பொலிவும் கிளர்ச்சி பெற்றுத் தோன்றும். அப்படிப்பட்டவர்களை எல்லாரும் விரும்பிச் சேர்ந்து தாம் வேண்டிய பண்டங்களை மகிழ்வுடன் வாங்கிக் கொண்டு செல்வர். அவர்கள் துவங்கிய வாணிகமும் மேன்மேற் செழித்தோங்கி அவர்க்கும் பிறர்க்கும் அளவிறந்த நன்மையைத் தரும்.

## 7

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:**

ஒரு நூல் முழுவதையும் வாய்ப்பாடமாக நெட்டுருப் பண்ணுவதனாலும், அல்லது அதில் பெரும் பாகத்தை நெட்டுருப் பண்ணுவதனாலும், வெகுவாய் நன்மை உண்டாவதில்லை. சாஸ்திரங்களில் முக்கியமான சூத்திரங்களையும், இலக்கியங்களில் சொல்லழகு, வாக்கிய நடையழகு, பொருட் பொலிவு, கற்பனை அலங்கார விசேஷம், பக்தியாதி ரசம் முதலியன அமைந்துள்ள பகுதிகளையும், பல முறை படித்து மனதில் பதிய வைத்துக் கொள்வது மாணாக்கனுக்கு நன்மையே. சொல்லாற்றலும் ரச ஞானமும் முதிர்தலாய்த் தான் புதுவது புனையும் நூல்களுக்கு இவைகளெல்லாம் அனுகூல சாதனங்கள் ஆகும். இலக்கியங்களிலும் நீதி நூல்களிலும், ஒரோவிடத்து ஒவ்வொரு வாக்கியமும் சிலவிடங்களில் ஒரு கோவையான சில பாடல்களும்

சம்பாஷணையில் ஒவ்வொரு சமயத்தில்தான் விளக்கி வற்புறுத்தப் புகுந்த விஷயங்களுக்குப் பிரதானமாக எடுத்துக் காட்ட உதவும் பொருளையறியாமல் கெட்டுருப் பண்ணுவது கேவலம். நிஷ்பிரயோசனமான பிரயாசம். பொருளறிந்து தெளிந்தவிடத்தும் சரித்திரமும் புராணமுமான நூல்களை நெடுக நெட்டுருப் பண்ணுவது பித்தர் செய்கையே.

கடினமான நூல்களைச் சூட்சுமமாகக் கிரகிப்பதற்கும் கிரகித்ததை மனதில் நன்கு பதிய வைத்தற்கும், அந்நூல்களைச் சுருங்கப் பிடித்தெழுதலே உத்தமமான உபாயம். ஒரு நூல் தன்னளவில் ஓர் உண்மையை அனுசரித்ததானால், இங்ஙனம் சுருக்கம் எழுதலில் வெகுவாய்க் கஷ்டம் இராது. மாணாக்கன் அந்நூலின் ஒழுங்கையே அனுசரித்து, முக்கியமான அமிசங்களையும் உதாரணங்களையும் அதிகார வடைவின்படி தேர்ந்து கொண்டு, அட்டவணை ரூபமாக, ஒரு விஷய சூசிகையை எழுதுவது போதும். இது செய்ய விரும்பும் மாணாக்கர்கள் நன்னூலைத் தொகுத்து எழுதிப் பார்க்கலாம். அந்நூலை வார்த்தை வார்த்தையாகப் பெயர்த்தெழுதுவதைக் காட்டிலும், இங்ஙனம் அதன் முக்கியாம்சங்களை ஆராய்ந்து தேடித் தேர்வதற்கும் அவைகளைச் சுருக்குவதற்கும் கொள்ளும் பிரயாசையினால், அந்நூல் மனதில் நன்றாய்ப் பதிவதன்றி, நூலின் ஒழுங்கும் அமைதியும் நன்கு கிரகிக்கப்படுதலால், இந்த உபாயம் மிகவும் உபயோகமானதே. ஒரு நூலின் ஒழுங்கும் அமைதியும் சுலபமாய் அறியக்கூடாத பக்ஷத்தில் அதனைச் சுருங்கப் பிடித்தெழுதுவது மாணாக்கனுக்கு மிகவும் கஷ்டசாத்தியமான காரியமே. தொல்காப்பியத்துக்குச் சுருக்கமான விஷய சூசிகை அமைக்க முயன்று பார்த்தால் இதன் திறன் விளங்கும். ஒரு சாத்திரத்தைப் படிக்கும் ஆரம்ப காலத்திலே தானே, இங்ஙனம் சுருக்கங்கள் அமைக்க முயல்வது யுக்தமன்று. அந்தச் சாஸ்திர சம்பந்தமான இரண்டொரு நூல்களை இங்ஙனம் பாகுபாடு செய்து சுருக்கப் புகுவது நன்மை. இது செய்தாலொழிய யாதொரு சாஸ்திரத்தையும் ஒருவர் தீர்க்கமாகக் கற்றறிந்

தவர் என்றுரைத்தல் ஆகாது. ஒரு நூலுக்கு விளக்கமாய் நன்கமைந்திருக்கும் விஷய சூசிகையைப் பலமுறை கவனிப்பதனுல், நூலின் விபரங்களெல்லாம பலமுறை நினைவில் வரும். நூலின் விஷயங்களும் மனதில் நன்ருய் நிலைத்துவிடும்.

## 8

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை அரைப்பங்காகச் சுருக்கி எழுதுக:**

பழஞ் சொற்கள் மெலிந்து தேய்ந்து உரமின்றிப் போகுந்தறுவாயில் அவற்றிற்குப் பதில் புதுச் சொற்கள் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் புதுச் சொற்கள் பண்டை வடிவின் திரிபுகளாகப் பெரும்பாலும் இருத்தல் இயல்பே. இவ்வழியே ஓரெழுத்தொரு மொழிகள் வேறு எழுத்துப்பெருக்கால் வாயினல் உச்சரிக்கக்காணுது வழக்கு வீழ்ந்து போகிறது. வழக்கில் இருக்க வேண்டுமானல் ஏதாவது எழுத்துச் சாரியை சேர்த்து வழங்க வேண்டும். அவ்வாறு பசுவைக் குறிக்கும் "ஆ", விலங்கைக் குறிக்கும் "மா", அரசனைக் குறிக்கும் "கோ" என்னும் சொற்கள் ஆன், மான், கோன் எனப் புதுச் சொற்களாக மாறினதால்தான் இன்று வழங்குகின்றன. அல்லாக்கால் இடம் என்னும் பொருளில் சே, அம்பினைக் குறிக்கும் ஏ, கோழையைக் குறிக்கும் ஐ முதலிய சொற்கள் வழக்கற்றுப் போயினவாறேபோல ஆ, மா, கோ என்பவையும் வழக்கினின்று வீழ்ந்திருக்கும்.

நாள் ஏற ஏற ஒரு மொழி குறித்த பொருளைப்பற்றிய அறிவு வளர்தல் உண்டு. அதனுல் அன்றே நிறம் ஐந்து என்று நினைத்துப் பச்சை, சிவப்பு, வெள்ளை, நீலம், மஞ்சள் என்ற அளவிலே நின்றவர்கள் கிக்கிலி, ஊதா, அவுரி என்று நிறப் பெயர் குறிக்கும் சொற்களைப் புதிதாக உண்டாக்கிக் கொண்டார்கள். ஆனுலும் மூக்கினல் முகரும் மணத்திற்கு மாத்திரம் பல்வேறு பெயரைப் புதுவதாக ஆக்கிக்கொள்ள

மணிதன் இன்னும் அறிந்தான் இல்லை. பூ நாற்றம் என்றும், புலால் நாற்றம் என்றும், நறு நாற்றத்தையும் மற்ற நாற்றத்தையும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னால் வேறுபடுத்திக் கூறிய தமிழன் இன்னும் அதற்குமேல் கடந்து போய் வெவ்வேறு மணத்திற்குச் சொல் அமைக்கவில்லை. இதில் வாழைப்பழ வாசனை, மாம்பழ மணம், தேன் வாசனை, சந்தன வாசனை, மல்லிகை மணம், மழை வாசனை வீசுகின்றது என்றானே தவிர வேறு பிரித்துரைக்கும் சொற்களை இன்னும் அமைத்துக் கொள்ளவில்லை. இது தமிழனுக்கு மாத்திரம் உள்ள குறை அன்று; உலகினர்க்கே ஒத்த குறை. கண்ணாற் காணும் நிறத்தைவிட, காதினாற் கேட்கும் ஒலியினைவிட, மூக்கினால் முகரும் மணம் கணக்கில்லாதவை ஆனதால் தான், தனிப் பெயர்கள் அமைக்கப்படவில்லைப் போலும்!

[தனித் தமிழ்க் கட்டுரைகள்.]

9

பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-

கூட்டங்களில் தலைமை வகிப்போர் அறிஞராயும் திறமையுடையராயும் இருத்தல் வேண்டும். பல உரையாளரை உண்டாக்கலாம். ஆனால் தலைவர் பிறப்பிலேயே தலைமை வகித்தற்குரிய இயல்பு வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும். உரையாளர் பேசும் ஒவ்வொரு வாக்கியத்தையும் தலைவர் கவனித்துக் கொண்டு வரல் வேண்டும். உரையாளர் தமக்கு மாறுபடப் பேசுவாராயின், அதனைக் குறிப்பிட்டு வைத்துக் கொண்டு உபந்நியாசத்தின் இறுதியில் அவரைக் குறை கூறாது தம் கருத்தை வெளியிடுதல் தலைவர் கடமை. உரையாளர்க்குக் கொடுக்கப்படும் கால அளவில் தலைவர் கால்பங்கே கைக் கொள்ளுதல் வேண்டும். கூட்டத்தைச் செம்மையாக நடத்துவதற்குத் தலைவர் அமர்கிறாரேயன்றி உரையாளரைவிட அதிகமாகப்

பேசித் தம் சாமர்த்தியத்தைக் காட்டி அவரை அவமானம் செய்தற்கன்று. கூடுமானல் அவர் உரையாளர் கூறிய கருத்துக்களில் உயர்வுடையனவற்றை மக்கட்கு எடுத்துக் காட்டலாம். நம் நாட்டில் அதுவும் தமிழ் நாட்டில் தலைமை வகிப்போர் உரையாளர் கொள்ளும் கால அளவினும் இரண்டு பங்கு எடுத்துக் கொள்கின்றனர். பின்னும் நம்மவரில் பெரும்பாலோர் தலைமை வகித்தல் சுலபமான காரியம் என்றும், தாம் தாம் மனம் போன விதம் பேசலாமென்றும் எண்ணிக் கால அளவையும் கவனியாமல் பேசுகின்றனர். பொது மக்கட்குக் கோபத்தை உண்டாக்கக் கூடிய விஷயத்தை உரையாளர் கூறியிருப்பாராயின், தலைவர் இரு திறத்தார்க்கும் பொதுவாக நின்று உண்மையைத் திறம்படக் கூறி அமைதியை உண்டாக்கலாம்.

[பல்வகைக் கட்டுரைகள்.]

## 10

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை அரைப்பங்காகச் சுருக்கி எழுதுக :-**

ஒருவன் ஒரு காட்டுக்குள் சென்று அங்குள்ள ஒரு மரத்தின் மீது, பிராணியொன்றிருப்பதைப் பார்த்தான். பார்த்துவிட்டுத் திரும்பி வந்து தன் நண்பன் ஒருவனிடம் "நண்பா, காட்டில் நான் ஒரு பிராணியைப் பார்த்தேன். அஃது எவ்வளவு அழகான சிவப்புத் தெரியுமா?" என்ருன். அந்த நண்பன் "ஓ! நான் கூடக் காட்டிற்குள் சென்றிருந்தபோது அந்தப் பிராணியைப் பார்த்தேன் அதனைச் சிவப்பு என்று எப்படிச் சொல்கிருய்? பச்சை நிறமல்லவோ அது" என்ருன். இந்தச் சமயத்தில் வேஞெருவன் வந்து "நீங்கள் இரண்டு பேர் சொல்வதும் தவறு அந்தப் பிராணி மஞ்சள் நிறமுடையது" என்ருன். இப்படிப் பலர் வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிறத்தைச் சொன்னார்கள். ஒருவன் சாம்பல் நிறமென்ருன். யார் சொல்வது சரியென்பதைப்பற்றி இவர்களுக்குள்ளே சண்டை

வந்துவிட்டது. கடைசியில் மரத்தருகிற் சென்று பார்ப்ப தென்று தீர்மானித்து அப்படியே சென்றார்கள். அந்த மரத்தடியில் ஒருவன் உட்கார்ந்து இருந்தான். அவனிடத் தில் ஒவ்வொருவரும் தாங்கள் பார்த்த நிறத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவன் அவர்களைப் பார்த்து "சகோதரர் களே, நான் இந்த மரத்தடியில் தான் வசிக்கிறேன். நீங்கள் சொல்கிற பிராணியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரி யும். நீங்கள் அனைவரும் சொல்வது சரியே. அந்தப் பிராணி ஒருசமயத்தில் சிவப்பாகவும், இன்னொரு சமயத் தில் மஞ்சளாகவும், மற்றொரு சமயத்தில் ஊதாவாகவும் இப் படி ஒவ்வொரு சமயததில் ஒவ்வொரு நிறமாகத் தோன்று கிறது அது பச்சோந்தி. சில சமயங்களில் அதற்கு எவ் வித நிறமும் இருப்பதில்லை" என்று கூறினான்.

[தியானமாலை.]

## 11

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை அரைப்பங்காகச் சுருக்கி எழுதுக :-**

வித்தையைப் பால்யத்தில் தானே கற்றல் வேண்டும். ஏனெனில் அந்தப் பருவத்தில் நம்முடைய புத்தி வேறே யாதொன்றிலும் செல்லாததாகையால் அப்போது படித் தால் அது கல்லின் மேல் எழுதிய எழுத்தைப் போல நன்றாக மனதில் தரிக்கும். பால்யத்தில் தானே படிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாலும், நாம் அதைப் பற்றி அதிகமாகப் புத்தியை வருத்தக் கூடாது. அப்படிச் செய்தால் வில்லை அதிகமாக வளைப்பின் அது எப்படி ஒடிந்து போகிறதோ அப்படியே நம்முடைய புத்தியின் கூர்மை மழுங்கிப் போகும். படிக்கவும் வெறுப்பு உண்டா கும். அந்தப் பருவத்தில் படிக்க வெறுப்பு உண்டானல் அதைப் பின்பு நீக்குகிறது மிகவும் வருத்தமாக இருக் கும். பால்ய காலத்தில் நம்முடைய புத்தி முக்கியமாக விளை யாட்டில் செல்லும். ஆகையால் இளமைக் காலத்தில்

கொஞ்சக் காலத்தைக் கல்வி கற்பதில் செலவழிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் காலத்தையெல்லாம் படிப்பில் தானே செலுத்தினால் புத்தி மிகவும் பலவீனம் அடையும். விளையாடுகிறதினால் காலம் வீணாகப் போகின்றதே என்று எண்ணிச் சிலர் தமது சிறுவர்களை இரவும் பகலும் படிப்பில் தானே அதிகமாக வருத்துகிறார்கள்; அது சரியன்று. விளையாடுவதினால் மனத்திற்கு அதிக சந்தோஷம் உண்டாகின்றதுமல்லாமல் சரீரத்திற்கு சௌக்கியமும் உண்டாகின்றது. விளையாடி வந்தவுடனே படிக்க ஆரம்பித்தால், படிக்கும் விஷயத்தில் புத்தி நன்றாகச் செல்லும்.

[வியாச மஞ்சரி.]

## 12

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை நூற்றுப்பதினைந்து சொற்களுக்கும் நூற்றுமுப்பத்தைந்து சொற்களுக்கும் இடையில் தருக :-**

பழைய மனிதன் குகைகளில் வாழ்ந்தபோதும் மரத்தின் அடியில் வாழ்ந்தபோதும் அவனோடு வாழ்ந்த முக்கிய உயிர் பாம்பாகும். பாம்பு கடித்து அவன் இறந்தான்; அவன் மீண்டும் எழாததைக் கண்ட மனிதன் அதனிடம் அச்சம் கொண்டான்; பயத்தின் காரணமாக அதனிடம் பக்தி செலுத்தினான்; பயபக்தி என்பது உலக வழக்கு. பயத்தின் அடிப்படையில் இருந்து எழுவதுதான் பக்தி. தனக்குத் தீங்கு வருமோ என்ற அச்சத்தாலும் தான் மேற்கொள்ளும் ஒரு வேலை வெற்றிபெறாது ஒழியுமோ என்ற அச்சத்தாலுமே மனிதன் தான் நினைக்கும் கடவுளிடம் பக்தி செலுத்துகிறான். இதனை இன்றும் சமுதாயத்தில் பார்க்கிறோம். உலகில் உண்டான பலவகை வணக்கங்களுள் முதலில் உண்டானது பாம்பு வணக்கமே யாகும். இஃது உலகம் முழுவதிலும் பரவியிருந்தது. இன்றும் பெரும்பாலான மக்களிடம் பரவியிருக்கின்றது. பழைய மனிதன் இறந்த மக்களின் ஆவிகளை எண்ணி அஞ்சினான்; அந்த ஆவி மீண்டும் வந்து உடம்பில் பொருந்தும் என்று நம்பினான்; அதனால் ஒரு பெரிய தாழியைச்

செய்து அதன் ஒரு பகுதியில் ஆவியற்ற உடலையும் மறு பகுதியில் அந்த மனிதன் பயன்படுத்திய ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் வைத்து நிலத்தில் புதைத்தான். இவ்வாறு புதைக்கப்பட்ட தாழிகள் தமிழகத்தில் எண்ணிறந்தவையாகும். ஆவிகளைப் பற்றிய அச்சத்தால் உண்டானதே நீத்தார் வழிபாடு என்பது. இந்த நீத்தார் வழிபாடு இன்றளவும் தமிழர் குடும்பங்களில் இருந்து வருதல் கண்கூடு. எல்லாச் சமயத்தாரிடமும் இவ்வழிபாடு இருந்து வருகிறது. மக்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி ஊர்களை அமைத்து வாழத்தொடங்கிய பிறகு உண்டான வழிபாடுகள் பல. ஊரில் மக்கள் அஞ்சத்தக்க நிலையில் இருந்த கொடிய ஆடவரும் பெண்டிரும் இறந்த பிறகு அவர்கள் ஆவிகள் ஊராரைத் துன்புறுத்தாதிருக்க அவர்களுக்குக் கோவில்கள் எழுப்பப் பெற்றன. ஒழுக்கத்திற்சிறந்த பெருமக்களுக்கும், சிறந்த பத்தினிப் பெண்களுக்கும், கன்னிப் பெண்களுக்கும் கோவில்கள் அமைந்தன. இந்த உண்மையை மணிமேகலை என்னும் காவியத்தாலும் அறியலாம். மனிதன் அறிவு இவற்றோடு அமைதியுறவில்லை. தான் வழிபட்ட பாம்பு இறந்ததை அவன் கண்டான்; தன்னைப் போன்ற மனிதனது ஆவி முடிவான பொருள் அன்று என்பதைக் காலப் போக்கில் அறிந்தான். எனவே, அவனது அறிவு மேலும் ஆராயத் தொடங்கியது. நாள்தோறும் காலையில் சூரியன் தோன்றுவதையும் மாலையில் மறைவதையும் எண்ணினான்; பருவகால மழையையும் வெயிலையும் எண்ணிப் பார்த்தான். ஒரு தலைவனை உடைய இல்லம் எவ்வாறு சில ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு நடைபெறுகிறதோ அவ்வாறு சூரிய சந்திரர் தோற்றங்களும் பருவங்களின் போக்குவரவும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு இயங்குதலை உணர்ந்தான். குடும்பத்துக்குத் தலைவன் இருப்பது போல உலகத்தையும் பிறவற்றையும் படைத்து அவற்றை ஒழுங்காக இயக்க ஒரு தலைவன் இருக்க வேண்டுமென்று எண்ணினான்; அந்தக் கடவுள் மனிதனாகிய தலைவனைப் போல இவ்வுலகில் காணப்படாமையால் தான் கண்ணால் காணமுடியாத மேல் உலகில் இருப்பதாக எண்ணி

னன். அந்த எண்ணம் வலுப்பட வலுப்பட மேலே பல உலகங்கள் இருக்கின்றன என்றும் அவற்றில் இறந்தவர்கள் அனைவரும் இருக்கின்றனர் என்றும் மேலே உள்ள இறைவன் அவர்தம் செயல்களுக்கு ஏற்பப் பல்வேறு உலகங்களில் வாழச் செய்கிறன் என்றும் கருதினன். இக்கற்பனையிலிருந்து வந்தவையே மோட்சலோகம் நரகலோகம் முதலியன.

[G. C. E. 1962]

## 13

**பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்பது தமிழில் வழங்கும் பழமொழி. வரலாற்றை ஆதிமுதல் நோக்கினல் இக்கூற்று முற்றும் உண்மை எனத் தோன்றும். தனிப்பட்டவர்களின் பிணக்குகள் மாத்திரமல்ல அகில உலகப் பிணக்குகளும் வலிமையால் தீர்க்கப்படுகின்றன. பழைய மானியப் பிரபுக்கள் காலத்தில் இருவர் போர் செய்து தமது பிணக்கைத் தீர்த்துக்கொள்வது சட்ட சம்மதமாகவிருந்தது. இருவருக்கிடையில் சச்சரவு உண்டாகும்போது எவன் தனது கைப்பலத்தை அதிகம் காட்டுகிருனே அவன் வெற்றியடைகிருன்.

முதல் உலகப் போரில் ஜெர்மனியர் நன்ருகப் போர் செய்தார்கள். அதிக பண வாய்ப்பும் அதிக போராயுதங்களும் படைத்த அமெரிக்கர், போரில் புகுந்ததும ஜேர்மனியர் தோல்வியடைந்தனர். இரண்டாவது உலகப் போரிலும் ஐக்கியப் படைகள் ஈட்டிய வெற்றியும் வலிமையாற் கிட்டியது. இரண்டு நாடுகளுக்கிடையில் போர் மூளும் போது எவர்களிடம் அதிக வெடி குண்டுகள், வெடி மருந்து, பீரங்கி போன்ற போருக்கு வேண்டும் பொருள்கள் இருக்கின்றனவோ, அவர்களே வெற்றி பெறுகின்றனர். சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இதற்குப் பல எடுத்துக்

காட்டுக்களைக் காணலாம். வலிமை எவ்விடத்தும் வெற்றி ஈட்டத் தவறுவதில்லை. ஆயுதம் தாங்கியவர்கள் போர் செய்தார்கள்; ஆயுதம் இல்லாதவர்கள் மாண்டார்கள். மிகப் பழங்காலம் முதல் வலிமையே உலகை ஆண்டு வருகிறது "வாளினும் பார்க்கப் பேனு வலிமையுடையது" என்னும் பழமொழி வழங்குகிறது. பழமொழி வழங்கலாம், ஆனல் பேனு செய்யமுடியாதவற்றை வாள் செய்து முடித்திருக்கின்றது. வாள் எடுக்கின்றவன் வாளால் மடிவான் என நீதி நூலார் கூறுவர். அவர்கள் கூற்றின்படி நீதி வலிமையினல் ஒருவன் தனது இலக்கைப் பெறலாம்; வலிமையினல் கிடைக்கும் வெற்றி பாதி அளவினதே. வலிமையினல் பெறும் வெற்றி நீடிப்பதில்லை. இதற்கு வரலாறு சான்றளிக்கின்றது. வலிமையினல் ஒருவனை அல்லது ஒரு நாட்டை ஒன்றைச் செய்யும்படி பணிக்கலாம். அதனைத் தொடர்ந்து செய்யும்படி செய்யமுடியாது. மனிதனுக்கும் மனிதனுக்கும், நாட்டுக்கும் நாட்டுக்கும், நட்பினல் உண்டாகும் கட்டுப்பாடு முறிந்துபோகாது இக்கொள்கையைக் காந்தி அடிகள் பின்பற்றினர். வலிமையினும் பார்க்கச் சாந்தமே சிறந்த குணமென பைபிளும் கூறுகின்றது. சாந்தம் கோழைத்தனத்தின் அறிகுறியன்று. இந்தியா சுதந்திரம் பெறுதற்கு அதிக இராணுவ பலத்தைச் செலவிட்டிருக்கவேண்டும்; ஆனல் அது வலிமையைப் பயன்படுத்தாது ஆன்ம சக்தியினல் விடுதலை பெற்றது.

## 14

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை நூறு சொற்களுக்கும் நூற்றுப் பதினைந்து சொற்களுக்கும் இடையில் அடங்கக்கூடியதாக எழுதுக :—**

ஆங்கிலத்தின் உபயோகத்தைப் பற்றி இங்கு விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. ஆங்கிலத்தின் தரம் நம்முடைய மாணவர்களிடையே குறைந்திருப்பதன் காரணம் ஆங்கிலப் பாடத்தை முன்போல் கீழ் வகுப்பிலிருந்து சொல்லிக் கொடுக்காமையே. இனி மூன்ருவது வகுப்பி

லிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப்படும். பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்பைக் கொண்டு ஆசிரியர்களுக்குச் சிறந்த முறையில் ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை ஒட்டிய வகையில் தாய் மொழியின் மூலமாகப் பாடஞ் சொல்லிக் கொடுக்கப்படும். ஆனால் சிலவேளைகளில் ஆங்கிலத்திலும் சொல்லிக் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது. இந்த மாநிலத்திலே ஆங்கிலத்தையும் தமிழையும் தவிர வேறு ஆறுமொழிகள் மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது சிறுபான்மையோரின் மொழித் தேவையைப் புறக்கணிப்பதற்கில்லை. உத்தியோகம், வியாபாரம் என்பன நிமித்தம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகிறவர்களின் நிலைமையுமொட்டி ஆங்கிலத்திலும் பாடஞ் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. கல்லூரியில் ஒரேயடியாகத் தமிழ் மூலமே பாடஞ் சொல்லிக் கொடுப்ப தென்பது அனுபவ சாத்தியமற்ற விடயம். அது மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உகந்ததன்று. நம்முடைய ஒப்புயர்வற்ற தமிழ் மொழியை நன்றாகக் கற்றுணர்வது தமிழிலக்கியச் செல்வங்களைப் படித்து அனுபவிப்பது என்பனவெல்லாம் மிக முக்கியமான விடயங்களே. அதற்கு வேண்டிய ஆதரவை அரசாங்கம் தயங்காமல் அளிக்கும். தமிழ் இலக்கியம் சொல்லிக் கொடுப்பதற்கும் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்கும் தனிக் கல்லூரிகள் அமைக்க யாராவது முன்வந்தால் அரசாங்கம் வேண்டிய ஆதரவைத் தாராளமாக அளிக்கும். ஆனால் விஞ்ஞானம், பொருளாதாரம் போன்ற விடயங்களை மாணவர் கற்று உணர்வது வேறு விடயம். இன்றைய ஆராய்ச்சிகளின் சாதனைகளை நன்றாக உணர்ந்து முதிர்ந்த அறிவு பெறுவதற்கு எந்த மொழி சாதகமாக இருக்கிறதோ அதை நம்முடைய மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். எந்த அரிய விடயங்களையும் தமிழில் ஆக்கலாம் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக உண்டு. அரசாங்கமும் பல தமிழ் நூல்களை வெளியிடவேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால் இவை ஓரளவு சாத்தியம். யுனெஸ்கோ என்ற உலகத்தாபனம் உலகிலே

உள்ள ஆராய்ச்சியின் விளைவுகளை விளக்கிப் புத்தகங்கள் வெளியிட்டு வருகிறது. அவற்றிலே நாற்றுக்கு ஐம்பது ஆங்கிலப் புத்தகங்களேயிருக்கின்றன. எனவே ருசிய விஞ்ஞானிகள் கூட தங்கள் மாணவர்கள் விஞ்ஞானத்தில் உயர்ந்த அறிவு பெற வேண்டுமென்றால் கல்லூரிகளில் ஆங்கிலம் மூலமே கற்றுக் கொடுப்பதென்று தற்போது முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது. ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்து கொள்ள எந்தச் சாதனம் உதவுகிறதோ அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு தமிழ் மாணாக்கன் ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்து கொண்ட பிறகு தமிழிலே அதை விளக்குவது சிரமமாயிருக்காது.

[G. C. E. 1963]

## 15

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:-**

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் இசையிலும் நாட்டியத்திலும் அடைந்திருந்த உயர்வைச் சிலப்பதிகாரத்திற் காணலாம். நாட்டியப் பெண்ணின் இலக்கணம், நாட்டியம் கற்றுக் கொடுக்கும் ஆசானின் இலக்கணம், ஆடலுக்குப் பாடுகின்ற வித்துவானின் இலக்கணம், சங்கீதத்துக்கு வேண்டிய சாகித்தியத்தை அமைக்கும் புலவனின் இலக்கணம், மிருதங்க வித்துவானின் இலக்கணம், குழல் வித்துவானின் இலக்கணம், யாழ் வாசிப்போனின் இலக்கணம், நடன அரங்கின் அமைப்பு, நடனமாடுவோர் அரங்கில் தோன்றும் முறை, நாட்டியத்தின் இலக்கணம் ஆகிய யாவும் அங்கு நன்கு தொகுக்கப்பட்டுள்ளன. தேவாரங்களிற் காணப்பட்ட பண்களின் தோற்றத்தையும் அமைப்பு முறையையும் சிலப்பதிகாரத்தில் காணலாம். இசையும் நாட்டியமும் வாழ்க்கைக்கு உவகையூட்டும் பான்மையிலேதான் பண்டைத் தமிழகத்தில் பெரும்பாலும் கையாளப்பட்டு வந்தன

வென்றே கூறல் வேண்டும். அரசர்களும் செல்வர்களும் இசையைக் கேட்டும் நாட்டியத்தைப் பார்த்தும் இன்புற்று வந்தனர். விழாக்களில் இசையும் நாட்டியமும் இடம் பெற்றிருந்தன. பொது மக்கள் ஆடல் பாடல் உடையோராய் வாழ்ந்தனர். மக்களின் வழிபாட்டில் ஆடலும் பாடலும் இடம் பெற்றிருந்தன. குறிஞ்சிநிலமக்கள் முருகனை ஆடலாலும் பாடலாலும் வழிபட்டனர். அவ்வாடல் குன்றக்குரவை எனப்பட்டது முல்லை நிலமக்கள் மாயோனை ஆடிப்பாடி வழிபட்டனர். அது ஆய்ச்சியர் குரவை எனப்பட்டது. பாலைநில மக்கள் ஆடிப் பாடியது வேட்டுவவரியெனப்பட்டது. பண்டைத் தமிழ் நாட்டில் இசையும் நாட்டியமும் பரம்பரைத் தொழில்களாகவே வளர்க்கப்பட்டன. இசை பாடும் மக்கள் பாணர் என்று அழைக்கப்பட்டனர்.

## 16

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

புறத்தோற்றங்களாகிய நாகரிகம், உடை, உணவு, பழக்க வழக்கங்கள், வாகனங்கள், மேற்பூச்சுக்கள் முதலியவற்றையே நாம் பண்பாடு எனக்கொண்டு இன்று அதிகமாக மதிக்கின்றோம். கலை என்னும் பேரால் பண்பாட்டைக் குழிதோண்டிப் புதைக்கின்றோம். உடல் உறுப்புக்களை மூடவேண்டும் என்ற பண்பாட்டின் அடிப்படையில் தோன்றிய அதே ஆடை, இன்று அவ்வுடல் உறுப்புக்களைப் பல கோணங்களில் பார்த்து, மகிழும் வகைக்கே உதவுகின்றது. இப்படியே ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம். இந்த நிலையெல்லாம் மனிதன் பண்பாட்டை மறந்து விட்டான் என்பதைத்தான் காட்டுகின்றது. இப்புறநிலைப் பொருள்கள் எல்லாம் பண்பாட்டை விளக்குவனவே. அவை அமைய வேண்டிய வகையில் அமைந்தால், சிலர் உடையைக் கண்டே அவர்தம் உயர்ந்த பண்பினை நாம் இன்றும் போற்றுகிறோம். சிலர்

கூந்தலைக் கொண்டையிடும் அமைப்பிலேயே அவர்களின் பண்பினை அறுதியிடுகிறோம். சிலர் நம்மிடம் பழகும் முறையிலேயே பண்பாட்டை அறிகின்றோம். எனவே இவையெல்லாம் பண்பாட்டை விளக்கும் சாதனங்களாக அமைகின்றன. அவற்றின் உண்மை நிலையினை உணர்ந்து அந்தந்தச் சமுதாயத்தையும் தனிமனிதனையும் பண்பட்டவர் எனப் போற்றுகின்றோம். எனினும் வரவர உள்ளொன்று புறமொன்று என்ற நாகரிகம் வளர்ந்து வருவதால் ஒருவரை ஒருவர் நம்பாத சமுதாயம் உருவாவதால் நாம் மிக்க எச்சரிக்கையோடே யாரிடமும் பழக வேண்டியுள்ளது. ஆகவே நெஞ்சத்து அழுகு நலம் பொங்கும் பண்பாட்டை மிக எளிதில் புறத்திலே காண முடியாது. என்றாலும் போலியை நல்லவற்றினின்றும் பகுத்தறிந்து காண்பது போலத் தெய்வத் தன்மை வாய்ந்த உண்மைப் பண்பாட்டை எப்படியும் உணர்ந்து கொள்ளலாம். உணர்ந்து கொண்டு உற்ற கடமை வழி பண்பாடு கெடாது நாமும் நம் வாழ்வைச் செம்மை நெறியில் செலுத்திச் சென்றால் உய்வு உண்டு.

[தே. போ. மீ. மணிவிழா மலர்]

## 17

**பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:**

காலதாமதம் என்னும் குற்றத்துக்கு நாம் சற்றும் இடம் கொடுக்காமல் பலமாய் எதிர்த்து நின்று அதனோடு போராடவேண்டும் என்பதற்கு முக்கியமாய் இரண்டு காரணங்கள் உண்டு. சென்ற நாட்கள் ஒருபொழுதும் நின்ற நாட்களாகமாட்டா என்பது நிச்சயம். ஒரே விஷயத்தை நாம் இரு முறை செய்யும்படி ஒருபொழுதும் நமக்கு வாய்க்காதென்பது திண்ணம். ஏற்ற சமயம் எப்போதும் வாய்க்குமா? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வதுபோலச் செய்யத் தொடங்கின காரியங்களைச் செய்யத்தக்க காலத்தில் தப்பாது செய்தே தீரவேண்டும். வாய்த்த சமயத்திலே

செய்யாது விட்டுவிட்டால், மறுபடியும் சமயம் நேர்ந்தாலும், அது முன்னதைப்போல நன்றாயிராமல் ஏதாவது குற்றங் குறை உள்ளதாகத்தான் இருக்கும். ஆகவே கருதிய காரியம் கை கூடாமல் போவதே இயற்கை. மனிதர் வாழ்க்கை நிச்சயமன்று. ஆதலால் எதை எப்பொழுது செய்யவேண்டுமோ, அதை அந்த வேளையிலேயே தப்பாது செய்துகொள்வதே அறிஞர் கடன். காலதாமதத்துக்கு இடம் கொடுத்தால், அது வரவர விருத்தியாகும். வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் வெகுசுலபமாய் இந்தத் துரப்பியாசம் பலமாய் வேரூன்றி, நம்மிடத்தில் குடிகொண்டு பலவிதத்திலும் நம்மைச் சதிசெய்யும். நாம் இதன் வலையினின்றும் தப்பி வெளிப்படுவது எளிதன்று. இது தைரியக் குறைவை உண்டாக்கி அற்ப காரியத்தையும் செய்யவொட்டாமல் நம்மை மலைக்கப்பண்ணும். நாம் செய்யவேண்டிய காரியங்களை 'நாளைக்கு ஆகட்டும்' என்று நிறுத்தி வைக்காமல், நாள்தோறும் குறித்த வேளைகளில் ஒரு குறையும் இல்லாதபடி ஒழுங்காய்ச் செய்ய வழக்கப்படுத்திக்கொண்டால், எல்லாம் இனிது முடிந்து காலதாமதம் உண்டாவதற்கு இடமிராது ஆரம்பத்திற்றனே இந்தக் குற்றத்தை வேரோடு களைந்துவிட்டால் நாம் அதனால் சுகப்பட்டு முன்னுக்கு வருவதுமன்றி, நம்மைச் சேர்ந்தவர்களையும் முன்னுக்குக் கொண்டு வரலாம். ரோமச் சக்கரவர்த்திகளுள் ஒருவராகிய ஜூலியஸ்சீசர் என்பவருக்கு விரோதமாகப் பலர் எழுந்து மந்திராலோசனை மண்டபத்தில் அவரைக் கொலை செய்த அன்று, காலையில் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் மந்திராலோசனை மண்டபத்திற்கு அன்றைத் தினம் போனால் மரணம் அடையவேண்டுமென்றும், அதற்குத் தப்பிப் பிழைக்கும் உபாயம் இன்னதென்றும் அதில் கண்டிருந்தது. அக்கடிதத்தை அவர் அன்று காலையில் கையில் வாங்கியும், உடனே அதைப் பிரித்துப் படித்துப் பாராமலே அப்புறம் பார்க்கலாமென்று மந்திரியிடம் கொடுத்தமையால் அன்று அங்கே போய்க் கொலையுண்டார். காலதாமதத்தால் சில சமயத்தில் உயிர்க்கிறுதியும் உண்டாகலாம்.

[வியாச மஞ்சரி]

## 18

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

பெரும்பாலும் உலகத்தின்கண் நடக்கும் எல்லா முயற்சிகட்குங் கல்வியானது முதன்மையாக வேண்டப்பட்டு உடம்பைப் பாதுகாப்பதேயாயினுஞ், சிறப்பாக நோக்குங்கால் கல்வி உயிரைப் பாதுகாத்து வளர்ப்பதற்கே கருவியாயிருக்கின்றது. கைத்தொழிலோ எவ்வளவு நுட்பமாகச் செய்யப்படினும் அஃது உடம்பைப் பாதுகாக்குமுகத்தால் உயிர்க்கும் சிறிது பயன்படுமேயல்லது அது கல்வி போல் உயிர்க்கு நேரே பயன்படுவதன்றாம். ஆகவே, கல்வி ஒன்றுமே உயிர்க்கு நேரே பயன்படுவதாமென்பதுங் கைத்தொழிலோ உடம்பிற்கு நேரே பயன்படுவதாமென்பதும் அறிதல் வேண்டும். எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும் அதற்கு அறிவு வேண்டியிருக்கின்றது. அறிவில்லாமல் எவரும் எதனையும் செய்தலியலாது. அறிவுடையவன் தானெடுத்த ஒரு தொழிலைச் செவ்வையாகச் செய்து முடித்தலும், அறிவில்லாதவன் தான் துவங்கிய தொன்றை ஒழுங்காகச் செய்யமாட்டாமற் பிழைபட்டு வருந்துதலும், நாம் நாடோறும் காண்கின்றோம் அல்லேமோ? அறிவில்லான் பிழைபட்டுச் செய்யமாட்டாத ஒரு தொழிலை அறிவுடையான் திருத்தமாக்கி விரைவிற் செய்து முடிப்பதனைக் கண்டு நாம் எவ்வளவு மகிழ்கின்றேம். அப்போது அவன் அறிவின் றிறத்தைக் கண்டு எவ்வளவு வியப்படைகின்றேம். இத்துணைச் சிறந்த அறிவை எவரும் இயற்கையாகவே பெற்றுக் கொள்ளல் இயலாது. ஏனென்றால், எல்லா உயிர்களின் அறிவையும் அறியாமை என்னும் ஒரு பேரிருள் மறைத்துக் கொண்டிருக்கின்றது. இருளைப் போக்குதற்கு ஒளியினுதவி கட்டாயமாக வேண்டப்படுதல் போல நமதறிவை மயக்கும் அறியாமை இருளைப் போக்குதற்குங் கல்வியாகிய விளக்கம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கல்வியில்லாதாரிற் சிலரும் அறிவுடையோராக இருக்கக் காண்கிறேமே

யென்றால், அவர் அறிவுடையார் செய்யும் செயல்களைப் பார்த்தும், பழகியும் சிறிது அறிவுடையாராகக் காணப்படினும் அவர் போலியாகப் பெற்ற அச்சிற்றறிவை மேன்மேற் பெருகச் செய்தற்குக் கல்வியில்லாமையால் அவர் அறிவு பயனின்றாய்க் கழியும்.

[மறைமலையடிகள்]

## 19

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

இவ்வுலகில் அழகுறத்தோன்றும் பொருள்களை அறிஞர் பலவாறாகப் போற்றி மகிழ்வர். இயற்கைத் தோற்றத்தின் இனிய அழகினை ஓவியப்புலவன் சித்திரத்தில் சிங்காரமாக அமைத்து மகிழ்வான். சிற்பநூல் வல்லான் அவ்வழகினைச் சிலையில் எழிலுற அமைத்து இன்புறுவான். நல்லியற் கவிஞன் அவ்வழகினைச் செஞ்சொற்களில் அமைத்துச் சீராட்டுவான். முன்னர்க்கூறிய ஓவியமும் சிற்பமும் கண்களைக் கவர்ந்து மனத்திற்கு இன்பமூட்டுகின்றன. ஆனால் கவியின்பம் செவியினைக் கவர்ந்து உளத்திற்கு உவகை ஊட்டுகின்றது. சிற்பநூல் வல்லானொருவன், முதலில், பாறையினின்றும் ஒரு கல்லைப் பெயர்த்தெடுக்கின்றான். அப்பால் அக்கல்லில் தான் அமைக்கக் கருதும் வடிவத்திற்கு வேண்டாத பாகங்களைப் பெயர்த்தெறிகின்றான். இவ்வாறு கல்லினின்று வடித்தெடுத்த உருவமே வடிவம் எனப்படும். இவ்வடிவம் அழகுற அமைந்திருக்குமேயாயின் அவ்வழகு வடிவு என்று வழங்கப்பெறும்.

ஆகவே ஒரு கல்லினின்றும் சிற்பநூல் வல்லானால் வடித்தெடுக்கப்பட்டு அழகுற இலங்கும் உருவமே வடிவம் என்று பெயர் பெறுவதாகும். இத்தன்மையே கவிஞனிடத்தும் அமைந்திருக்கக் காணலாம். கவிஞன் ஒரு மொழியினின்றும் செஞ்சொற்களை வடித்தெடுத்துப் படிப்

பொருள்ளத்தில் ஒரு வடிவை எழுதி அமைக்கிறான். இத்தகைய செஞ்சொற்களை வடித்த சொற்களென்று கற்றறிந்தோர் வழங்குகின்றார்கள். வடித்த சொற்கள் எனவே வடியாச் சொற்களும் உள்ளனவென்பது சொல்லாமலே அமையும். உலக வழக்கில் வடித்தசோறு, வடித்த தங்கம், வடித்த எண்ணெய் என்று வழங்கக்காண்கிறோம். கஞ்சி முதலிய வேண்டாத பொருள்களோடு கலந்து நிற்கும் சோற்றை அவற்றினின்றும் பிரித்தெடுத்தலே வடித்தல் என்பதன் பொருளாகும். அவ்வாறே மாசு மறுவோடு கலந்து நிற்கும் பொன்னைப் புடம் வைத்துப் பிரித்தெடுக்கும் செயலே வடித்தல் என்று சொல்லப்படும். உலக வழக்கில் வடி என்னும் பதம் இவ்வாறு வழங்குதல் போலவே நூல் வழக்கிலும் வழங்கக்காண்கிறோம்.

[R. P. சேதுப்பிள்ளை]

## 20

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:**

நாடகத் தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. அது கேட்போர்க்கும் காண்போர்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின் அஃது இன்பச் சுவையோடியல்வதாயிற்று. உலகத்தினியல்பினை உள்ளதையுள்ளவாறே காட்டுவது நாடகத்தமிழேயன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்த வழியே நாடகத் தமிழ்பிறந்ததெனினும் நாடகத்தமிழிற்கு வேறு தனிப் பெருஞ் சிறப்புள்ளது. முன்னைய இரண்டும் கேள்வியின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. இவ்விரண்டினடியாகப் பிறந்த நாடகத்தமிழோ கேள்வியின்பம் பயப்பதேயன்றிக் காட்சியின்பமும் உடன் பயக்கின்றது. இச்

சிறப்புப்பற்றியே பிறநாடுகளிலுள்ள பிறமொழிப் புலவர்கள் நாடகங்களை மிக்கமேன்மையுடையனவாக மதிக்கின்றனர். தமிழ் நாடகம் முதலிலுண்டானது மத உணர்ச்சிக்காகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல்கள் இரண்டையுஞ்சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின; அதன்மேல் முதலிற் பாடலாயுள்ள உரையாடல்களும் பின்னர் வசனமாயுள்ள உரையாடல்களும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பின்னர் நாடகத் தமிழ் வேத்தியல், பொதுவியல் என்ற இருபிரிவினதாகி அரசர்களானும் ஏனையோரானும் ஆதரித்து வளர்க்கப் பட்டது. ஒழுக்கநிலை வகுக்கப் புகுந்த ஆரியரும் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்ற தென்ற போலிக் கொள்கையுடையராய்த் தமது நூல்களில் கடியப்படுவனவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர். அக்காலத்திருந்த அரசர்களும் இதனை அறிவித்து நாடகத் தமிழைத் தலையெடுக்கவொட்டாது அடக்கி வந்தனர். நாளாவட்டத்தில் அது சிறிது சிறிதாக வீழ்ந்து கொண்டே வாராநின்றது. அதன்மேல் இயற்றமிழ்க் காப்பியங்கள் நாடெங்கும் மலிந்து சிறந்து நாடகத்தமிழை வளரவொட்டாது தடுப்பனவாயின. இவ்வாறு நாடகத் தமிழுக்கு நாற்புறத்தினும் தடைகள் அமைக்கப்பட்டபின் அது அழிநிலையடையத் தலைப்பட்டது. பண்டிதராயினோர் கடிந்து நாடகத் தமிழைக் கைவிடவே, அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவிலே நிற்கின்றது.

[தமிழ் மொழியின் வரலாறு]

## 21

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

தமிழகம் முன்னாளில் அறிவாற்றல் மிக்க வீரத்தாய்மார்களை உடையதாகி, அருமையும் பெருமையும் கொண்ட

செயல்களுக்குரிய நிலைக்களமாயிருந்தது. அவர்கள் பெற்ற வீரர்கள் குடிகளின் நலத்தின் பொருட்டும் அந்நாட்டு அரசனின் பொருட்டும் உயிரை விடுவதில் பயிற்சி மிக்கவர்களாய் சமயம் நேர்ந்த போதெல்லாம் அவ்வாறு செய்து, தமிழகத்தின் பெருமையை மலைமேலிட்ட விளக்கைப் போல் விளக்கி வந்தனர். சங்க நாளில் தமிழ் நாட்டின் மேல் வடவரசர் படையெடுத்து வென்ற செய்தி கேட்கப் படுதலேயரிது. ஆனால் தமிழரசர் வடவருடன் போர் புரிந்து வெற்றிபூண்ட விஷயம் காணலாம் இதன் காரணம் அக்காலத்து விளங்கிய தமிழர் வீரத்தின் மாட்சிமையேயாம். அத்தகைய வீரத்தை வளர்த்து வந்தவர் யாவர்? தமிழ்த்தாயர்களே யென்க. அச்சங்க காலத்துக்குப் பின்பு வீரத்தாய்மார்களும் உயிரை இழக்கவல்ல வீரமக்களும் குறைந்து வந்தமையால் வடவேந்தர் பலர் தமிழகத்தில் பிரவேசிக்கத் தொடங்கிய செய்திகள் கேட்கப்படுகின்றன. அக்காலத்துக்குப் பின்பு வடவர் தமிழர்க்குள் நிகழ்ந்து வந்த போர்கள் அளவுபடுவனவல்ல. களப்பிரர் என்றும், பல்லவரென்றும் இரட்டரென்றும் சளுக்கரென்றும் கூறப் படும் வடவரசர் கூட்டம் தமிழகத்தைக் கைப்பற்றலாயின அதனால் தமிழ் வேந்தராகிய சேர சோழ பாண்டியரும் பிறரும் தம் பழம் பெருமை குன்றினர். முடிவில் ஆண்மையும் தியாகமும் ஆகிய பயிற்சிகள் குறையத் தமிழர் வீரம் முற்றும் தலைகவிழ்ந்தது இக்காலத்தவராகிய நமக்கோ, மேலே கூறிவந்த அற்புத வீரச் செயல்களெல்லாம் வெறும் கற்பனைக் கதைகளாகவே தோன்றும் என்பது திண்ணம். ஏனெனில் நம்மவரது மனநிலை அவ்வளவு குன்றி யொழிந்தது. காலச் சக்கரத்தின் சுழற்சியால் உலகத்தில் ஓரிடத்திற்குள்ளே உண்டாம் அற்புத மாறுதல்கள் இவை.

[மு. இராகவையங்கார்]

## 22

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

யாத்திரை செய்து வந்த ஒரு பிரயாணி, ஒரு சமயம் பெரிய மைதானத்தை அடைந்தான். வெயிலில் வெகு நேரம் நடந்து வந்தபடியால், அவன் மிகவும் களைத்து வியர்த்திருந்தான்; ஆகையால் ஒரு மரத்தடியில் களைப் பாற உட்கார்ந்தான். "இங்கே உறங்குவதற்கு மெது வான படுக்கையொன்று கிடைக்குமானால் எவ்வளவு சுக மாக இருக்கும்" என்று நினைத்தான் அந்தப் பிரயா ணிக்குத் தான் ஓர் கற்பக விருட்சத்தடியில் உட்கார்ந்திருப் பது தெரியாது. மேற்கூறிய எண்ணம் அவன் மனத் தில் தோன்றின. உடனே, அழகான படுக்கையொன்று அவன் பக்கத்தில் இருப்பதைக் கண்டான். இது அவ னுக்கு ஆச்சரியத்தை விளைவித்த போதிலும், படுக்கையில் படுத்துக் கொண்டான். தன் கால்களைப் பிடிக்கப் பணிப் பெண்ணொருத்தி அங்கு வந்தால் மிகவும் ஆனந்தமாயிருக் குமே என்று நினைத்தான். அவ்வெண்ணம் தோன்றின வுடனே ஒரு பணிப்பெண் அங்கு வந்து அவன் பாதங் களை மெதுவாகத் தடவிக்கொண்டிருந்தாள். பிரயாணிக்கு உண்டான மகிழ்ச்சியை அளவிடமுடியாது. சிறிது நேரத் திற்கெல்லாம் பசி தோன்ற, நான் விரும்பியவை எல்லாம் கிடைத்திருக்கின்றன; உணவு கொஞ்சம் கிடைக்காதா? என்று நினைத்தான். உடனே, சுவையுள்ள பலகாரங்கள் பல அவன் முன் வைக்கப்பட்டிருந்தன உடனே சாப் பிட வாரம்பித்து வயிறார உண்டபின்பு மறுபடியும் படுக்கையின் மேல் படுத்துக்கொண்டான் பின்பு, அன்று நடந்தவைகள் எல்லாவற்றையும் பற்றிச் சிந்திக்கலானான். இவ்வாறு யோசிக்கும்பொழுது, "திடீரென்று ஒரு புலி தோன்றி என்னை எதிர்க்குமானால்" என்று நினைத்தான். உடனே புலியொன்று தோன்றி அவன்மீது பாய்ந்து, அவனைக் கடித்துக் கொன்றது. பிரயாணியும் இறந்தான். பொதுவாக மனிதர்களின் கதியும் இவ்வாறுதான். மனி

தர், பணம், கீர்த்தி ஆகிய இவைகளுக்காகப் பாடுபடுகின்றனர். ஆனால், ஆசைகள் ஒருவாறு பூர்த்தியாகலாம். பின்னே, மரணம் என்னும் புலி பதுங்கியிருப்பதை மறந்து விடுகின்றனர். எவ்வேளையில் அப்புலி பாயும் என்பது எவர்க்குத் தெரியாது.

23

**மேல்வரும் உரைப்பகுதியினை ஐம்பது சொற்களுக்கு மேற்படாமற் சுருக்கி உமது உரை நடையிலே எழுதுக:-**

பழைய காலத்திலே தவத்தால் மிக்க பெருமை பொருந்திய முனிவர் ஒருவர் இந்திரனுடைய மாளிகையில் அறிவு புகட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தார். ஒருநாள், அரம்பை ஊர்வசி, திலோத்தமை என்னும் நாடகக் கன்னியர் இந்திர சபையில் சிறப்பாக நடனமாடினர். ஆட்டத்தின் முடிவில் இவர்களுட் சிறந்தவர் யாரென்று முடிவு கொள்வது இயலாது போயிற்று. அப்பொழுது தேவேந்திரன் முனிசிரேட்டரைத் தீர்ப்பளிக்குமாறு வேண்டி நின்றான். அவருஞ் சிறிது ஆலோசித்தார் பின்பு அவருக்கு ஒருபாயந் தோன்றிற்று. மதிற்புறப் பூங்காவிற் சென்று மூன்று பூந்துணர்களைக் கொணர்ந்து அவற்றை நடன மாதர் கையிற் கொடுத்து அவற்றைப் பிடித்தவாறு மறுபடியும் ஆடப்பணித்தார். அப்படியே மூவரும் ஆடினர். ஒருத்தி ஆட்டத்திடை மயங்கி வீழ்ந்தாள். ஒருத்தி தாளந் தவறி ஆடினாள். மற்றை ஒருத்தி மட்டும் பாங்காக ஆடி முடித்தனள். இவளுக்கே வெற்றிமாலை சூட்டப்பட்டது. சபையோர் இதனை 'எப்படி' என்று உசாவினர். அதற்கு முனிவர் கூறுவாராயினர்:- கவின் கலைகள் மிக்க நுட்பமாக எடுத்தாள வேண்டியன. சிறிதளவேனும் வருத்துதலின்றி மீட்டற்கும் அனுபவித்தற்கும் உடம்பாடுடையன. இந்நிலையில் முதலிருவரும் வழுவித் தோற்றனர். யான் கொடுத்த பூந்துணர்கள் ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வொரு தேனீ மறைந்திருந்தது. முதலாமவள் துணரை

இறுகப்பிடித்தனள். தேனீ சுவாசிக்க முடியாது நின்றிக் கையிற் கொட்டிற்று அவள் மயங்கி வீழ்ந்தனள். இரண்டாமவள் தன் துணரிலை உரிய அளவிற்கன்றி மிகை படவசைத்தனள். தேனீ நகரத் தொடங்கிற்று. இதனை அவள் கையின் வழியே உணர்ந்தனள். அதனால் ஆட்டத்தில் முழுப்புலனுஞ் செலுத்த முடியாது தாளந்தவறினள். மூன்றாமவள் மெத்தெனத் தாங்கி ஆடிமுடித்தனள். அவளைத் தேனீ கொட்டிற்றிலது. கவின்கலைகள் நுட்பமாக எடுத்தாளவும் அனுபவிக்கவும் வேண்டியன.

[G. C. E. 1957]

## 24

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை 60 சொற்களிற் சுருக்கி எழுதுக. எழுதிய சொற்களின் தொகையை விடையின் முடிவிற் குறிப்பிடுக :-**

பொதுவாகக் கலையென்பது உணர்ச்சியை உயிராகக் கொண்டது. பாட்டுக்கலையில் அறிவுக்கு ஓரளவு இடம் இருப்பினும், உணர்ச்சிப் பெருக்கே அதன் உயிர் வாழ்வாகும். உணர்ச்சி எப்போதும் ஒருதலையானது. நடுநிலைமை உணராதது ஆய்ந்தோய்ந்து பாராதது பற்றிய ஒன்றையே போற்றி மற்றதை மறப்பது. ஆகையால் குணம் நாடிக் குற்றமும் நாடும் பெற்றியைப் பாட்டுக்கலையால் பெறமுடியாது. புலவர் ஊட்டும் உணர்ச்சியைப் பெற்று அவர் கண்டவாறு காணவே பாட்டுக்கலை துணை செய்யும். பாடிய புலவர் நல்லவராய், நேர்மையானவராய் இருப்பின் அவருடைய பாட்டைப் படிப்பவரும், நல்ல உணர்ச்சியை நேரியமுறையிற் பெறமுடியும். ஆயின் பாடிய புலவர் நடுநிலைமை அற்றவராய் ஒன்றைப் பற்றுடன் பாடியிருப்பின், அதைப் படிப்பவர் திருந்த முடியாதவராக மாறிவிடுவர். ஆகவே நன்மையையும் தீமையையும் ஆற்றலுடன் வளர்க்கவல்லது பாட்டுக்கலை. ஆனல் மக்க

ளின் சமுதாய வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் வேறுவகையானவை. அவை நடுநிலையான நோக்கையும் அறிவான ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவை. மக்களின் பொது வாழ்க்கைக்குத் தீமைவிளைக்க வல்ல எதையும் களைந்தெறிய வேண்டும் என்பதே அரசியல் அறிஞர்களின் கொள்கை. இதைப் பிளேட்டோ போன்ற ஒரு சிலர் அஞ்சாமல் வெளியிட்டுள்ளனர். மற்ற அறிஞர்களோ புலவர் செல்வாக்கைக் கண்டு அஞ்சி அடங்கிக் கூறுமல் விடுகின்றனர். ஆயினும் நெருக்கடி நேரும்போதும், அரசியற்றலைமைக்கு இடையூறு நேரும் போதும் தம்மைப் போற்றும் புலவர்களுக்கு மட்டும் இடம் கொடுத்துத் தூற்றும் புலவர்களுக்குத் தடையுத் தரவுகள் பிறப்பிக்கின்றனர். அது ஒரு வகையில் பாட்டுக் கலையை வெளியேற்றும் முயற்சியேயன்றோ? தடுக்கப்பட்ட பாட்டுக்கள் தீயநோக்கம் உடையவையென்று அந்த அறிஞர்கள் குற்றம் கூறலாம். ஆனல் பாடிய புலவர்கள் தம் நோக்கம் சீரானது என்று கருதுவதே இயல்பு. தம்முணர்ச்சிக்குக் கலைவடிவம் தரும் உரிமை அவர்களுக்கும் உண்டு. ஆகவே அந்தத் தடை கலைக்குப் பிறந்த தடை என்பது உண்மையேயாகும். கலை என்பது பிரசார நோக்கம் இல்லாததாக இருக்க வேண்டும் என்று ஒரு காரணம் கூறலாம். கலைகளின் வரலாற்றை ஆராய்ந்தால் பெரும்பாலானவை அந்தக் காலத்திற்குரிய பிரசாரத்திற்காகவே தோன்றியிருப்பதை உணரலாம்.

## 25

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

கிறிஸ்துவப் பாதிரிகளின் அபிப்பிராயப்படி நீகிரோக்களுக்கு, முற்காலத்திலோ, இக்காலத்திலோ யாதொரு மதமும் இல்லை. மதம் என்பதைப் பரந்த கருத்தில் எடுத்துக் கொண்டால் மனித அறிவுக்கு எட்டாத ஒரு பரம் பொருளை அவர்கள் நம்பி வழிபடுகிறார்களென்றே சொல்ல

லாம். அவர்கள் இச்சக்திக்குப் பயப்படவும் செய்கிறார்கள். உடல் அழிவதனால் ஒருவன் முற்றிலும் அழிவதில்லை என்று அவர்கள் லேசாக உணர்ந்திருக்கின்றனர். ஒழுக்கத்தையே மதத்தின் அடிப்படையாக நாம கொள்வோமானால், நீகிரோக்களும் ஒழுக்கத்துடன் இருப்பதால், அவர்களுக்கு மதமும் இருப்பதாகவே சொல்லலாம். வாய்ம்மைக்கும் பொய்ம்மைக்குமுள்ள வித்தியாசம் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். நீகிரோக்கள் தங்கள் பழமையான நிலைமையிலும் அனுஷ்டிக்கும் உண்மையை நாமோ அல்லது ஐரோப்பியர்களோ அவ்வளவிற்கு அனுஷ்டிக்கிறோமோ என்பது சந்தேகம். கோயில்களோ அம்மாதிரி வேறு எதுவோ அவர்களுக்கு இல்லை. மற்ற இனத்தாரைப் போல அவர்களிடத்திலும் பல குருட்டு நம்பிக்கைகள் இருக்கின்றன.

'நாகரிகம்' மெதுவாக நீகிரோக்களிடை பரவி வருகிறது. பக்தியுள்ள பாதிரிகள், தங்களுக்குத் தெரிந்த வகையில் ஏசுநாதரின் உபதேசங்களை அவர்களுக்குச் சொல்லுகிறார்கள். பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் இதுவரை படிப்பற்றவர்களாகவும் நாகரிகமற்றவர்களாகவுமிருந்தும் பல தீய பழக்கங்களையே அறியாமல் இருந்தவர்கள் இப்பொழுது மாசடைந்திருக்கின்றனர். நாகரிகமடைந்த எந்த நீகிரோவும் குடிப்பழக்கத்திலிருந்து தப்பியதில்லை. அவனுடைய பலமான உடல் குடிவசப்பட்டிருக்கும்போது, அவன் பைத்தியம் பிடித்தவனாகவே ஆகி எல்லாவிதமான குற்றங்களையும் செய்கிறான். இரண்டுடன் இரண்டைக் கூட்டினால் நான்கு ஆவது போல் நாகரிகம் மனிதனுடைய தேவையைப் பெருக்கிவிடுவதும் நிச்சயம். அவனுடைய தேவையை அதிகப்படுத்துவதற்கும், உழைப்பின் மதிப்பை அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும் தலைவரியும் குடிசை வரியும் அவன்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. இவ்வரிகளை விதிக்காவிடில், விவசாயத்தில் ஈடுபட்டுத் தங்கள் பண்ணைகளில் வசிக்கும் இந்தச் சாதியார் தங்கமும், வயிரமும் எடுக்க நூற்றுக்கணக்கான அடி ஆழமுள்ள சுரங்கங்களில்

வேலை செய்யப் போகமாட்டார்கள். சுரங்கங்களில் அவர்கள் உழைக்காது போனல் தங்கமும் வயிரமும் பூமிக்குள்ளேயே இருக்கும் இங்ஙனமே அவர்கள் இல்லாவிடில் ஐரோப்பியர்களுக்கு வேலைக்காரர்கள் கிடைப்பதும் கடினமாயிருக்கும் இதன் காரணமாக சுரங்கங்களில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான நீகிரோக்கள், மற்ற நோய்களுடன் சுரங்கங்களில் வேலை செய்பவர்களையே தாக்கும் ஒருவித க்ஷயரோகத்தால் கஷ்டப்படுகின்றனர். இது உயிருக்கு ஆபத்தானதோர் நோய். இதனல் பீடிக்கப்பட்டவர் குணமடைவதேயில்லை. தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிந்து சுரங்கங்களிலிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் புலனடக்கத்துடன் இருக்க முடியுமா என்று வாசகர்களே சிந்திக்கலாம். முடியாததால் அவர்கள் மேக சம்பந்தமான வியாதிகளுக்கு எளிதில் பலியாகின்றனர். இந்த அபாயமான விஷயம் தென்னப்பிரிக்க ஐரோப்பியருள் அறிவாளிகள் அறியாததன்று. எல்லாவற்றையும் யோசிக்குமிடத்து நாகரிகம் இந்தச் சாதியினரிடம் நல்ல பயனுண்டாக்கியிருப்பதாகச் சொல்ல முடியாதென்று அவர்களில் சிலர் திடமாக அபிப்பிராயப்படுகின்றனர். இதனல் விளையும் கெடுதல்கள் மேலாகப் பார்ப்பவர்களுக்கும் தெள்ளென விளங்கும்.

[மகாத்மா காந்தி]

## 26

**மேல்வரும் உரைப்பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:-**

இப்போது நம் தேசத்தார் மனத்தில் உதித்துவரும் "தேசிய உணர்ச்சி" யானது, முக்கியமாகக் கைத்தொழில்களாலும் வியாபாரத்தாலும் இந்தியாவின் பொருளாதார நிலையை விருத்தி செய்தலைப் பற்றியதாகவே உள்ளது. இவ்வுணர்ச்சி தேசாபிமானமும் ஊக்கமுடைய அறிவாளர் சிந்தையிற் பல்லாண்டுகளாக உதித்துவந்திருப்பினும், ஜன சமூக முழுதும் அதனில் தம் விருப்பத்தைக் காட்டத் தொடங்கியது சமீப காலத்திலேதான் என்பது நாம்

அறியாததன்று. இத்தகைய உயர்ந்த உணர்ச்சியும் அதன் மூலம் முயற்சியும் புதியனவாயுண்டாயிருப்பதற்குச் சிறந்த காரணம், நம் நாட்டார் உலகியல்களை முன்னிலும் அதிகமாகத் தெரிந்து வருதலேயாம். தேசத்தின் கைத்தொழில், வியாபாரங்கள் நெடுங்காலமாக நம்மவரது கையைவிட்டு விலகிவருவதால், இந்தியாவின் செல்வநிலை பெரிதும் சீர்கெட்டுவருஞ் செய்தி நம்மவர்க்கு எட்டிப் பெரிதும் அதிசயத்தையும் அச்சத்தையும் கொடுத்து வருகின்றது. இது நற்காலத்தின் அறிகுறி என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இக்காலத்துச் சீர்கேடான நிலைமையை மாற்றுதற்குத் தேசியமுயற்சி தக்க கருவியாதலால், அது பெரிதும் வேண்டப்படுவதேயாம். ஆனால், முன்னாளிலே நம்மவர்க்கும் பொருளாதார நிலையைப் பற்றிய கவலையேனும் அதன்மூலம் இத்தகைய முயற்சிகளேனும் நெருக்கடியாக நேரிட்டனவல்ல. அந்நிய வியாபாரங்கட்கு எவ்வித இழுக்கும் அப்போது நிகழ்ந்ததில்லை. நாட்டில் விளைந்த இயற்கைப் பொருள்களில் வேண்டியளவு இங்கேயே செயற்கைப் பொருள்களாக மாறி உபயோகிக்கப்பட்டன. அவை இங்கு மட்டுமல்ல, அந்நிய வியாபாரிகளால் தேசாந்தரங்கட்கு மிகுதியாக 'ஏற்றுமதி' செய்யப்பெற்றும் பெரும் இலாபந்தந்தன. இச்செய்திகள் எல்லாம், இற்றைக்கு 1800—வருடங்கட்கு முன் இந்தியாவுக்கு வந்து சென்ற அந்நியர்களுள் பிளினி, டாலமி, மெரிப்ளுஸ், ஸ்ட்ராபோ முதலிய யவனாசிரியர்கள் எழுதியுள்ள சரித்திரக் குறிப்புக்களால் வெளியாகின்றன. இவருள் பிளினி என்பவர், தம் குறிப்பில், நம்தேசம் ஆண்டுதோறும் உரோம் ராஜ்யத்திலிருந்து பத்து இலட்சம் பொன் கவர்தற்குரிய பண்டங்களை 'ஏற்றுமதி' செய்துவர, அப்பண்டங்கள் அந்நிய நாடுகளில் நூறுமடங்கு அதிகவிலைக்கு விற்கப்பட்டன என்று கூறியிருக்கின்றார். இவ்வாறு, முதலிருந்தே, பிறர்க்கு மிகவும் அருமையும் அதிசயமுந் தரத்தக்க பண்டங்களை யளித்து இயற்கை வளமெல்லாம் நிரம்பிப் பொன் கொழிக்கும் பூமியாக விளங்கியது நம் பாரத நாடு.

## 27

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை நூற்றுப்பத்துச் சொற்களுக்கும் நூற்றுமுப்பது சொற்களுக்குமிடையில் தருக:-**

"நான் ஜயவருஷம் முதலாக பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஸ் வித்தியாசாலையிலே இங்கிலீஸ் கற்றேன். பிரபவ வருஷம் பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை இங்ஙனமாகவும் மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருஷம் புரட்டாதி மாதம் பரித்தியாகஞ் செய்தேன் பார்சிவல் துரை 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன். தாங்கள் என்னை விடலாகாது' என்று பல தரம் சொல்லிய வழியும் நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை நான் இங்கிலீசிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலீஸ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலீஸ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக்கண்டும், நானும் என் சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்குமென்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணைமாத்திரங்கொண்டு செய்யப்படும் உத்தியோகம வலிய வாய்த்தபொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமேயாகவும், நான் இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினல் இருபது வருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல. அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச் சில. சைவ சமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தை யுடையவர்களாகித் தங்கள் தங்களாலியன்ற உதவி செய் வார்களாயின் நான் எடுத்த முயற்சிகள் எல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறி விடும். நிறைவேறின் என்னைப் போலவே, பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய் வார்கள், செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

தன் இம்மைப்பயன்களெல்லாம் இழந்தும், கைம்மாறு வேண்டாதும் இருபது வருஷகாலம் சுவசமய விருத்தியின் பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றைச் சமயத் தாருள் இருப்பானயின் அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்திபெருது? நம்முடைய சைவசமயிகள் தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூ றுமே செய்கிறர்கள். இதனல் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங்கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செய்யப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட் குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கண்ணும், தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கம் கிளராவண்ணம் தடைவிளைகின்றதே என்னுங்கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமய விருத்தியின் பொருட்டு முயன்ற பெரியோர்க ளுக்குச் சுவசமயிகளாலே நன்குமதிப்பும், பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்கு சுவசமயிக ளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கிடையூறு செய்யவுமில்லை. என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னை ஆச்சரியம்!!! சைவ சமய விருத்திப்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களா லேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்டபோது, நான் தமிழ்க்கல்வியிலும், தமிழ்க் கல்வியையும் சைவசம யத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்

குங் காலத்தை முன் பயின்ற இங்கிலீஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே மதிக்கப்படல் வேண்டுமென்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடையதோர் பெருஞ் செல்வம்.

[ஆறுமுகநாவலர்]

## 28

**பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :–**

மொழி எதற்காகத் தோன்றியது? மக்கள் உள்ளக் கருத்தை உதட்டு அசைவினால் மற்றவருக்கு உணர்த்தவே மொழி தோன்றிற்று. பிறவிலங்குகளுக்கு இல்லாத ஒரு தனிப்பெருமையை—பேச்சு வன்மையை—மனிதன் பெற்றிருக்கிறான். அந்தப் பேச்சினால் அவன் தன் உள்ளத்தில் எண்ணியவற்றை நன்றாக உலகுக்கு உணர்த்த முடியும். மொழி தோன்றி வளர்ந்ததே அதற்காகத்தான். எனவே, அந்த மொழியினால், மனிதன் தான் எண்ணுகின்ற எண்பது கோடி எண்ணங்களையும் உலகுக்கு உணர்த்த இயலும். மனிதன் தான் கண்ட ஒரு பொருளைப்பற்றி, கேட்ட ஒன்றைப்பற்றி, அல்லது நினைத்த ஒன்றைப்பற்றி உலகில் காணும் நூல்கள் அனைத்தும் கூறும். அவை பாட்டானும் உரையானும் பயின்று வருகின்றன. அவை எதை உணர்த்துகின்றன? மற்றொரு மனிதனைப்பற்றியோ ஒரு பொருளைப் பற்றியோதான் அவை உணர்த்த முடியும். அப்படி உணர்த்தும் போது அவை பாட்டாகவேயிருப்பின் எதுகை, மோனை நயம் கலக்கச் சில கற்பனைச் சொற்களையும் கலக்கக்கூடும். இன்று காணும் எத்தனையோ பாட்டிலக்கியங்களில் உண்மையினும் பார்க்கப் புனைந்துரையும், கற்பனையும் அதிகம் இருக்கக் காண்கிறோம். தமிழில் மட்டுமன்றிப் பிறமொழிகளிலும், பாட்டுக்களில் இக்கற்பனையைக் காண

இயலும். இவ்வாறு கற்பனையோடு கலந்த பாட்டுக்களால் எப்படி ஒரு மனிதனுடைய—ஒரு பொருளினுடைய—உண்மை நிலையினை உரையிட்டுக் காணமுடியும். மேலும பாட்டின் நடையும் அமைப்பும் உரை கொள்ளும் வகையும் அனைவர்க்கும் இலகுவாகப் புரிவனவல்ல அத்துடன் பயில்வார்க்குப் புதிய புதிய கருத்துத் தோற்றுவனவாய் இதுவோ, அதுவோ என்று திட்டமாகப் பொருள்காண வகையில்லாதனவாய் "இதுவும் அதுவும்" என்று இரட்டுறமொழியும் வகையினவாய்ப் பாடல்கள் அமைவதைக் காண்கிறோம். இந்த நிலையில் பொருளின் உண்மை நிலையைப் பாட்டு எவ்வாறு உணர்த்த முடியும்? அந்த நல்ல தொண்டினைச் செய்வது உரைநடையேயாம். ஆம், ஒரு பொருளின் உண்மை நிலையினையோ, ஒரு மனிதனின் உண்மைத் தன்மையையோ மொழிமூலம் உலகுக்கு உரையிட்டுக் காட்டுவதுதான் இந்த உரைநடை.

## 29

### பின்வரும் உரைப் பகுதியை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக:—

சமுதாயம் ஒழுங்கு முறையில் கட்டுப்பெற்று வாழ முற்படுங்காலம் காப்பிய நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஏற்ற காலமன்று. சமுதாயம் செம்மையடைந்து விட்டால், மனத்தில் தோன்றிய கருத்துக்களை உடனே செயலாக்க இயலாது தடைகள் தோன்றிவிடும். மேலும் மனிதனுடைய வாழ்வு செம்மை பெற்ற சமுதாயத்தில் செயற்கை கலந்ததாகவும் ஆகிவிடுகிறது. இயற்கையோடு உறவுபூண்டு வாழ்ந்த ஆதி மனிதனின் வாழ்க்கை காப்பிய நிகழ்ச்சிக்கு ஏற்ற நிலைக்களமாகும். அளவுக்கு மிஞ்சிய செயற்கைச் சட்டதிட்டங்களை மனிதன் ஏற்படுத்திக் கொண்டவுடன், அவன் தனது தனித்தன்மையை இழந்து விடுகிறான். தனித்தன்மை எவ்வளவுக் கெவ்வளவு மிகுதியாகக் காணப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு காப்பிய நிகழ்ச்சிக்கு அஃது ஏற்ற இடம் ஆகிறது. காப்பியத்தில் காணப்படும் நிகழ்ச்சிகள் நேரடியாக உணர்ச்சியிலிருந்து பிறப்

பமையாக இருக்க வேண்டும். உணர்ச்சியைச் செயலாக்க இன்றைய உலகிலுள்ள தடைகள் அங்கு இருக்கமாட்டா. இயற்கையோடு ஒன்றிய வாழ்வு வாழ்ந்த அவர்கள் உணர்ச்சியை உடனே செயலாக மாற்றினர். கட்டுப்பாடுகள் நம்மைப் போன்று அவர்களைத் தடை செய்ததில்லை. போலி நாகரிகம் மிகுந்துள்ள நம் சமூகத்தில் தனி மனிதன் விருப்பம் போல, செய்யும் உரிமையை இழந்து விட்டான்.

நாடகத்திற்கும், காப்பியத்திற்கும் உள்ள அடிப்படை வேற்றுமைகள் பல. அவற்றுள் சிறந்த தொன்றை நாம் மறத்தலாகாது. நாடகத்தில் பாத்திரத்திற்கு உள்ள உரிமை காப்பியத் தலைவனுக்கு இல்லை. நாடகத்தலைவனே வாழ்க்கையைத் தன் விருப்பம்போல மாற்றி அமைத்துக் கொள்ளும் உரிமை பெற்றவன். காப்பியத்தலைவன் விதியினால் கட்டுப்பெற்றவன்; விதி செலுத்தும் வழி, அதனை எதிர்த்துச் செல்லச் சக்தியற்றுச் செல்கிறவன், காப்பியத் தலைவன் விரும்பினும் விரும்பாவிடினும் அவனது விதி அவனைப் பிடர் பிடித்து உந்துகிறது. அவன் அதற்குக் கீழ்ப்படிந்தே நடக்கிறான். ஆனால் இங்கு விதி என்று கூறப்படுவது நம்மினும் உயர்ந்துள்ள ஒரு பொருள் வழங்கும் நீதியாகும் அந்நீதி நாம் தகுதியானது என்று நினைக்கும் வழியே செல்வதில்லை. நமது சிற்றறிவுக்கு எட்டாத முறையில் அது தனது நியாயத்தை நடத்திச் செல்கிறது. தனிப்பட்ட மனிதன் கற்பனைக்கு அடங்காத முறையில் தனது ஆணையை அது செலுத்துகிறது. அதனால் காப்பியத்தில் பெரும்பாலும் சோகத்தின் நிழல் படர்ந்திருக்கிறது. இந்த அடிப்படையிலேயே காவியம் இயற்றப் படுகின்றது.

மேலே கூறிய கருத்துக்களை மனத்தில் கொண்டு இராமாயணத்தைக் காணவேண்டும். அங்ஙனம் காணும் பொழுது அஃது ஒரு வழிநூல் என்பதனையும் மறந்து விடலாகாது. தனியாகத்தானே காப்பியம இயற்றுகிறவனுக்கு உள்ள உரிமை வழிநூல் செய்கிறவனுக்கு இல்லை.

அவன் விருப்பம் போல் கவிதை புனைவதற்குச் சில தடைகளும் அங்கு ஏற்படுகின்றது. இவையனைத்தும் இருந்தும் இராமாயணம் ஓர் ஒப்பற்ற தமிழ்க் காவியமாக இருந்து வருகிறது.

[அ. ச. ஞானசம்பந்தன்]

## 30

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை ஏறக்குறைய ஐம்பத்தைந்து சொற்களிற் சுருக்கி எழுதுக. எழுதிய சொற்களின் தொகையை விடையின் முடிவிற் குறிப்பிடுக :**

உடலிலேதான் "நான்" என்ற பாவனை எங்கும் பரவியிருப்பதால் மனிதன் சிந்தனையின்றி உடலை வளர்க்கப் பல்வேறு சாதனங்களை அமைத்துக் கொண்டிருக்கிறான். இவ்வுடல் பழையதாகிவிட்டது; இளைத்து வற்றி விட்டது. ஆயினும் இதை எவ்வாறேனும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் இருந்து வருகிறது. ஆனால் இவ்வுடலை எவ்வளவு காலம் நிலைத்திருக்கச் செய்ய முடியும்? எமனிடமிருந்து கட்டளை வந்த பிறகு ஒரு கணமும் தாமதிக்க முடியாதே. மரணத்தினெதிரில பற்றுப் பாசமெல்லாம் மறைந்து போகின்றன. ஆயினும் இவ்விழிந்த உடலுக்காக மனிதன் பல்வேறு உபாயங்களை வகுக்கிறான். அல்லும் பகலும் இவ்வுடலைப் பற்றியே கவலையுறுகிறான். உடலைக்காக்கும் பொருட்டும் புலால் உண்டால் குற்றமில்லையென்று சொல்லுகிறான். மனிதன் உடல் அவ்வளவு மதிப்புள்ளதா? அதைக் காக்கப் புலால் உண்ண வேண்டுமா? மிருகத்தினது உடலின் மதிப்புக் குறைவாம். மனிதன் உடலுக்கு மட்டும் ஏன் மதிப்பதிகம்? மிருகத்துக்குச் சுயநலத்தைத் தவிர வேறு எண்ணமே இல்லை. மனிதன் விடயம் அப்படியன்று. அவன் தன்னைச் சூழ்ந்திருப்பவற்றைப் பாதுகாக்கிறான். ஆதலால் மனிதவுடலுக்குப் பெருமையிருக்கிறது. ஆனால் எதனால் மனிதவுடல் மதிப்புள்ளதாயிற்றோ அதைத்தான் நாம் புலால் உண்டு அழித்து விடுகிறோம். மனிதன் புல

னடக்கத்துடன் வாழ்கிறான்; பிறஉயிர்களின் நன்மைக்குப் பாடுபடுகிறான். அதனாலல்லவா அவனுக்குப் பெருமை உண்டு. பிராணிகளிடமில்லாத இவ்விசேட அம்சங்களினாலல்லவா அவன் சிறந்தவன் என்று கருதப்படுகின்றான். இதனாலேயே "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அத்திவாரத்தின் மீது மனிதன் பெரியவனாயும் சிறந்தவனாயுமிருக்கின்றானோ அதையே அவன் களையத் தொடங்கினால் அவன் பெருமை எவ்வாறு நிற்கும். பிறபிராணிகளின் மாமிசத்தைத் தின்று உயிர்வாழும் சாதாரணப் பிராணிகளைப் போல் மனிதன் சிறிதும் தயக்கமின்றி நடந்து கொள்ளுதல் அவனது பெருமையின் அடிப்படையையே அகற்றுதல் போலாகும். இது, நான் எந்த மரக்கிளையின் மீது உட்கார்ந்திருக்கிறேனோ அதையே வெட்டுவது போலாகும்.

## 31

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:**

சாத்வீக எதிர்ப்பு என்பது இதற்குச் சரியான பெயரல்ல. ஆனால் இப்பெயர் வெளியிடும் கருத்தையே பலர் நீண்ட காலமாக நிறைவேற்றி வந்திருப்பதாலும், இதுவே எல்லோருக்கும் தெரிந்து இருப்பதாலும் இச்சொற்றொடர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கருத்தைப் பூரணமாகவும் சரியாகவும் கூறுவதனால் 'ஆத்ம சக்தி' என்று சொல்வதே சரியானதாகும். மனித வருக்கம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மை இதுவும். ஏசு கிறிஸ்து, டேனியல், சாக்கிரடீஸ் ஆகியவர்கள் பரிசுத்தமான சாத்வீக எதிர்ப்பு அல்லது ஆத்ம சக்தி நிரம்பி விளங்கினார்கள். இந்த உபதேசகர்களெல்லோரும், ஆத்மாவோடு ஒப்பிட்டால் உடல் மிகமிக அற்பமானது என்று கருதினார்கள். இந்தத் தத்துவத்தை இக்காலத்தில் மிகப் பிரகாசமாகவும் சிறப்பாகவும் விளக்கியவர் டால்ஸ்டாயே. அவர் இதைக் கூறியதோடு நில்லாமல் அதன்படி அவர்

நடக்கும் காட்டினர். இதைப்பற்றி ஐரோப்பா அறிவதற்கு வெகு காலத்திற்கு முன்பே இந்தியா இந்தத் தத்துவத்தை அறிந்து அனுசரித்தும் வந்திருக்கிறது. உடலின் சக்தியை விட ஆத்ம சக்தி நிச்சயமாக உயர்வானது என்பதை அறிவதும் எளிதாயிருந்தது. தீய காரியங்களின் தொந்தரையிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு மக்கள் ஆத்ம சக்தியையே உபயோகிக்க முற்படுவதாயிருந்தால் இன்று இருந்துவரும் எத்தனையோ துன்பங்களைத் தவிர்த்துக் கொண்டு விடமுடியும். இந்தச் சக்தியை உபயோகிப்பதனால் மற்றவர்களுக்குத் துன்பங்கள் ஏற்படுவதேயில்லை. ஆகையால் இந்தச் சக்தி தவறாக உபயோகிக்கப்பட்டாலும், அப்பொழுது இதை உபயோகித்தவர்களுக்குத்தான் சிரமம் இருக்குமேயன்றி இது யாருக்கு எதிராக உபயோகிக்கப்பட்டதோ அவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்குவதில்லை. நற்செய்கையைப் போல இதற்கும் ஏற்ற வெகுமதி என்றும் உண்டு. இத்தகைய சக்தியை உபயோகிப்பதில் தோல்வி என்பது வருவதேயில்லை. 'தீமையை எதிர்க்காதே' என்றால் தீமையைத் தீமையினால் எதிர்க்கக் கூடாது நல்லது செய்வதனாலேயே எதிர்க்க வேண்டும் என்பது பொருள். அதாவது மிருக பலத்தை அதைப் போன்றதொரு பலத்தினால் எதிர்க்கக்கூடாது; ஆத்ம பலத்தினால் எதிர்க்க வேண்டும். இந்தக் கருத்தே இந்திய வேதாந்தத்தில், 'எந்த ஜீவராசிக்கும் தீங்கிழைக்காத தன்மை' என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தத்துவத்தை மேற்கொள்வதாயின், இதை அனுசரிப்பவர்கள் சரீர துன்பங்களை அனுபவிக்க நேரும். ஆனால் இந்தத் துன்பங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், உலக துன்பங்களைவிடக் குறைவானதே என்பது தெரிந்த உண்மை. ஆகையால் ஆத்ம பலத்தின் அபார சக்தியை அறிந்தவர்களெல்லாம் சரீர துன்பங்களை அனுபவிப்பதே தங்கள் கடமை என்ற முடிவுக்கு மன மாரவும், திடத்துடனும் வந்து விடுவது அவசியமாகும். இப்படிச் செய்தால், இந்தக் கஷ்டங்களே அவைகளை அனுபவிப்பவர்களுக்கு இன்பத்தின் ஊற்றாகிவிடும். சாத்வீக எதிர்ப்பை இந்த வகை

யில் கொண்டு வந்து விட்டால் மிருக பலத்தைவிட அது மிக உயர்ந்ததாகவே ஆகும்; இதற்கு மிருக பலத்திற்கு வேண்டியதைவிட அதிக நிரமும் வேண்டுமென்பது மிகவும் தெளிவானது சாத்துவீக எதிர்ப்பு மிருகபலமாக மாறுவதற்கு சாத்தியமே இல்லை இந்தச் சக்தியை வெற்றிகரமாக உபயோகிப்பதற்குள்ள ஒரு நிபந்தனை, உடலினின்று ஆத்மா வேருனது என்பதையும், அது நிரந்தரமானது, உயர்வானது என்பதையும் உணர்வதேயாகும். இந்த உணர்வானது வாழ்வின் இலட்சியமாக இருக்க வேண்டுமேயன்றி வெறும் அறிவு ஆராய்ச்சியாக மாத்திரம் இருக்கக்கூடாது.

[மகாத்மா காந்தி]

## 32

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

இப்பரந்த உலகின் கண்ணுள்ள பாங்குகள் அனைத்தும் திரண்டு அமைந்தது இது என்று நம் நாட்டைப் பற்றிப் பகர வேண்டும். உலகத்தில் எத்தனைவித மனித சாதிகள் உண்டோ அவை யாவையும் இந்நாட்டில் காணலாம். மொழிகள் எத்தனை உலகில் இருக்க முடியுமோ கிட்டத்தட்ட அத்தனையையும் இங்கே காணலாம் விதவிதமான பழக்க வழக்கங்களோ பகர்ந்து முடிவுறா ஜதிகங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஈண்டு எல்லையில்லை. ஆலமரத்தை நாடிவரும் பறவைகளுக்கெல்லாம் ஆங்குத் தங்க இடமிருப்பது போன்று இந்நாட்டை நாடிவரும் மக்களுக்கெல்லாம் இங்கே இடமுண்டு. இத்தனைவித வேறுபாடுகளுக்கிடையில் தன் வியக்தியை இழந்துவிடாது இந்நாடு என்றென்றும் வாழ்ந்திருக்கிறது. சில காலங்களில் இது சிறப்புற்று வாழ்கின்றது, வேறு சில காலங்களில் சீர்கேடு அடைந்தது போன்று இது பொலிவற்றுப் போய் விடுகிறது. ஹேமந்தருதுவிலும் ஆலமரம் அழிந்து பட்டுப் போகாதிருப்பது போன்று, நம் தாய்நாடு பலவிதமான

எழுச்சிகளுக்கிடையிலும், படையெடுப்புகளுக்கிடையிலும் தனது தனி இயல்பை இழந்துவிடாது காத்து வந்திருக்கிறது. தன்னிடத்து வந்த மக்களையெல்லாம் சில நூற்றாண்டுகளுக்குள் சிறிது சிறிதாகத் திருத்தியமைத்துத் தன் சொந்தச் செல்வர்கள் எனச் சுவீகாரம் செய்திருக்கிறது. இந்நாட்டின் உள்வலிவுக்கு இதுவும் தக்கதொரு காரணமாகும்.

இந்நாட்டின் உள்வலிவு செல்வத்தால் அமைந்ததன்று, ஆதிக்கத்தால் அமைந்ததன்று, பராக்கிரமத்தாலும் அமைந்ததன்று. பொறுமையே வடிவெடுத்திருந்து பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ்வது தான் இந்நாட்டிற்குரிய நாகரிகமாகும். ஏனைய பெருமைகள் இதற்கு வந்து அமையுங்கால் அவைகளில் மூழ்கி இந்நாடு தலைசிறழ்ந்து போய் விடுவதில்லை. வறுமை வந்தமைந்தகாலை அதை எண்ணி வெறிபிடித்துப் போய்விடுவதும் இந்நாட்டுக்குக் கிடையாது. உடைமையையும், வறுமையையும் ஒரே பாங்கிற் கருதி உயர்ந்த எண்ணத்தில் ஊறி எளிய வாழ்வு வாழ்ந்திருப்பதே இந்நாட்டின் நாகரிகமாம்.

எந்த நாட்டின் மீதும் இந்தியாவானது படையெடுத்துப் போனது கிடையாது. பிறரை அடக்கியாள வேண்டும் என்ற சாம்ராச்சியப்பித்து இந்நாட்டிற்குக் கிடையாது. அத்தகைய பேராசை எதிர்காலத்திலும் இதற்கு வந்து அமையாது. இருந்தபடி தான் இனிது வாழ்ந்திருப்பதும், பிறரை அங்ஙனம் வாழ்ந்திருக்கத் தூண்டுவதுமே இந்நாட்டின் செயலாயிற்று. இனியும் அச்செயலைத்தான் இது செய்து முடிக்கும். பிறரை அழிக்க முயல்கின்றவன் தானே அழிந்து பட்டுப் போகின்றான்; உலகையெல்லாம் உய்விக்க முயலுகின்றவன் தானே உய்வு பெறுகிறான். இக்கோட்பாட்டுக்கு இந்தியா எடுத்துக் காட்டு ஆகிறது. சென்ற சில நூற்றாண்டுகளில் இந்தியா பிற ஆட்சிகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. வறுமை நோய் இங்குத் தாண்டவமாடிற்று. பேரறிவுக்குப் பிறப்பகமாகிய இந்நாட்டிலே அஞ்ஞானம் என்னும் கார்மேகமும் கொஞ்

சக்காலம் சூழ்ந்திருந்தது. அவை யாவும் நீங்கப்பெறும் அறிகுறிகள் இப்பொழுது தென்படுகின்றன. இனி வருதற்குரிய நல்லகாலம் எத்தகையது ஆகும் என்பதை நாம் ஓரளவு யூகிக்கலாம். நற்காலம் வரும்பொழுது அது நமக்கு வேண்டியவாறு உருவெடுக்கும்படிச் செய்வதும் நமக்கு இயலும், எத்தகைய எதிர்காலத்தை நமக்கு நாம் அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதைச் சிறிது ஆராய்வோம்.

[எதிர்கால இந்தியா]

## 33

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

*மனிதன், அறிவுக்கு உரிய மூளையோடு மட்டும் பிறக்கவில்லை; உணர்ச்சிகளும் கற்பனைகளும் கூடிய மனத்தோடும் பிறந்துள்ளான். ஆகவே உணர்ச்சி, அறிவு இரண்டும் வாழ்வுக்குத் தேவையானவை; இரண்டையும் ஒருங்கே வளர்த்தல் வாழ்வுக்கு நலம் செய்யும். ஒன்றை மட்டும் வளர்த்து, மற்றொன்றைப் புறக்கணித்தல் வாழ்வைக் கெடுக்க வல்லதாகும். அறிவை மட்டும் வளர்த்துக் கலைகளின் வாயிலாக உணர்ச்சியைப் பண்படுத்தாமல் விட்டால், மனிதன் யந்திரம் போன்றவன் ஆவான்; சில வேளைகளில் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த அறியாமல் தடுமாறுவான். உணர்ச்சியை மட்டும் வளர்த்து அறிவைப் புறக்கணித்தால், நடுநிலையான ஆராய்ச்சி செய்யும் ஆற்றலை இழந்து விடுவான்; நன்மை தீமையை ஆராய்ந்து உண்மை காணும் தன்மை இல்லாமல் வெறியோ ஒரு தலைச் சார்பான போக்கோ உடையவன் ஆவான்.*

*அறிவியல் துறையில் மிக மேம்பட்டு முற்போக்கு அடைந்துள்ள இன்றைய உலகத்தைப் பற்றிச் சான்றோர் பலர் கவலைப்படும் நிலை உள்ளது. அறிவியலின் துணையால் பற்பல கருவிகளையும் நலன்களையும் பெருக்கிக் கொண்டுள்ள மனித இனம், விரைவில் தன்னைத்*

தானே அழித்துக் கொண்டு மாய்ந்திடுமோ என்று கலங்கு வோரும் உள்ளனர். இன்று பெற்றுள்ள ஆக்கத்திற்கு இடையே, புரட்டு, பித்தலாட்டம், ஒழுங்கின்மை, தன்னல முனைப்பு, சாதிமத சிறுவெறி முதலியவற்றைக் கண்டு நொந்து வருந்துவோர் பலர். இவற்றைப் போக்க வழி காணாத அறிவின் வளர்ச்சியால் பயன் என்ன? குறை தீர்க்க வழி என்ன? அறிஞர் சிலர் அஞ்சாமல் முன் வந்து, சமுதாயம் மூளையை வளர்த்தது போலவே, உள் ளத்தையும் பண்படுத்த வேண்டும் என்று கூறத் தலைப் பட்டுள்ளனர். அறிவே வாழ்வை இயக்குவது என்ற எண் ணம் தளர்ந்து, உணர்ச்சியே வாழ்வை இயக்குவது என்று உண்மை காண்கின்றனர். பாட்டு முதலிய கலைகளின் வாயிலாக உணர்ச்சியைப் பண்படுத்தினால்தான், அறிவு நன்னெறியில் உழைக்கும், அந்த நல்லறிவாலேயே நற் செயல்கள் பெருக முடியும் என்பது அவர்களின் நம் பிக்கை.

அறிவு உணர்ச்சி இரண்டனுள் உணர்ச்சியே மனி தனை இயக்குவது என்றும், அறிவு அதற்குத் துணை செய்வது என்றும் அறிஞர் கூறுவர் மனிதன் விருப்பு வெறுப்பு உணர்ச்சி வடிவானவன்; அறிவு அவனுடைய அமைப்பில் முதலிடம் பெறவில்லை என்பர். ஆகவே, தனி மனிதர் வாழ்வில் சிறந்துள்ள உணர்ச்சியின் பண் பாடே சமுதாய மேம்பாட்டிற்கு இன்றியமையாததாகும்

மனிதன் உணர்ச்சி இல்லாமல் வாழ முடியாது காட் டிற்கும் மலைக்கும் சென்று புலன்களை ஒறுத்து உணர்ச்சி களை அடக்கி வாழும் முனிவர்க்கும், தவத்தை விட்டுச் சிறிது நீங்கி வெளிவந்த உடனே, பழையபடி உணர்ச்சி கள் தலைகாட்டும் ஆகவே, உணர்ச்சி அடியோடு இல்லா மல் அடக்கி வாழ்தல் அரிது, அரிது. உணர்ச்சிகளைக் குறைத்தல் இயலும்; பண்படுத்தல் இயலும்; அவ்வளவே அன்றி, அடியோடு ஒழித்தல் இயலாது.

ஆகவே, உணர்ச்சிகளையும் அவற்றிற்குரிய கலைகளையும் வெறுத்து ஒதுக்குதல் அறியாமை. வளர்ந்துள்ள, வளரும் உணர்ச்சிகளைப் பண்படுத்த முயல்வதே அறிவுடைமை.

[டாக்டர் மு. வரதராசனார்]

34

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

செய்தித் தாள்கள் ஒரு நாளுக்கு உரியன மற்றொரு நாளுக்கு உதவாமல் அழிகின்றன. அது இயல்பே.

நூல்களின் வாழ்வும் அழிவும் நாட்கணக்கின அல்ல; ஆண்டுக் கணக்கின. எல்லா நூல்களும் அழிவன அல்ல. அவற்றுள் அழியாதன சில உள. அந்தச் சிலவே கலையுலகில் இலக்கியங்களாகப் போற்றத்தக்கன.

என்றும் உள்ள பொருள்களின் உண்மையை விளக்கும் நூல்களும் உள்ளன. அவை கணக்கு நூல்கள் முதலியன. சென்ற காலத்து நிகழ்ச்சிகளை விளக்கும் நூல்களும் உள்ளன. அவை வரலாறு நாட்குறிப்பு முதலியன. வரலாற்று நூல்கள் முதலியன மாறி மறைதல் இயற்கை. ஆயின், கணக்கு நூல்கள் முதலியனவும் மாறி மறைகின்றனவே! என்றும் உள்ள உண்மைகளை எடுத்துரைக்கும் அவை அவ்வாறு மறைதற்குக் காரணம் என்ன? முப்பது ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட கணக்கு நூல்கள் இன்று கற்கும் மாணவர்க்குப் பயன்படவில்லை. அறிவியல் நூல்களும் அவ்வாறே மாறிவிடுகின்றன. மாறாத உண்மைகளை விளக்குவனவாக இருந்தும், அந்நூல்கள் மாறி மறைதலுக்குக் காரணம் என்ன? உண்மைகள் அழியாது விளங்குகின்றன; அவற்றைப் பற்றிய நூல்கள் அழிந்து புது நூல்களுக்கு இடம் தருவதற்குக் காரணம் என்ன?

முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட, அல்லது, முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்களும் மாறாமல் அழியாமல் வாழ்வு பெற்று விளங்குகின்றன. தமிழ் முதலான மிகப் பழைய மொழிகளில் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பாட்டுக்களும் நிலையான வாழ்வு வாழ்கின்றன. ஆனால், ஒரு நூற்றாண்டின் அளவில் தோன்றி மறைந்த கணக்கு நூல்களுக்கும் வரலாற்று நூல் முதலியவற்றிற்கும் கணக்கே இல்லை. ஆறுமுக நாவலர் காலத்துக் கணக்கு நூல் முதலியவற்றை இன்று எங்கும் காண முடியாது; ஆயின் நாவலர் போற்றிய அந்த இலக்கிய நூல்களை இன்றும் விடாமல் போற்றிக் கற்கின்றோம். காரணம் என்ன?

கணக்கு நூல் முதலியனவும் மாறாத உண்மைகளை விளக்குகின்றன; இலக்கிய நூல்களும் அவ்வாறே மாறாத உண்மைகளை விளக்குகின்றன. ஆயின், கணக்கு நூல் முதலியவற்றில் உண்மைகள் மட்டுமே உள்ளன. இலக்கிய நூல்களிலோ, உண்மைகளும் உள்ளன; உண்மைகளை உணர்ந்தவர்களின் அனுபவங்களும் உள்ளன. அந்த அனுபவங்கள் கலைஞர்கள் நல்கிய தனிச் செல்வங்கள்; அவர்கள் தந்த கலைவடிவங்களை விட்டு அந்த அனுபவங்களைப் பிரித்தல் இயலாது. கணக்கு நூல்கள் முதலியவற்றில் உள்ள உண்மைகளோ, அவற்றின் ஆசிரியர்களோடு தொடர்பு இல்லாதவை. ஏழெட்டு ஐம்பத்தாறு என்னும் உண்மை எவர் கூறினாலும் அத்தகைய உண்மையாகவே நிற்கும். ஆனால் கற்பின் பெருமையைக் கபிலர் கூறியது போல் இன்னொருவர் கூறமுடியாது; கம்பர் கூறியது போல் இன்னொருவர் கூறமுடியாது. ஆகவே உண்மை மட்டும் அல்லாமல், உண்மையை உணர்ந்தவரின் அனுபவங்களும் நமக்குக் கிடைக்கின்றன. அந்த அனுபவங்களை உணரும் வேட்கை நமக்கு என்றும் உள்ளது. ஆனால் ஒருமுறை ஓர் உண்மையை உணர்ந்தவுடன், அது நம் அறிவுக்கு எட்டியதாக, பழகியதாக ஆகிவிடுகிறது. ஆகவே இரண்டாம் முறை அதை அறிய வேண்டும் என்ற வேட்கை இல்லாமல் போகிறது. மூளை, அறியாத

வற்றை மட்டும் அறிய விழைகிறது; புதிய அறிவை மட்டும் நாடுதலே அறிவுப் பசியாக உள்ளது. மனம், பழைய அனுபவத்தையும் திரும்பத் திரும்பப் பெற விழைகிறது; உணர்ச்சியோடு கூடிய எதையும் உணர்தல் மனத்தின் பசியாக உள்ளது. ஆகவே, உண்மைகளை மட்டும் உணர்த்தும் நூல்கள் விரைவில் மாறிப்போக, உண்மைகளோடு உணர்ச்சி மிக்க அனுபவங்களும் அமைந்த இலக்கியங்கள் என்றும் போற்றப்பட்டு வருகின்றன.

[டாக்டர் மு. வரதராசனார்]

## 35

**பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

*நாட்டினுள் வறுமைநோய் வந்திருப்பது வெளிப்படை. எவ்வளவுதான் முயன்றபோதிலும் அதை இப்போது அறவே அகற்றிவிட முடியாது. உடைமையும் வறுமையும் ஒரு வழியில்லா என்பது விதி. இவையிரண்டும் தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. தரித்திர நசை தலையெடுத்திருக்கும் இந்நாளில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் ஈண்டு ஆராயப்படுவது. வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை. ஆதலால் இப் பொல்லாத காலம் மாறிப்போமளவும் நாம் பொறுத்திருப்பதுமன்றிப் புனித வாழ்வினின்று சற்றேனும் பிசகாமலும் இருத்தல் வேண்டும். இது விஷயத்தில் கற்றறிந்தவர்களது கடமைதான் மிகப் பெரியது. உலகில் எத்தகைய காரணங்களால் நிலைகுலைவு நேர்ந்திடினும் இந்திய சமுதாய அமைப்பு அவையாவையும் தாங்கி நிற்க வல்லது என்பதை நாட்டு மக்கள் அறியவேண்டும். மேலும் தேசீய இலட்சியத்திலிருந்து அவர்கள் எள்ளளவும் பிசகாதிருத்தல் அவசியம். சுக போகங்களையும் தேக சௌகரியங்களையும் மட்டுக்கு மிஞ்சிப் பெருக்கிக்கொண்டு வரும் நவீன நாகரிகத்துக்கிடை*

யில் விவேகிகள் அடக்கமுடைய எளிய வாழ்வு வாழ வேண்டும். தேவைகளைக் குறைப்பவனுக்கு ஆசை குறைகிறது. அங்ஙனம் அவாவை வெல்லுகிறவன் வேலை வேண்டுமென்று காண்பவரிடத்திலெல்லாம் தலைவணங்கான். வறுமையிலும் தன்னை விலைக்கு விற்காத வீரம் ஒருவனுக்கு இருக்க வேண்டும்.

படித்தவர்கள் போலிப் பெருந்தன்மையொன்று படைத்து வந்திருக்கிறார்கள். அதாவது தேக உழைப்பு கல்விமான்களது மேன்மைக்கு ஒவ்வாதாம். கிருஷி, கைத்தொழில் போன்ற பிரவிருத்திகளை அவர்கள் அறவே வெறுக்கின்றனர். சம்பளம் கொடுப்பவர்களைத் தொழுது வாழ்தலினும் பூமியை உழுது பிழைப்பது உத்தமம் என்பது இவர்களுக்கு விளங்குகிறதில்லை. விவசாய நாடாகிய இந்தியா இத்துறையில் இன்றும் பின்னணியில் கிடப்பதற்குக் காரணம் கற்றவர்களது பராமுகமேயாம். நகரங்களின் செயற்கை வாழ்வை நீத்து விட்டு இவர்கள் திரும்பவும் கிராமங்களுக்குச் சென்று வேளாண்மை, கானவிதச் சிறு கைத்தொழில்கள், கல்வி, வாணிகம், சுகாதாரம் முதலியவைகளை ஒழுங்குபடுத்துவார்களானால் அது நாட்டுக்குப் பெரு நன்மை விளைவிக்கும். இங்ஙனம் செய்வது யந்திரயுகத்தோடு போட்டி போடுவதற்கும் ஏராளமாகப் பொருள் சம்பாதிப்பதற்குமன்று; ஆனால் மனிதனுக்கு அத்தியாவசியமாயிருப்பவை மிகச் சில என்பதையும், அவைகளைச் சுயப்பிரயத்தனத்தால் எளிதிற் பெற்றுவிடலாம் என்பதையும் தங்களது வாழ்வின் மூலம் விளக்கிக் காட்டுதற் பொருட்டேயாம். தூய எளிய வாழ்க்கை வாழத் தெரிந்து கொண்டவர்களுக்குக் கிராமங்கள் வேண்டியவாறு இடங்கொடுக்கும். உத்தமர்கள் கடைப்பிடிக்கும் மார்க்கத்தைப் பாமரர்களும் பின்பற்றுகின்றனர். ஆகலால் தேசத்தை அஞ்ஞானத்தினின்றும், தரித்திரத்தினின்றும் உய்விக்கும் பொறுப்பு கற்றவர்கள் பால் உண்டு.

[எதிர்கால இந்தியா]

## 36

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

*மொழிகள் ஒன்றோடொன்று கலக்கப் பெறுதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருத்தலால், நாகரிகம் வாய்ந்த எந்த மொழியும் பிறமொழிக் கலப்பில்லாமல் இருத்தல் இயலாது. இது மக்களியற்கையினையும் அவரது வாழ்க்கையின் இயல்புகளையும் அமைதியாக ஆராய்ந்து பார்ப்பவர்க்கல்லால் மற்றவர்க்கு ஒரு சிறிதும் விளங்கமாட்டாது. தமிழ் மக்கள் பண்டுதொட்டே நாகரிகத்திற் சிறந்தவராயிருந்ததனால் அவரோடு பலமொழி பேசும் பல நாட்டவரும் கலந்து பழகவே மற்ற மொழிகளின் சொற்களிற் சில தமிழிலுங் காணப்படுவதாயின. இங்ஙனங் காணப்படுதல் தமிழ் மொழியின் நாகரிகச் சிறப்பினையும் அதன் வளப்பத்தினையும் காட்டுகின்றதேயல்லாமல், அதற்கு அது தாழ்வாதலைக் குறிக்கின்றதில்லை*

*மேலும், நெடுங்காலம் உயிரோடிருந்து நிகழும் ஒரு மொழியிற் பிற சொற்கள் கலத்தல் போலச் சின்னாள் உயிரோடிருந்து பின்னர் இறந்துபடும் ஒரு மொழியிற் பிற சொற்கள் மிக நுழைந்து நிலைபெறுதற்கு இடமேயில்லை. இதனாலேதான், ஆரிய மொழியிற் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகச் சேர்ந்து காணப்படவில்லை. ஆரியம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எவராலும் பேசப்படாமல் இறந்துபட்டமையின், அதன்கட் பிறசொற்கள் புகுதற்கு வழியில்லாமற் போயிற்று. இது கொண்டு, ஆரிய மொழி உலக வழக்கிற்குப் பயன்படாமையோடு அது நாகரிக வளர்ச்சிக்கு இசைந்ததாகாமையும் நன்கு பெறப்படும். ஒருவர் ஒரு மொழி பேசுகின்றவராய் இருந்தால் மட்டும் அவர் மற்ற மொழிச் சொற்களை எடுத்தாள நேருமல்லது, அவர் ஏதுமே பேசாத ஊமையாயிருந்தால் அவர் பிறவற்றை எடுத்தாளச் சிறிதுமே இடமுண்டாக மாட்டாது. ஆகலால், உலக வழக்கிலின்றி இறந்துபட்ட ஆரிய மொழி பிறமொழிச் சொற்களை ஏற்கவும் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படவும் மாட்டாதாயிற்றென்க.*

## 37

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

உலகத்திலுள்ள அறிவில்லாப் பொருள்களும், அறிவுடைய உயிர்ப்பொருள்களும் உருவங்களைப் பெற்றது தத்தம் முயற்சியினால் அன்று. ஏனென்றால் அறிவில்லாப் பொருள்கள் தாமாகவே ஓர் உருவத்தை அமைத்துக் கொள்ளமாட்டா. அறிவுடைய சிற்றுயிர்களோ தாம் உருவங்களைப் பெறுதற்கு முன், அறிவு மழுங்கிக் கிடத்தலால் அவைகளும் உருவங்களைச் செய்து கொள்ளமாட்டா. கலங்கிய நிலையில் ஏதோர் உருவமுமின்றி இருந்த எல்லாப் பொருள்களும் உருவங்களைப் பெறுவதற்கு ஒரு பேரறிவின் உதவியின்றியமையாததென்பது சிறிது ஆழ்ந்துணர வல்லார்க்கும் இனிது விளங்கும். ஆதலால் அத்தகைய பேரறிவு வாய்ந்த கடவுள் ஒருவர் உண்டென்னும் உண்மை ஐயமின்றித் துணியப்படுகிறது. இவ்வுலகிற் காணப்படும் எல்லா உருவங்களுக்கும் முதல் கடவுளுடைய அறிவின்கண் உண்டென்பதும் இது கொண்டு முடிக்கப்படும். ஓவியக்காரன் வரையும் ஓவியங்களின் உருவங்களுக்கெல்லாம் முதல் அவன் அறிவின்கண் அமைந்திருத்தல் போலவும், சிற்பம் வல்லான் ஒருவன் அமைக்கும் பாவைகள், உருக்கள், கட்டிடங்கள் முதலானவற்றின் வடிவங்கட்கெல்லாம் முதல் அவனறிவின்கண் அமைந்து கிடத்தல் போலவும், காவியங்கள், கதைகள், அறிவு நூல்கள் முதலியவற்றிலெல்லாம் உள்ள உண்மைகளின் வடிவங்களுக்கு முதல் அவற்றை இயற்றிய புலவனறிவின்கண் விளங்கி நிற்றல் போலவும் இவ்வுலகு உயிர்களிற் காணப்படும் எல்லா வடிவங்களுக்கும் முதல் கடவுள் அறிவின்கண் உண்டென்பது திண்ணமாம். பருப்பொருளிற் காணும் வடிவங்கள் சில பலகாலத்துள் அழிந்து போதல்போல் அறிவுப் பொருளில் அமைந்த உருவங்கள் அழியாது எஞ்ஞான்றும் நிலைபெற்றிருக்குமென்பது மேலே காட்டப்பட்டமையிற் கடவுள் அறிவின்கண் உள்ள எல்லையற்ற உருவங்கள் அத்தனையும் ஒரு காலும் அழியமாட்டா.

## 38

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை ஏறக்குறைய 60 சொற்களிற் சுருக்கி எழுதுக நீர் எழுதிய சொற்களின் தொகையை விடையின் முடிவிற் குறிப்பிடுக :-**

*சிலகாலத்துக்கு முன்பு இராச்சியங்களின் முதன் மந்திரிகள் ஒன்று கூடிக் கல்விக்காக மும்மொழிக் கொள்கை ஒன்றை வகுத்தார்கள். இதை ஆமோதித்திருக்கிறது சமீபத்தில் வெளியாகியுள்ள ஒருமைப் பாட்டுக் குழுவின் அறிக்கை. இந்தி பேசப்படாத இராச்சியங்களில், தாய்மொழி, இந்தி, ஆங்கிலம் மூன்றையும் போதிக்கவேண்டும்; இந்தி பேசப்படும் இராச்சியங்களில் இந்தி, ஏதேனுமொரு தென்மொழி, ஆங்கிலம் என்பவற்றைக் கற்பிக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்திருக்கிறது ஒருமைப்பாட்டுக்குழு.*

*தாய்மொழி ஆங்கிலம் இரண்டையும் படித்தேயாக வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமேயில்லை ஆனால் இந்தி மொழியை ஆரம்பவகுப்புக்கள் முடிந்ததிலிருந்து கல்லூரிப் படிப்பு முடியும்வரை போதிக்க வேண்டியது அவசியந்தானா என்ற வினா எழுகிறது. இலக்கியத்திலோ, விஞ்ஞானத்திலோ அவ்வளவாக முன்னேறாத ஒரு மொழியை இவ்வளவு நீண்டகாலம் கற்க வேண்டுமென்ற யோசனை நியாயமற்றதாகும் இந்த மும்மொழிக் கொள்கையால் வடமொழி அடியோடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது எனவே சில ஆண்டு இந்திப் பயிற்சிக்குப் பின்னராவது வடமொழி கற்க வசதி செய்து தர வேண்டியது அவசியமாகும் தருமம், தருமத்துக்கு அடிப்படையான பக்தி, சமயசிந்தனை, தத்துவ ஆராய்ச்சி என்பன போன்றவற்றை யெல்லாம் கூறும் ஒருபெருமொழியை, தொன்றுதொட்டு நாட்டு மக்களை இணைத்து வந்த ஒரு ஐக்கியச் சக்தியை, அலட்சியப்படுத்திவிட்டுத் தேசிய ஒருமைப் பாட்டுக்காகப் பாடுபடுவது, சுவரை இடித்துவிட்டுச் சித்திரம் எழுத முயலுவது போன்ற மடமையேயாகும். மாணவர் யாவரும் ஒரே மாதிரி உடை அணிவதாலோ,*

ஆறுமாதத்துக்கொரு முறை தேசவிசுவாசப் பிரதிக்கினை எடுத்துக் கொள்வதாலோ, தினந்தோறும் தேசிய கீதம் பாடுவதாலோ, ஐக்கியம் வளருமென்று ஒருமைப்பாட்டுக் குழுவினர் எண்ணுகின்றனர். ஏன், நாங்கள் ஐக்கியத்தைப்பற்றி அறிக்கை தயாரித்து விட்டதாலேயே நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது என்றுகூட நினைத்து இவர்கள் திருப்திப்பட்டு விடலாம். அனைவரையும் சகோதரர்களாகப் பிணைத்து வைக்கும் தெய்வத்தைக் கல்வி நிலையங்களிலிருந்து அறவே ஒதுக்கி வைத்துவிட்டு ஐக்கியம் பற்றிக் கனவு காண்கிறார்கள்.

## 39

**பின்வரும் உரைப்பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

இலக்கியம் என்றால் என்ன? சிலப்பதிகாரம், கம்பராமாயணம், இந்திய சரித்திரம், பஞ்சாங்கம் என்ற இவற்றில் இலக்கியம் என்பன யாவை என்று கேட்டால் எளிதில் விடை கூறி விடலாம். அச்சொல்லின் பொருளை எடுத்து இலக்கணம் கூறி விளக்குவது கடினமாக இருக்கலாம். எனினும் அச்சொல் எதனைக் குறிக்கிறது என்று ஒருவாறு கூறமுடிகிறதன்றோ? பஞ்சாங்கமும் சிலப்பதிகாரமும் நூல்கள் என்ற பெயருள் அடங்குமேனும் இலக்கியம் என்ற பெயருக்கு உரியது சிலப்பதிகாரமே என்று எளிதில் கூறமுடிகிறது. ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இவ்வளவு எளிதாக விடை கூறமுடியாது. திருக்குறள், ஆசாரக்கோவை என்ற இரண்டும் நீதி நூல்கள் தாம். ஆனாலும் இவை இலக்கியமா என்றால் திருக்குறள் மட்டுமே அப்பெயர்பெறும் என்றும் ஆசாரக்கோவை இலக்கியமல்ல என்றுங் கூறவேண்டும். என்றாலும் இங்ஙனம் கூறுவது எளிதன்று. உயர்ந்த நூல்களுள் ஒன்றாக வைத்து எண்ணப்பட்டு வந்த ஆசாரக்கோவையை இன்று இலக்கியமன்று என்று கூறவேண்டுமானால் தக்க கார

ணங்கள் வேண்டும். இங்கிலேயில் இலக்கியம் என்றால் என்ன என்ற வினவிற்குத் தக்க விடை கூறவேண்டும். இலக்கியம், தான் கூற எடுத்துக் கொண்ட பொருளிலும், அதனைக் கூறும் வகையிலும் பொதுத்தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். அதாவது அனைவர்க்கும் அது இன்ப மூட்டுவதாக இருத்தல் வேண்டும். சரித்திரம், தத்துவ சாத்திரம், பொருளாதார சாத்திரம் என்பவை ஒரு சில ராலேயே கற்கப்படுகின்றனவல்லவா? அந்த ஒரு சில ரும், இவற்றைக் கற்பதால் அடையும் பயனென்றைக் கருதிக் கற்கின்றனரேயன்றிப் பயன் கருதாது இன்பம் ஒன்றையே கருதி இவற்றைக் கற்பதில்லை. ஆனால் இலக் கியம் ஒன்றைத்தான் மக்கள் சமுதாயம் வேறு பயன் கருதாமல், கற்பதால் பெறும் இன்பம் ஒன்றையே பய னாகக் கொண்டு கற்கின்றது. இலக்கியம் தரும் இன்பத்தை 'முருகியல் இன்பம்' என்று கூறுவர்.

கற்றுத்தீர வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்கு உட் பட்டு ஒருவரும் இலக்கியத்தைக் கற்பதில்லை. பின்னர் எக்காரணத்தால் இலக்கியத்தை மக்கள் விரும்புகின்ற னர்? இலக்கியம் ஆழ்ந்து அகன்று உள்ளதும் என்றும் நிலைபெறுவதுமான மனிதப்பண்புடன் தொடர்புடையதாக லின் மனிதனால் என்றும் விரும்பப்படுகிறது. சிறந்த இலக்கியம் மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து தோன்றுவதாகலின் அதனைக் கற்கும் நாம் ஒரு புதிய வாழ்க்கைபற்றி நெருங்கிய முறையில் அறியவும் உணர வும் தலைப்படுகிறோம்.

வாழ்க்கையிலேயே இலக்கியம் முகிழ்க்கிறது என்றால் எப்பொழுது அது தோன்றிற்று என்று கேட்கத் தோன்று கிறதல்லவா? மனிதன் சிந்திக்கத் தொடங்கிய அப் பொழுதே இலக்கியம் தோன்றிவிட்டது. மனிதன் மிகுதி யும் அறிய விரும்புவது மற்றைய மனிதனைப் பற்றித் தான் என்றால், அது புதுமையான தொன்று அன்று. காரணம் அவன் சமுதாயமாகக் கூடிவாழ விரும்பும் ஒரு வகை உயிரினமாவான். பிறருடைய வாழ்க்கை, செயல்,

அறிவு, நினைவு, உணர்ச்சி, உள்ளக்கிடக்கை, குறிக்கோள் என்பவற்றை அறிய மனிதனுக்கு இருக்கும் ஆர்வமே இலக்கியம் தோன்றக் காரணமாயிற்று. மேலும் நம்முடைய மனத்தில் தோன்றும் அனுபவங்களையும், எண்ணங்களையும், கருத்துக்களையும் நமக்கு வேண்டியவர்களிடம் கூறவும், அவர்களுடைய எண்ணம் முதலியவற்றை அறியவும் நமக்கு இயற்கையாகவே ஆசை இருக்கிறது. இங்ஙனம் நமது அனுபவம் முதலியவற்றைப் பிறர்க்கு எடுத்துக் கூறுகையில் நம்மையும் அறியாமல் கொஞ்சம் கலைத்திறமையுடன் கூறுகிறோம் அல்லவா? கலைத்திறமை என்றவுடன் ஒவ்வொருவரும் கலைஞரா என்று ஐயங்கொள்ள வேண்டாம். அனுபவத்தைக் கூறுகையில் நம்முடைய உணர்ச்சியும் உடன் கலந்துதானே வருகிறது. கேட்பவர் வெறுஞ் சொற்களை மட்டுமா கேட்கிறார்? நம்முடைய உணர்ச்சியில் அவரும் பங்கு கொள்கிறார் அன்றோ? அதுவே இலக்கியத்தின் பிறப்பிடமாக அமைகிறது.

[அ. ச. ஞானசம்பந்தன்]

## 40

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:-**

இருபதாம் நூற்றாண்டுக்கே உரிய இலக்கியம் பத்திரிகை இலக்கியம். மேனாடுகளில் வளர்ந்துள்ளது போல் இத்துறை இன்னும் நன்கு வளரவில்லை. எனினும் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் பெரிதும் முன்னேறியுள்ளது என்பதில் தடை இல்லை. தமிழ்ப் பத்திரிகை உலகை அந்த நாட்களில் முன்நின்று வளர்த்தவர்கள் வரதராஜுலு நாயுடு, திரு. வி. க. போன்றோர் ஆவர். செய்தித்தாள் முறையில் நாயுடுவின் தமிழ்நாடு முன்னின்றது. தூய இனிய தமிழில் ஒரு தனித்தன்மையுடன் விளங்கியது திரு. வி. கவின் தேசபக்தன், நவசக்தி ஆகியவை பல்லாண்டுகள் முன்னரே இலக்கியத்தாள் ஒன்றை நடத்த முடியும் என்பதை எடுத்

துக் காட்ட, கலாநிலையம் நடத்தி அழியா இடம் பெற்றார் சேஷாசலம். கதைகள் மட்டுமே நம்பி வாழுகின்ற இதழ்கள் ஒருபுறம் இருக்கத் தமிழில் முடியுமா? என்ற வினவிற்கு விடையளிக்கும் முறையில நடைபெறும் கலைக்கதிர் தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு தனியான இடத்தைப் பெற்றுள்ளது. செய்திகளைப் பிறர் அறிய வைப்பதிலும் ஒரு கலைத்தன்மை உண்டு என்பதைத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓரளவு உணர்ந்து வருகின்றன. ஒரே செய்தித்தாள் இருபத்தைந்து ஆண்டுகளின் முன்னர்க் கையாண்ட தமிழ் நடைக்கும் அதே செய்தித் தாளின் இன்றைய தமிழ் நடைக்கும் கடல் அனைய வேற்றுமை உண்டு. அதுவும் இந்த நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது. கட்டுரை வரைவதில் இருபதாம் நூற்றாண்டிற்கூட நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறமுடியாது. உரூசிலிட்டிகொண்ஸி சார்லஸ் லாம்ப் போன்றவர்கள் ஆங்கில மொழியில் எழுதிய கட்டுரைகள் போல் தமிழில் மிகுதியான அளவு இன்னும் வரவில்லை இக்குறையை ஓரளவு போக்கியவர்கள் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, இராஜாஜி போன்ற சிறந்த கட்டுரையாளர்கள் ஆவர்.

## 41

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:**

கல்வியுள்ளும் உலக நூற்கல்வி நிலையில்லாத பொருள்களையே உணர்த்துவதால், அதனால் விளையும் அறிவும் நிலையில்லாத இயல்பினதாய் நிலையான இன்பத்தைத் தரமாட்டாது. அறிவு நூற் கல்வியோ உலகநிலை உயிரின் நிலை உயிரோடு ஒன்றாக நிற்கும அறியாமையின் நிலை இருவினைத் தோற்றம். உயிர் மூவகைக் குற்றங்களினின்றும் நீங்கும் வகை முழுமுதற் கடவுளின் இயல்பு, அது செய்யும் உதவி. அதனோடு ஒன்றாயிருந்து இம்மை மறுமை இரண்டிலும் நுகரும் இன்பநிலை முதலானவற்றை ஆராயும் உயர்ந்த ஆராய்ச்சியில் அறிவைத் தோயவைத்து

அவ்வழியால் அதனைத் தூயதாக்கிப் பேரொளியோடு துலங்க வைத்தலின் அறிவு நூற்கல்வி கற்றார் முன் உலக நூற்கல்வி மட்டும் உடையார், விலங்கினம் போல் எண்ணப்படுவர். உலக நூற்கல்வியால் விளங்கும் அறிவினைக் கொண்டு இம்மையில் எல்லா நலன்களும் பெறக்கூடியதாக இருக்க இதற்கு மேலும் அறிவு நூற்கல்வி வேண்டுமென்பது எதன் பொருட்டோ எனில் உலக நூற்கல்வி ஒன்றே கொண்டு இம்மையிலும் மிகச் சிறந்த நலங்களைப் பெறுதல் இயலாது. இப்பிறப்பிற் பெறுதற்கரிய இன்பங்களையும் அறிவு நூற்கல்வியுடையார் எளிதிற் பெறுவர். கண்ணால் கண்டும் செவியால் கேட்டும் வாயால் சுவைத்தும் மூக்கால் முகர்ந்தும் மெய்யால் தொட்டும் ஐம்பொறியால் அநுபவிக்கும் இன்பங்களிலும்கூட அறிவு நூற்கல்வியால் உயர்ந்த அறிவு வாய்த்தவனுக்கு வரும் இன்பம் ஏனை உலக நூற்கல்வி மட்டும் பெற்றவனுக்குத் தோன்றாது. மிகக் கூரிய முனையை உடைய ஓர் இரும்புக்கோல் ஆழ்ந்ததோர் இடத்தையும் துளைத்துச் செல்லும். முனை மழுங்கியதோ ஆழ்ந்து செல்லமாட்டாதாகும்.

அறிவு நூற்கல்வியுடையார் பெரிதும் கூர்மையான அறிவுடையராதலின் அவர் தாம் விரும்பினால் தம்மிலும் தாழ்ந்த உலக நூற்கல்வியுடையார் செய்யும் முயற்சிகளிற் தினையளவேனும் தாம் செய்யவாவது மாட்டுவாரல்லர் எது போல எனின் அரசியலைத் திறம்பட நடத்தும் மேலோனை ஓர் அமைச்சன் தன் கீழ் அலுவல் பார்ப்பார் செய்யும் முயற்சிகளைத் தான் செய்ய வேண்டினால் அவரினும் திறமையாகச் செய்து முடிப்பான். அவன் கீழுள்ள ஊர் காவற்காரன் ஒருவன் அவ்வமைச்சன் தொழிலைத் தான் செய்ய விரும்பினால் அது முடியுமோ.

[சுவாமி வேதாசலம்]

## 42

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

*இறப்பு பிறப்பு நோய் மூப்புக் கவலை இழப்பு முதலான பல திறப்பட்ட வடிவங்களிற் றோன்றுந் துன்பங்கள் அத்தனையும் எல்லா உயிர்களையும் வருத்திவரக் காண்கின்றோம் ஆதலால் இத்துன்பங்கள் உடையோர் வேறு வகையில் எவ்வளவு உயர்ந்தோராயினும் உயிர்களேயல்லாமற் கடவுளாக மாட்டார். இவ்வுயிர்களை இத்துன்பத்தினின்றும் மீட்டு இவற்றிற்கு இன்பத்தைத் தரும் கடவுள் ஒருவரே எவ்வகைத் துன்பமும் இல்லாதவர். எல்லா இன்பமும் ஒருங்கேயுடையவர். இதுவே கடவுளுக்கு உண்மையான தன்மையென்பதை எல்லாச் சமயிகளும் உடன்பட்டு உரைப்பார்களாயினுஞ் சைவசமயத்தில் மட்டும் அவ்வுண்மை முன்னுக்குப் பின் மாறில்லாமற் காணப்படுகிறது மற்றைச் சமயத்தவர்களோ இறப்புப் பிறப்பு முதலான மேற்கூறிய துன்பங்களிற் கிடந்து உழன்றவர்களை அவரிடத்துள்ள சிற்சில சிறந்த தன்மைகளைக் கண்டும் வலிய செய்கைகளைக் கண்டும் முழுமுதற் கடவுளாகத் துணிந்து வணங்கி வருகின்றனர் நாடக அரங்கில் அரச கோலந்தாங்கி வந்து ஆடுவோன் உண்மையில் அரசன் ஆகாமை போல இறைவனருளாற் சிற் சில உயர்நலச் செய்கைகளைப் பெற்றவர்கள் அவற்றால் அவ்விறைவனைப் போற் கருதப்படினும் அவர் உண்மையில் அவ்விறைவனாக மாட்டார். சைவசமயிகள் வணங்கி வருவது இன்ப வடிவான கடவுளேயல்லாமற் பிற உயிர்களுள் ஒன்றும் அன்று. இதற்கு அடையாளம் என்னென்றால் அன்பு அல்லது இன்பம் என்று பொருள்படும் சிவம் என்னும் சொல்லையே முழுமுதற் கடவுளுக்குச் சிறப்புப் பெயராக வைத்து வழங்குவதும் அச்சிவத்திற்கு இறப்புப் பிறப்பு முதலான எவ்வகைத் துன்பமும் சிவபுராணங்களிற் காணப் படாமையுமேயாம். இங்ஙனம் இன்பவடிவாக விளங்கும் முதல்வனையே வணங்கும் சைவசமயிகள் எவ்வுயிர்க்கும்*

இன்பத்தையே செய்யக் கடமைப்பட்டவர்களாயிருத்தலால் இன்பத்திற்கு மாறான துன்பத்தைத் தரும் கொலைத் தொழிலால் வரும் ஊனைத்தின்னாதவர்களாயும் சீவகாருண்ய ஒழுக்கத்தில் தலைசிறந்து நிற்கிறார்கள். சீவகாருண்யம் மற்றைச் சமயத்தவராலும் கைக்கொள்ளப்படினும் அது சைவசமயிகளுக்கே பழைமைக் காலந் தொட்டுச் சிறந்த உரிமையாகி வருகிறது. மற்றைச் சமயத்தவரும் தம்மிற் புலால் தின்னாத ஒருவரைப் பார்த்து "அவர் சைவராகி விட்டார்" என்று சைவப்பெயராற் கூறுதலிற், சீவகாருண்ய ஒழுக்கம் சைவசமயிகளுக்கே சிறப்புரிமைப் பொருளாய் விளங்குகிறது.

[சுவாமி வேதாசலம்]

## 43

**பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

கண்டதைக் கொண்டு காணாததை அறிவதே தருக்கமாகும். எது போலெனின், நாம் அடுக்களையில் தீயையும் புகையையும் பலகாலும் கண்டு, அப்புகை தீயினின்றும் வருகிறதென்பதை உணர்ந்தபின், நாம் ஒரு மலைப்பக்கத்தே செல்லும்போது அம்மலையினின்றும் புகையெழ, முன் தீயினின்றும் புகைவருதலைக் கண்டிருக்கின்றோம். ஆதலின், அப்புகைவருதற்கு அவ்விடத்தில் தீயிருக்கிறதென்று உணர்கிறோம். இவ்வாறு காணப்படும் புகையைக்கொண்டு காணாத தீயை உணர்த்துவதுதான் தருக்க மெனப்படும். நாம் குழந்தைகளாய்ப் பிறந்து பால்பருகத் துவங்கிய நாள் முதலே நம்மோடு தருக்க உணர்வும் வளர்ந்து வருகின்றது. எவ்வாறெனின், ஒரு பெண் குழந்தையாயிருந்து பால்பருகும் போது தாயையும் பாலையும் பலகாலும் அறிந்துபின்; பசித்தழுதபோது, தாயைக் கண்டதும், முன் அவள் பலமுறையும் பால் கொடுத்திருக்கிறாளாகலின் இவளிப்போதும் எனக்குப்பால் கொடுப்பாள் என்றுணர்ந்து அழுகையை நிறுத்தி விடுகின்றதன்றோ? இங்ஙனம் நடக்

கப்போகும் செயல்களை நடந்ததைக் கொண்டு ஆராயும் போது தருக்க உணர்வு உண்டாகின்றது. புறப்பொருளை அளக்கும் கணக்குக்கும அகப்பொருளாகிய கடவுள் நிலை, துறக்க நிலை முதலியவற்றை விளக்கும் அகப் பொருளா ராய்ச்சிக்கும் தருக்கம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது முதலில், புறப்பொருளை யாராய்தற்குக் கருவியாகிய கணக்கை ஆராய்ந்த பின்னரன்றோ அகப்பொருளை ஆராய வல்லர் ஆகின்றோம் என்று நினைக்கலாம். ஆனல் புறப்பொருளாகிய கணக்கை ஆராயும்போது தருக்க உணர்வே முன்னின்று அக்கணக்கறிவையும் உண்டாக்குகின்றது. புறப் பொருளையாராயும் கணக்கை நாம் கற்க வேண்டுவது உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததாயிருப்பினும், அகப் பொருளாகிய கடவுள் நிலை, உயிரின் நிலை முதலியன புறப் பொருளின் மேன்மையுடைத்தாகலின், அதனை ஆராய்ந்து கற்றற்கே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். புறப்பொருளை யளக்கும் கணக்குக்கும் அகப்பொருளாகிய கடவுள்நிலை, உயிரின் நிலை முதலியவற்றையளக்கும் ஆராய்ச்சிக்கும் தருக்கம் பொது. புறப்பொருள் ஆராய்ச்சியில் நிற்கும் தருக்கம் உணர்வால் எண்ணியறிதற்கரிய புறப்பொருளை யாராய்ந்து பயில முடியுமேயல்லாமற் பிழையின்றி எழுதுதற்கும் பயிலுதற்கும் அது உதவி செய்யாது. இலக்கணத்திற்கே தருக்கம் சிறப்பாக வேண்டப்படுகிறது.

## 44

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:—**

கேட்போர் நிலையினையும் அறிவினையும் அனுபவத்தையும் அனுசரித்து விஷயத்தை எடுத்துக் கொள்ளும் உரையாளரே அறிவுடையோராவர். விஷயச் சிறப்பினைக் கருதித் தமக்கு அனுபவமில்லாத பொருளைப்பற்றிப் பேசிப் பிறர் காலத்தை வீணாக்குபவர் கயவர்; விஷயத்திலும் மொழியிலும் ஒருவர் எவ்வளவு உணர்ச்சி பெற்றிருப்பி

னும். பேசுதற்குரிய முறைகளையும் அனுசரித்துப் பேசாராயின், அவர் மொழியும் கருத்துக்கள் கேட்போர் மனத்தைக் கவரா. சுருங்கக் கூறுவோமானல், தன்னம்பிக்கையும், மன அமைதியும், உற்சாகமுமுடையார் சிறந்த விஷயத்தைப் பேச வேண்டும் அவசியம் வாய்க்கும் பொழுது பேசுவாராயின், அவர்தம் கருத்துக் கேட்போர்க்குப் பெரு நன்மையை உண்டாக்கும். எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பலர் முன்னிலையிற் பேசுதற்குமுன், பெரிதும் அவ்விஷயத்தைப்பற்றி உரையாளர் சிந்தித்தல் வேண்டும். விஷயத்தை நீடுநினைந்து, அதனைப் பலபகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு பகுதியிலும் தகுந்த விஷயங்களை அமைத்தல் வேண்டும். கதை, மேற்கோள், அனுபவம், சரித்திரம், தத்துவப் பொருள் முதலியவற்றை வேண்டிய இடங்களில் சுருங்கச் சொல்ல வேண்டுவனவற்றைச் சுருக்கமாகவும், விரித்துச் சொல்ல வேண்டுவனவற்றை விரிவாகவும் மனப்படத்தில் அமைத்துக் கொள்ளுதல் நன்று. இங்ஙனம் மனத்தில் அமைந்த அவ்விஷயத்தை ஓசையில்லாத இடத்தில் அமர்ந்து எழுத ஆரம்பித்தல் வேண்டும் எழுது கோலும் காகிதமும் சிறந்தனவாய் இருத்தல் வேண்டும். எழுதுகின்றபோது கட்டுரை எழுதுவதாக எண்ணுதலாகாது எந்தக் கூட்டத்தில் உரையாளர் பேசவேண்டுமோ, அங்குக் கூடப்போகும் மக்கள் தனக்கு எதிரில் உட்கார்ந்திருப்பதாக எண்ணவேண்டும். அறிஞர் ஆழ்ந்த கருத்துக்களை எளிய நடையில் வெளியிடுவர். ஆழ்ந்த கருத்திலார் உயரிய நடையில்பேசி மக்களை மயக்குவர். முக்கியமாக முழுவிஷயத்திலும் தன்னம்பிக்கையின் ஒளி வீசிக் கொண்டிருத்தல் வேண்டும். விஷயத்தில் பொருள் நுட்பம், வீரம், கவுரவம் முதலியன அமையுமாயின் அவ்விஷயம் எல்லோர் மனத்தையும் கவரும். பேச வேண்டுவதாகிய விஷயத்தைச் சிந்தித்து மனப்படத்தில் அமைத்துக் கொள்ளாமல் எத்தகையோராயினும் மேடைமேல் ஏறுதல் ஆகாது. விஷயப்பாகுபாடு மனத்தில் அமையும் கால அளவு, அவரவர் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற விதம் மிகும் குறைந்துமிருக்கும்.

## 45

**பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :—**

தந்தை தாயற்ற எனக்கு ஐம்பூதங்களில் முதல் பூதமான பூதேவி ஆதரவுடன் அன்னையானாள். மிதிலாபுரி மன்னர் எனக்குத் தந்தையானது பெயரளவிலேயாம். பின்பு, இங்கு வீற்றிருக்கும் பிரபு என்னைக் கொண்டவர் ஆனார். அவருக்கு ஏற்பட்ட உடைமையும் வறுமையும், இன்பமும் துன்பமும், மேன்மையும் கீழ்மையும் எனக்குச் சொந்தமாயின. நான் கணவனைத் தெய்வம் எனக் கருதிக் கானகம் சென்றேன். அப்போது முட்களிலும் கற்களிலும் என் பாதங்கள் வருந்தாது பூதேவி காத்தருளினாள். பர்ணசாலையில் தனியாயிருந்த என்னை அரக்கன் தூக்கிச் சென்றான். அப்பொழுதும் என் தூய்மைக்கு அவளே சாட்சியாக இருந்தாள். அசோகவனத்தில் நான் சிறை கிடந்தேன். கொடிய அரக்கியர்கள் பலர் என்னைப் பயமுறுத்தினர் ஆயினும் பயம் எதையும் நான் அறிந்தவள் அல்லள். அந்நெருக்கடியிலும் எனது மாசற்ற மனதுக்கு பூதேவியே சாட்சியானாள்.

இரண்டாம் பூதமான தண்ணீரும் தன்னளவில் எனக்குத் துணைபுரிந்து வந்தது. சிறைபட்டுக் கிடந்த என்னைத் தேடிவந்த மணாளனுக்குத் தடையாக இருக்கக் கூடாதே என்று தனது தன்மைக்கு மாறாகப் பாலம்கட்ட அது உதவியது. மூன்றாம் பூதமான தீயும் தென்னிலங்கையில் எனக்கு வேண்டியவாறு துணை புரிந்தது. என்னைத் தேடி வந்த தொண்டன் ஆஞ்சநேயன் இலங்கையில் தீயிட்டுக் கொளுத்தியபொழுதும் நான் இருந்த இடத்துக்கு ஆபத்து வராது அப்பூதம் என்னைக் காப்பாற்றிற்று. எனது பக்தனை அவ்வாஞ்சநேயனுடைய வாலில் அது குளிர்ந்திருந்து, என் தூய்மையை வெளிப்படுத்தியது. பிறகு என்னைச் சோதிக்க வேண்டுமென்று என்னைக் காக்க வந்தவர் கருதினார். அதற்கிணங்கி நான் தீக்குளித்தேன். அந்நெருக்கடியிலும் அக்கினிதேவதை என்னைக் காப்பாற்

றிற்று. நான்காவது பூதமாகிய வாயுவானது தன் புதல்வனையே என்னைக் காணுதற்பொருட்டுக் கொடுத்து உதவிற்று. ஆகாயமும் அவ்வாறே எல்லாக் காலங்களிலும் என் தூய்மைக்குச் சாட்சியாக இருந்து வந்திருக்கிறது.

ஐந்து பூதங்களாலாகிய இவ்வுடலினுடைய தூய்மைக்கும், என் சொல்லினுடைய தூய்மைக்கும், மனதினுடைய தூய்மைக்கும் ஐம்பூதங்களே சாட்சிகளாகும். அவற்றிடமே என்னைப் பங்கிட்டு விடப்போகிறேன்.

எக்காரணத்தை முன்னிட்டும் என் ஆருயிர்த் துணைவன் இரகுபதியின்மீது நான் ஒருபொழுதும் சினந்து கொண்டதில்லை. அவர் இராவணனைக் கொன்றபின் நான் ஆவலுடன் அவர் அருகில் வந்தேன். அவரோ தாங்கவொண்ணாக் கடுஞ்சொல் சொல்லி என்னை விரட்டினர். அதற்கு நான் அவரைச் சிறிதும் நொந்து கொள்ளவில்லை. முன் அறிவிப்பில்லாது என் கணவன் என்னைக் கானகத்துக்குக் கடத்திவிட்டார். அதைக் குறித்தும் நான் அவரிடம் சினந்து கொள்ளவில்லை. அரசகுலத்தில் தோன்றி, இராஜ ரீதியுடன் வாழ்ந்திருந்த என் புதல்வர்கள் தங்கள் தந்தை இன்னர் என்று தெரியாது வனத்தில் வாழ்ந்தபோதோ, அவர்களுக்குத் தாயாகிய என்னைப்பற்றிய உண்மையை அவர்கள் அறியாது வாழ்ந்தபோதோ என் தலைவன்மீது நான் தீயவெண்ணம் எதையும் எண்ணவில்லை. எனது மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் எந்நாளும் அவருக்கு உரியவைகளே. இது சத்தியம். இப்பொழுதும் மாறாத அதே அன்பை நான் அவர்பால் கொண்டுள்ளேன்.

[சுவாமி சித்பவானந்தர்]

**46**

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை அரைப் பங்காகச் சுருக்கி எழுதுக :-**

குழந்தையிடம் இரக்கம் இல்லாதது போல் தோன்றுகின்றது. பிறரிடம் தயை காட்டுவதே இல்லை. தயை

காட்ட வேண்டியது அவசியம் என்பதை அவன் சொந்த அனுபவம் மூலமாகத்தான் உண்டாக்க முடியும். அவன் உடலில் நோவு இருக்கையில், பிறருக்கும் அது போல் உண்டாகும் என அவனுக்கு உணர்த்த வேண்டும். அவனுடைய சொந்தச் செயல்களால் நோவு கூடவும், குறையவும் செய்யும் என்பதை அவன் இன்னும் உணரவில்லை. அவன் கீச்சிட்டு அழும் குரல் அன்னையின் தலை வலியை அதிகரிக்கச் செய்கிறது என்பதை அவன் அறியாதிருக்கிறான். அவன் இவைகளைப் படிக்க வேண்டும். அநுபவம் வந்தால்தான் அவனுக்குச் சில காரியங்கள் விளங்கும். அவனைக் கோபிப்பதினால் ஒரு பயனும் இல்லை. அவனைப் போல் பிறருக்கும் உணர்ச்சி உண்டு என்பதை அறிவுறுத்துங்கள். அவனுக்கு விஷயங்களைச் சாதாரண எளிய நடையில் சொல்லுங்கள். நீங்கள் பேசும் பல வார்த்தைகள் அவனுக்கு விளங்காமல் இருக்கலாம். ஆகையால் அவனுக்கு விளங்கக் கூடிய சொற்களை உபயோகியுங்கள். உங்களுக்கு இது முதலில் கொஞ்சம் கஷ்டமாகத் தோன்றலாம். ஆனாலும் அதைரியப்படாதேயுங்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் காரியங்களை அறிந்து கொள்வான். இரக்கம் அவனிடம் உண்டாகும்

பேராசிரியர் ஒஷியா பின்வருமாறு கூறுகிறார். "ஒரு குழந்தை பிறந்ததும் இயற்கை அவனைப் பார்த்து, 'நீ உன் நலத்தைக் கவனித்துக்கொள்; உனக்கு விருப்பமானதைக் கண்டால் அதைப்பற்றிக் கொள்; பிறரை உனக்குத் தொண்டு செய்ய வைத்துக் கொள்; அதனால் உன் இன்பங்களைப் பெருக்கித் துன்பங்களைக் குறைத்துக் கொள்ளலாம்' என்று சொல்வது போலிருக்கிறது". இதுவே இயற்கையான இதயக் குரல். நல்ல கவனமும் பயிற்சியும் உள்ள பெற்றோர்கள் இந்த எண்ணங்களை மாற்றலாம்.

ஒரு தாய் ஏதோ காரணத்தால் ஒரு அறையில் அழுது கொண்டு இருந்தாள். அவளுடைய மூன்று வயது மகள், தற்செயலாய் அந்த அறைக்குள் வந்தவள், அதைக் கண்

டாள். தாயின் மடிமீது ஏறித் தன் உடுப்பினுல் கண்ணீரைத் துடைத்தாள். அவள் வளர்ந்த பின் சுயநலமற்ற, சமூகச் சேவகி ஆனுள்.

சிறு வயதிலிருந்தே, குழந்தை விஷயங்களை அறிய ஆரம்பித்த உடனேயே, அந்தப் "பொற்கட்டளையை" அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். பழக்கத்தில் கொண்டு வருவதின் அவசியத்தை உணர்த்துங்கள். கட்டளையின் மேல் கட்டளையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாய்ச் சொல்லிக் கொடுங்கள்.

குடும்பத்தில் ஒரே ஒரு குழந்தை இருந்தால் என்ன செய்வது? அப்பொழுது பெற்றோர் தங்களை வேறு குழந்தைகளாகப் பாவித்துக் கொள்ள வேண்டும். அவனுக்குக் கிடைக்கும் எல்லாப் பொருள்களையும் தங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். அல்லது அவன் தன்நலம் உடையவனுக மாறி விடுவான்.

தனிமையாய் வளர்க்கப்பட்ட ஒரு சிறுமியை நான் அறிவேன்; நல்ல சுறுசுறுப்புள்ளவள்; பெற்றோரும் திறமை வாய்ந்தவர்கள். ஆனுல் சிறுமியோ தன்னலம் நிறைந்தவள். காரணம் தனிமையாக வளர்க்கப்பட்டதே. வேறு சிறுவர்களுடன் பழகினுல் கெட்ட காரியங்கள் கற்றுக் கொள்வாள் என அன்னை எண்ணினுள். இது ஒரு நல்ல நோக்கந்தான். ஆயினும் குழந்தைகள் இயற்கை முறையில் தன்னலமற்றவர்களாக வளருவதற்கு விளையாட்டுத் தோழர்கள் அவசியம். தன்னலமற்ற வாழ்வுக்குத் தேவையானவைகளைப் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. கொடுப்பதும் வாங்குவதும் எப்படியென அவர்கள் அறிய வேண்டும். பொதுவாகக் குழந்தைகளுக்குக் கட்டளையிடத்தான் பிரியம். இது அவர்களது இயற்கைச் சுபாவம். அவர்கள் தங்களுக்கு இடப்படும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியா விட்டால், தோழர்கள்

அவர்களைத் தண்டித்து விடுவார்கள். அதனால் பிறருக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்கிறார்கள்.

[புளோரா எச். வில்லியம்ஸ்]

47

**பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:**

நமது நாட்டுப் பெண்களுக்கு மற்றுமொரு பித்துண்டு. அதாவது நகைப்பித்து. அப்பித்து ஒழிதற்கு எத்துணை நாளாமோ அறிகிலேன். இந்நாட்டுப் பெண்மக்கள் நகைகளில்தான் அழகுண்டு; இன்பமுண்டு; வாழ்வுண்டு; எல்லாம் உண்டு என்று கருதுகிறார்கள். நகையணியும் நாயகனை நன்னாயகனென அவர்கள் கொள்கிறார்கள். பெண்மக்கள் பட்டினி கிடந்தேனும், இழிதொழில் செய்தேனும் பொருளீட்டி நகையணியவே முயல்கிறார்கள். இதற்குக் காரணம், ஆண்மக்கள் பெண்மக்கள் உரிமை கடிந்து அவர்கள் அறிவைக் கெடுத்து, அவர்களைக் காமப் பொருளாகக் கொண்டு, நகைகளால் அணி செய்து, களிப்புற்றதென்று நான் கூறுவேன்.

நீண்ட நாள் பழக்கம் இப்பொழுது நாட்டை வருத்துகிறது. சிறு வருவாயுள்ள ஒருவனது நாயகியும், நாயகனை வஞ்சித்தும் தன்னை வஞ்சித்தும் பொருள் சேர்த்து நகை வாங்க எண்ணுகிறாள். பட்டினியால் நோய் மிகுந்து உயிர் போகும் வேளையிலும் நகைப்பித்து அவளை விட்டொழிவதில்லை. அவள் இறந்த பின்னரும் அவளது அறிகுறியாக அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த உடைகளையும் பூண்களையும் நடுவீட்டில் வைத்து அவனுடைய உறவினர்கள் போற்றுகிறார்கள். நகைகள் நடுவீட்டில் தெய்வங்களாகவும் போற்றப்படுகின்றன. நமது நாட்டுப் பெண்மக்களுக்கு நகைமீதுள்ள பித்தை இந்நூல் முற்றும் எழுதிக்கொண்டே போகலாம்.

நகைப்பித்தால் சிலவிடங்களில் பெண்மக்கள் வாழ்வுங் குலைகிறது. ஒருத்திமீது எத்துணை எத்துணை ஆயிரம் ஆயிரம் ஏறி நிற்கின்றன. எத்துணை ஏழை மக்கள் உழைப்பு, பட்டினி, துயரம், கண்ணீர் ஒருத்தியின் கழுத்திலுங் காதிலுங் தலையிலும் ஏறி நிற்கின்றன? ஒருத்தி மீதுள்ள நகை எவ்வளவோ ஏழைமக்கட்கு உணவளிக்கும்; உடையளிக்கும்; தொழிலளிக்கும். அத்துணை ஏழை மக்கள் கலி தீர்க்கவல்ல பொருள், நகைச் சுமையாயிருப்பதாலென்ன பயன்? நகையில் அழகுண்டா? அன்புண்டா? என்ன இருக்கிறது? "அண்டை வீடுகளில் ஏழை மக்கள் பட்டினியால் வருந்த நான் இவ்வளவு நகைகளைச் சுமந்து கொண்டிருப்பது அறமா" என்று நகைப் பித்துடைய பெண் இரங்குவாளா? நகைப்பித்து பெண்ணின் இயற்கைக் குணமாகிய இரக்கத்தையுஞ் சிதைக்கிறது.

மூடப் பெண்ணின் நகைப்பித்து ஏழை மக்களைத் தீயொழுக்கத்திலும் இறங்கச் செய்கிறது. அவர்களைப் பொறாமையுறச் செய்கிறது; களவாடச் செய்கிறது; சில வேளைகளில் கொலையும் நிகழ்த்தச் செய்கிறது. நகையின் கொடுமை என்னே! என்னே! "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் திருவள்ளுவர். கல்வியறிவில்லாப் பெண் மக்கள் அவ்வொழுக்கத்தினும் நகையை ஓம்புகிறார்கள்.

நகைச்சுமையால் உடலுக்காதல் நலனுண்டோ? ஒன்றுமில்லை. உடல் நலத்துக்கென முத்துமாலை, பவள மாலை, மணிபதித்தகோடு யணியலாம். சில மணிகளாலும் உடலுக்கு நலன் உண்டு என்று சொல்லப்படுகிறது. பொன்னுக்கும் அக்குணம் உண்டாம். உடல் நலத்துக்கென ஏற்பட்ட இவை பின்னாளில் வெறுஞ் சுமைசுமைகளாக அணியப்பட்டன. இப்பொழுது முத்துமுதலியவற்றின் குணநலன் கண்டு எப்பெண்ணும் அவைகளை அணிவதில்லை. குணங்கண்டு அவைகள் அணிவளேல் சுமை சுமையாக அணியமாட்டாள். கலன்களாகவே அவைகள்

இப்பொழுது அணியப்படுகின்றன. குணங்கண்டு நகைகளை அணியும் நல்லறிவு இருக்குமேல், போலி முத்து, பவளம், மாணிக்கம் இவைகளை ஏன் பெண் மக்கள் அணிகிறார்கள்? சுகாதார முறைகளை நாடோறும் ஒழுங்காகக் கவனித்து வாழ்வு நடாத்தும் பெண்மகள் உடல் நலத்துக்கெனவும் நகைகளை அணிய வேண்டுவதில்லை. இப்பொழுது உடல்நலத்தைக் கெடுக்கும் சுமையாகவன்றோ நகை துயர் செய்கிறது? அந்நகைப் பித்து உள்ளத்தில் நுழையாவாறு இளம் பருவத்திலேயே இயற்கை வழிப் பெண்மக்களைப் பெற்றோர்கள் வளர்த்து வரல் நலம்.

[திரு. வி. க.]

## 48

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

தற்காலத் தலைமுறையில் எல்லோரையும் தன்வயப் படுத்துகின்ற பெரிய மனிதர்களுள் ஜவாஹரும் ஒருவர். தற்கால இந்திய வாழ்வுப் பின்னணியில் அவருடைய தோற்றப் பொலிவு உயிர் ஒளிபோல் அசைந்து குலுங்கிச் சுடர்விடுகிறது. இந்நாட்டு இளைஞர்களின் மனத்தை அவர் கவர்ந்திருப்பதின் இரகசியம் இதுவே.

அவர் காந்திஜீயின் பேரன்பிற்குரியவரானார். ஆனால் காந்திஜீ யாருக்கும் எளிதில் விட்டுக் கொடுக்காதவர். ஏனைய எல்லாவற்றையும் காட்டிலும் இலட்சியத்தையும், அதற்காகத் தியாகம் செய்வதையும் மகாத்மாஜீ பெரிதும் மதிக்கிறவராதலால், ஜவாஹரோடு இணங்கிச் செல்வதில் களிப் பெய்துகிறார்.

ஜவாஹர் நிரம்பத் துடுக்கானவர் போலக் காணப் படுகிறார். இளம்பருவத்தில் உண்மையாகவே அப்படி இருந்தார். துடுக்காக இப்பொழுது தோன்றுவது வெறும் வழக்கம் மாத்திரமா அல்லவா என்பது என்னால் நிச்சய

மாகச் சொல்ல முடியாது. பெரிய பொதுக் கூட்டங்களில், எங்காவது ஒரு மூலையில் ஜனங்கள் இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தால், ஜவாஹர்லால் உடனே மேடையிலிருந்து கீழே குதித்து அங்கு சென்று ஜனங்களைத் தாக்குவார். மிகக் கட்டுப்பாட்டை மீறியவர்களைக் கண்டிப்பதற்குச் சிறிது இடங்கிடைத்தாலும் உடனே எழுந்து விடுவார்.

சிலசமயம் பெருங் கோபாவேசத்தில் குதிக்க ஆரம்பித்து விடுவார். அடங்க முடியாத கோபம் என்றே தோன்றும்; ஆனால் அது ஒரு வழக்கமே தவிர வேறொன்றுமில்லை. அடுத்த கொடியில் கவர்ச்சிகரமாகச் சிரிப்பார்; அல்லது மனம் விட்டு மன்னிப்புக் கேட்பார்.

ஜவாஹர்லால் மிகவும் கவர்ச்சிகரமானவர்; பெரிதும் பிரியப்படத்தக்கவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத் தன்மையும், உயர் நோக்கங்களின் மீது உண்மையான பற்றும் அவரை அணுகிய அத்தனை பேரையும் அவரிடம் மயங்கச் செய்கின்றன. அவரிடம் ஒளிவு மறைவு என்பதே கிடையாது. சில கொள்கைகளுக்காகப் பாடுபடுகிறார். விஷயங்களை வெட்டெனச் சொல்வாரே தவிர தனக்காகச் சொல்ல அவர் தயாராயில்லை. கொள்கைகளைத் தவிர்த்து அவர் விரும்புவனவும் வெறுப்பனவும், அநேகமாக, வேறு ஒன்றும் இராது.

இங்கிலாந்தில் வளர்ந்தார் ஆங்கில முறைப்படி நெடுநாள் வாழ்க்கை நடத்தினார். ஆனால் தன் நாட்டையும் தன்னுடைய நாட்டு மக்களையும் அளவு கடந்து நேசிக்கிறார்.

சென்ற ஐந்து ஆண்டுகளில் போல வேறு எப்பொழுதும் ஜவாஹர்லாலின் இலட்சியம் கடும் சோதனைக்குள்ளானதில்லை. எல்லாவிதமான ஏகாதிபத்தியங்களையும் அவர் எதிர்க்கிறார் மனித ஜாதியின் சுதந்திரத்தைத் தமது இலட்சியமாகக் கொண்டிருக்கிறார் ஜனநாயக ஸ்பெயினுக்காக அவருடைய இதயம் பரிவு கூர்ந்தது; சியாங்கேஷேக் ஜப்பானோடு நடத்திய வீரப் போராட்டத்தின் போது

ஜவாஹரின் மனம் சியாங் பக்கம் துணை நின்றது. ரஷ்யாவில் பொது மக்களின் ஆட்சி தோன்றியிருப்பதைக் கண்டு வியக்கிறார். ஆனால் கம்யூனிஸ்ட்கள் சொல்வதெல்லாம் சரியென்று ஒப்புக் கொள்ளவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு சமாதானத்திற்கு வருவதை அடிக்கடி அவர் எதிர்த்திருக்கிறார். கடந்த இருபத்தைந்து வருஷங்களாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு சமாதானத்திற்கு வருவது பற்றி அவர் கொண்ட கருத்துக்கள் சரியானவையல்ல என்று சரித்திரம் நிரூபிக்கலாம். மனித வர்க்கத்தின் சுதந்திரத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் அதை விடாது வற்புறுத்துவதே பொதுஜனவியக்கங்களின் அடிப்படைத் தூண்டுதலாக இருக்குமானால், ஜவாஹர்லால் அதற்காகவே பாடுபட்டு வந்திருக்கிறார். எப்பொழுதும் முன்னணியிலிருந்திருக்கிறார்.

[கே. எம். முன்ஷி]

## 49

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

நகைப்புத்தான் ஒருவனுக்குப் பூரணமான மனிதத் தன்மையைக் கொடுப்பது. நகைக்க அறியாதவன் அரை மனிதனாகத்தான் கருதப்படுவான். தனி மனிதர்களைப் போலவே, சில தேசத்தவர்களின் பண்பாட்டின் இயல்பும் இந் நகைச்சுவையால் தெரியத்தகும். உதாரணமாக ஐரிஷ் மக்களின் நகைச்சுவை ஒரு தனி வகையைச் சார்ந்தது. அம்மக்களின் பண்பாட்டினை நன்றாக உணர்த்துவது. நமது நாட்டிலும் இவர்களைப் போன்ற இனத்தவர்கள் உள்ளமை நன்கு அறியப்பட்டதே.

கண்ணிற்கும் காதிற்கும் புலப்படுவனவற்றை ஆதாரமாகக் கொண்டே நகை முதலிய சுவை தோன்றும் என்று பொதுவாக நினைக்கலாம். இது உண்மையே. ஆனால், கண், செவி என்ற இரண்டிற்கும் அடிப்படையாக இருக்

கிற மனத்தின் நிலையும் நகைச் சுவைக்கு இன்றியமை யாதது. உணர்வுடைய மாந்தர்க்கல்லது நகை முதலிய சுவையின் நயம் தெரிய முடியாது என்று தொல்காப்பி யரும் மனநிலையின் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். மிகவும் எளிதான சில விஷயங்களால் இவர் சொல்வதன் உண்மை விளங்கும்.

முதலாவதாக, எல்லாராலும் நன்றாகச் சிரிக்க முடி யாது. இதை உங்கள் அனுபவங்கொண்டே நீங்கள் தெரி யக்கூடும். சிலரது கண்களுக்குமுன் எவ்வளவு வேடிக்கை காட்டினாலும் அவர்களால் சிரிக்க முடிவதில்லை. அவர்க ளுடைய மன அமைப்பில் ஏதோ ஒரு குறைபாடு இருப்ப தால், சிரிப்பதற்கு அவர்கள் மனம் இடங்கொடுப்பதில்லை. இதனால், சிரிப்பதற்கு ஏற்ற மனநிலையொன்று உண்டென் பது விளங்கவில்லையா?

இரண்டாவதாக, தக்க மனநிலையில் மனத்தினாலும் சிரிப்பதுண்டென்று வள்ளுவர் முதலிய ஆசிரியர்கள் குறித் திருக்கிறார்கள்.

"பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்"

என்றும்,

"மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்ப துடைத்து"

என்றும் அவர் கூறுகிறார். சூர்ப்பணகை இராமனை நெருங் கித் தனது காதலை வெளிப்படக்கூறி அரசர்கள் மணந்து கொள்வதற்குரிய வமிசத்தில் தான் பிறந்தவள் என்று தெரிவிக்கிற இடத்தே, இராமன் தன் மனத்துள்ளே சிரித் துக் கொண்டானென்று சொல்லப்படுகிறது.

நகைப்பு நிகழ்வதற்கு ஒரு தக்க மனநிலை வேண் டும் என்றேன். இந்நகைப்பு பொருள் நிரம்பிப் பூர்த்தி யாக வேண்டுமானால் மனத்திலிருந்தெழுந்தே வெளிப்புறப் படவேண்டும் என்பது வள்ளுவர் வாக்கால் அறியலாம். வெளித்தோன்றுவது புன்னகையாயிருப்பினும் பொருள் நிரம்பியிருக்கும் என்பது கம்பன் வாக்கால் அறியலாம்.

இம் மனநிலையில்லாமற் போனால் மனத்திற்கும் நகைப்புச் செயலுக்கும் யாதொரு தொடர்புமில்லாமல் பார்ப்பவர்களுக்கு நகைப்பு உண்டாகும். இதற்குக் கள்ளுண்டவனுடைய நகைப்பை உதாரணமாகக் கூறலாம். மனநிலை தக்கதாயில்லாது துன்பத்தால் நிரம்பியிருக்குமாயின், அப்போது நிகழும் புன்னகை பார்ப்பவர் மனத்தைச் சோகத்தில் ஆழ்த்திவிடும்.

மேற்கூறியவற்றால் நகைப்பு வெளிப்பட நிகழ்வதற்கும், நகைப்பு தன்னகத்தே உண்டாவதற்கும், வெளிப்பட நிகழும் நகைச்சுவையை மிகுவித்தற்கும், குறைத்தற்கும், நகைப்பின் தன்மையையே மாற்றி விடுவதற்கும் மனநிலையே காரணமாகும் என்பது விளங்கும். எனவே, மனநிலையும் நகைச்சுவைக்கு ஒரு முக்கிய காரணமென்பது புலனாகின்றது.

நகைச் சுவையைப் பற்றிப் பல மொழிகளிலும் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களை ஓரிடத்தில் தொகுத்து வைப்பதானால் குறைந்தது ஒரு வண்டிப் பாரமாவது இருக்கும். நமது நாட்டிலேயும் தொல்காப்பியம் நகை முதலிய சுவைகளைப் பற்றிக் கூறியுள்ளது. வடமொழியில் பல நூல்கள் இதைப் பற்றித் தோன்றியுள்ளன. நெடுங்காலமாகப் பற்பல தேசங்களில் பற்பல பேரறிஞர்களும் ஆராய்ச்சி செய்தபோதிலும், நகைப்பு இவ்வளவரது முயற்சியையும் பார்த்து நகைப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் இவ்வனைவரும் நகைப்பு உளநூற்குரிய பொருளெனக் கொண்டு விசாரணை செய்திருக்கிறார்கள். ஆகவே உளவியல்பு அல்லது பண்பாடு பற்றியது நகைச்சுவை என்பது விளங்குகிறதல்லவா?

[பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை]

**50**

**பின்வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக :-**

ஆதிகால முதற்கொண்டு புண்ணிய பூமியான நம்நாடு சமரசத்தைப் போதிக்கும் சாதுக்கள் நிறைந்திருக்கிறது.

பூர்வகாலத்தில் நம் பாரத வர்ஷத்தின்மீது அயல் நாடுகளிலிருந்து அந்நியர் பலர் படையெடுத்து நம்மவரை அடக்க முயன்றனர். ஆயின், அப்படையெழுச்சிகள் என்னவாயின? வந்தவர் எக்கதியடைந்தனர்? தொட்டதையெல்லாம் புனிதமான பொன்னுக்கும் சக்திபெற்ற இரசவாதியைப் போன்று, நம் தேசம் வந்தவர்களுடைய பகைமைக் குணத்தைக் குறைத்து முன்னிருந்தவர்களோடு ஒற்றுமை பாராட்டும்படி செய்கிறது. வந்தவர்களும் நம் நாட்டுச் சமயங்களையே கைக்கொண்டார்கள். அன்றேல், தாம் அவலம்பித்து வந்த சமயத்தை நம்நாட்டிலும் கைக்கொள்ள, அச்சமயமும் ஈசனடியைப்பணிய மார்க்கமாகுமெனப் போற்றப்பட்டு வருகின்றது இறைவனுடைய மக்கள் யாமெல்லோரும் என அறிவுறுத்துவதனாற்றான், பிற நாடுகள் இருக்குமிடம் தெரியாது அழிந்துபோன காலத்தும் இந்நாடு நன்னுடாயிருந்து வருகின்றது. இதனாற்றான் இன்னல்கள் தோன்றினும், இடுக்கண்கள் பல விளையினும், இறைவனொருவனையே நம்பி, இவ்வுலக சுகத்தை விட்டு, இதற்கப்பாலுள்ள சத்திய லோகத்தையே நாடுபவர் அனைவரும் சகோதரர் என நம்பச் செய்கிறது.

இச் 'சகோதரத்துவம்' வெற்று வாய்ப்பேச்சன்று. கல்வி நிறைந்த சீமான்களுள் பலர் இஃது உண்மையே என நம்புகின்றனர். தேசத்திலே முக்கிய சமயங்களுள் சநாதன தருமம், இஸ்லாமியக் கொள்கை ஆகிய இரண்டையும் சமரஸப்படுத்தி, இரண்டினும் கூறப்பட்ட தெய்வங்கள் ஒன்றென நம்பின பெரியோர்களுமுண்டு இந்துப் பெற்றோருக்குப் பிறந்து இஸ்லாம் கொள்கையைத் தழுவினவர்களும், இஸ்லாமிய குடும்பத்திற் பிறந்து இராம நாம ஸ்மரணை செய்தவர்களுமுண்டு. மகான் நாணக்கு, பக்தர் கபீர் தாஸர், பகவான் கௌரங்கர், ஞானி மஸ்தான் சாகிபு அவர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கினரேயன்றித் தனியாகக் கடவுள் தமக்கெனக் குறித்துக் கொள்ளவில்லை. இப்பெரியோர்களை இரு சமயத்தினரும் ஒரேவிதமாகவே கொண்டாடுகின்றனர். தம்மைப் போலவே பிறரும் சத்தியசந்தர்,

தருமத்தைக் கடைப்பிடிப்பவர் என நம்மவர் நம்புவதனு லேயே இப்படி இனிமையுடன் இருவரும் ஒருமித்து, ஒரு வர் மற்ெருருவருடைய சமயக்கொள்கைகளை மதித்து நடக்க, நம் நாட்டில் இயலுகின்றது

ஆயின், இச்சமரஸத்தையும் சமய நல்வாழ்க்கையை யும் உண்மையோவெனப் பரீட்சிப்பது போல், சில சந் தர்ப்பங்கள் நிகழ்கின்றன.

இரு சமயத்திலுமுள்ள அறிஞர்கள் இவ்வித முரட்டுத் தனமும் மூடத்தனமுமான செய்கைகளைக் கண்டித்து, சகோதரத்துவம் பாராட்டியும், ஒற்றுமை உண்டாகும்படி உழைத்தும் வருகின்றனர்.

நம் நாட்டிலுள்ள சமயங்களைத் தழுவுபவர்களுக்குள் சிறிய அளவிலேனும் சச்சரவு ஏற்படக் காரணம் என்ன? பிற நெறியைக் கொள்பவர்களுடைய உண்மை மன நிலையை அறியாமையேயாம். எவ்வுயிரையும் படைத்த ஈச ஞர் தமது அம்சத்தில் ஒரு சிறிதேனும் நம்முள்ளத்தி லடங்கியிருக்கிறூர். அழிவற்றதும், ஆனந்தம் நிறைந்ததும், கருணை பொருந்தியதும், எல்லாவுயிரையும் தனதாகவே பாவிக்கும் இயற்கை உள்ளதுமான ஈசுவராம்சம் நாமே என்பதை மறந்து, நம்மைக் கேவலம் உண்ணவும் உறங்க வும ஏற்பட்டுள்ள பிராணிகளாக்கி, பிறரிடம் குற்றமும் குறையும் கண்டு, அதனுல் பல தொல்லைகளுக்குட்படுகி ரேும். இதனுல் நாமறிவது யாது? நம் நாட்டிற் பிறந்த அன்று—உலகத்திற் பிறந்த மானிடர் அனைவரும் தாம் மேற்கொள்ளும் சமயத்தை உண்மையுடன் அறிந்து, அதில் கூறியுள்ள கொள்கைகளை அவலம்பிக்க முயற்சி செய்ய வேண்டும். பிறகு பிற மதங்களின் உண்மையை அறிய வேண்டும். அப்படிச் செய்யாவிடின், பளிங்கு மாளிகை யில் வசிப்போர் தாம் இருக்குமிடம் மறந்து, பிறர்மீது வம்புக்காகக் கல்லெறிவது போல முடியுமேயன்றி, வேறன்று.

[விபுலானந்த அடிகள்]

# கட்டுரைத் தலைப்புக்கள்

1. பத்திரிகைகள் நாட்டுக்குச் செய்யும் பணி.
2. இன்றைய தமிழ் இலக்கியங்கள்.
3. மூடரோடு அறிவாளி சேர்ந்தால் அவனுக்கு ஆபத்து.
4. நான் பிறந்த ஊர்.
5. தேசீயக் கல்வித் திட்டம்.
6. புகையிரத நிலையக் காட்சி.
7. அரசாங்க விவசாயப் பண்ணை.
8. ஓய்வு நேரப் பொழுதுபோக்கு.
9. நூதனசாலை.
10. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
11. சரித்திரங் கற்பதால் உண்டாகும் பயன்.
12. பூஞ்சோலை.
13. விடுமுறைக் காலம்.
14 தமிழர் பண்பாடு.
15. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.
16. இருபதாம் நூற்றாண்டு உரைநடை ஆசிரியர் ஒருவர்.
17. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
18. இலங்கையின் மலைப்பிரதேசக் காட்சிகள்.
19. இலங்கையின் பொருளாதாரம்.
20. தமிழ் மொழியில் விஞ்ஞானக் கல்வி.
21. விளையாட்டுப் போட்டிகள்.
22. இயற்கைக் காட்சிகள்.
23. உமது சமூகத்துக்கு நீர் செய்ய விரும்பும் சேவைகள்.
24. நீர் விரும்பும் தொழில்.
25. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
26. விஞ்ஞானத்தால் மக்கள் வாழ்வில் உண்டாகும் மாற்றங்கள்.
27. உமது கிராமத்தில் நீர் செய்ய விரும்பும் திருத்தங்கள்.
28. நூல் நிலையங்கள்.
29. பறவைகள்.
30. நீர் விரும்பும் ஒரு பெரியார்.
31. செய்வன திருந்தச்செய்

32. மழைநாள்.
33 தீவிபத்து.
34. கடற்கரைக் காட்சி.
35. நீர்வீழ்ச்சி.
36. தைப்பொங்கல்
37. தீபாவளி.
38 நீர் செய்த சுற்றுப்பிரயாணம்.
39. நெசவுத் தொழில்.
40 சமயக்கல்வி.
41. தந்தை தாய் பேண்.
42. வாய்மை.
43 மதுவிலக்கு.
44. சுகவாழ்வு
45. சுப்பிரமணிய பாரதியார்.
46. ஒற்றுமையின் உயர்வு.
47. வானொலி.
48. உழவுத் தொழில்.
49. நான் கல்வி அமைச்சர் ஆனால்.
50. சனசமூக நிலையம்.
51. நான் விரும்பும் தொழில்.
52. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
53. புதினப் பத்திரிகை.
54. நாயின் சுயசரிதை.
55. ஒரு பெரியார்.
56. மின்சாரம் தரும் பயன்கள்.
57. வறுமை.
58 நான் படித்துச் சுவைத்த ஒரு நூல்.
59. போரின் விளைவுகள்.
60. ஒழுக்கம்.
61. கிராமச் சீர்திருத்தம்.
62. காந்தி அடிகள்.
63. ஆறுமுகநாவலர்.
64. புகைவண்டிப் பிரயாணம்.
65. எங்கள் நாடு.

66. ஆகாய விமானம்.
67. நான் கண்ட கனவு.
68. நீர் கண்ட தெரு விபத்து.
69. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
70. உண்மையின் உயர்வு.
71. ஔவையார்.
72. உமது கிராமச் சந்தை.
73. நாற்காலியின் சுயசரிதை.
74. உமது பேனாவின் சுயசரிதை.
75. நீர் விரும்பும் விளையாட்டு.
76. எனது பிறந்த நாட் கொண்டாட்டம்.
77. தாமரைக் குளம்.
78. காலைக் காட்சி.
79. மாலைக் காட்சி.
80. ஈழத்துப் புலவர் ஒருவர்.
81. தேக சுத்தம்.
82. நான் ஓர் இலட்சாதிபதியானால்.
83. நான் சிறுவனாயிருந்தபோது.
84. மணிக்கூட்டின் சுயசரிதை
85. பாம்பாட்டி.
86. பேசும் படம்.
87. எனது நாளாந்த வேலை.
88. களியாட்டு விழா.
89. வன் விலங்குகள்.
90. இக்காலத்துப் பிரயாண வசதிகள்.
91. நான் பார்த்த விவாகம்.
92. தமிழும் அரசகரும மொழியானால்.
93. கல்லூரியில் நடந்த ஒரு விழா.
94. தமிழ்.
95. ஐக்கிய நாடுகளின் சங்கம்.
96. திரிகோணமலை.
97. இசையின்பம்.
98. கூட்டுறவுச் சங்கம்.
99. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

100. பின்வருவனவற்றில் ஒன்றினைத் தெரிந்தெடுக்க:-

(i) எதிராக வரும் விடுமுறைக் காலத்தை எவ்வாறு கழிக்கத் திட்டமிட்டுள்ளீர் என்று கூறி அயலூரிலுள்ள உமது நண்பனையும் இதில் பங்கு பற்றுமாறு அன்னாருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(ii) உமது மனதைக் கவர்ந்த ஒரு கிராமத்தை அல்லது நகரத்தை விபரிக்க. அவ்வாறு கவர்ந்தமைக்கு உரிய காரணங்களைத் தருக.

(iii) "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்ற தலைப்பில் ஒரு கதை எழுதுக.

(iv) நீர் உமது பாடசாலையில் உள்ள சங்கங்கள் ஒன்றின் காரியதரிசியெனப் பாவனை செய்து, வருடாந்தக் கூட்டத்தில் வாசிக்கக்கூடிய அறிக்கையைத் தயாரிக்க.

(v) எழுதுகோலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் படிப்படியாக எழுதுக.

(vi) "சீதன வழக்கத்தை ஒழிக்கக்கூடாது." இதற்குச் சார்பாகவும் எதிராகவுமுள்ள உமது கருத்துக்களைத் தருக.

101. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிந்தெடுக்க:-

(i) நீர் பார்த்த ஒரு திருமண வைபவத்தைப் பற்றி விபரிக்க.

(ii) பின்வருவனவற்றுள் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதை எழுதுக.

(a) ஒரு நரி. (b) ஒரு பையன்.

(c) தண்ணீருள்ள ஒரு பானை.

(iii) உம்மை ஒரு கமக்காரனாகப் பாவனை செய்து தைப்பொங்கலை எவ்வாறு கொண்டாடுவீர் என்பதைக் கூறுக.

(iv) பல வருடங்களுக்கு முன்னர் உம்மோடு படித்த நண்பன் ஒருவனுக்கு அவன் விலகியதிலிருந்து பாடசாலையில் ஏற்பட்ட மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் விபரித்து ஒரு கடிதம் எழுதுக.

(v) தோட்டஞ் செய்தல், கோழி வளர்த்தல் — இவற்றுள் எதனை விரும்புகிறீர்? ஏன் விரும்புகிறீர்? என எழுதுக.

(vi) பொதுவாக நகர மக்கள் கிராமத்துக்கும் கிராம மக்கள் நகரத்துக்கும் போக விரும்பும் காரணங்கள் யாவை?

102. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிக:-

(அ) வைத்தியசாலை ஒன்றில் நீர் சிகிச்சை பெற்று வருகிறீர் எனக் கற்பனை செய்து உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக. அதில் உமது நோயின் தன்மையைப் பற்றியும் உமக்குக் கிடைத்துவரும் சிகிச்சையைப் பற்றியும் அங்கே உள்ள குறைபாடுகளைப் பற்றியும் விபரமாகக் குறிப்பிடுக.

(ஆ) பிராணிகளிடையே காணப்படும் தாயன்பு பற்றி ஒரு சிறு கதை எழுதுக.

(இ) சனசமூக நிலையத்தின் செயலாளர் என்ற முறையில் நீர் சென்ற ஆண்டில் நிறைவேற்றிய திட்டங்களைப் பற்றியும் நிறைவேற்றத் தவறியவற்றைப் பற்றியும் விபரித்து அடுத்த வருடாந்தக் கூட்டத்திலே சமர்ப்பிக்கக்கூடிய அறிக்கை ஒன்றை எழுதுக.

(ஈ) கலைக் கல்வியையா விஞ்ஞானக் கல்வியையா நீர் விரும்புகிறீர்? காரணங் காட்டி உமது கருத்தைத் தருக.

(உ) சீமேந்து, கடதாசி என்ற பொருள்களுள் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுக.

(ஊ) சமீபத்தில் நீர் பார்த்த சினிமாப் படத்தில் அல்லது நாடகத்தில் உம்மைக் கவர்ந்த பாத்திரங்களைப் பற்றி ஆராய்ந்து பத்திரிகைக்கு ஒரு மதிப்புரை எழுதுக.

103. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:-

(அ) உமது கிராமத்து அறுவடைக் காட்சிகளை விபரித்து எழுதுக.

(ஆ) பின்வருவனவற்றுள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறு கதை எழுதுக:

(i) நன்றியுள்ள நாய்.

(ii) ஊரைக் காத்த சிறுவன்.

(iii) தந்திரம் உள்ள காகம்.

(இ) ஒரு சுருட்டின் சுயசரிதை.

(ஈ) வாழ்க்கையில் நீர் செய்ய விரும்பும் தொழில் யாது? காரணங் கூறி விபரித்து எழுதுக.

(உ) உமது ஊரிலுள்ள கைத்தொழில் ஒன்றைப் பற்றி விபரித்து எழுதுக.

(ஊ) மூடக் கொள்கைகள் என்ற பொருள் பற்றிக் கட்டுரை எழுதுக.

இந்நூல்
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

விலை ரூபா 2-00

நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.